Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16+24 | விலை 40 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :314 புரட்டாதி 24ஆம் நாள் சனிக்கிழமை 10 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொரோனா தொற்றாளர்கள்

- ராஜகிரிய வெலிக்கடவத்தையில் ஆடைத்தொழிற்சாலையில் பணி புரியும் பெண்ணொருவருக்கு கொரோனா.
- கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்கு விப்பு வலயத்தில் ஆடைத் தொழிற் சாலையில் பணிபுரியும் 38 வயது பெண்ணுக்கு கொரோனா. 3 தொழிற்சாலைகள் மூடப்பட்டன.
- ஹொரண மருத்துவமனை யின் தாதியர்கள் இருவருக்கு கொரோனா.
- சிலாபத்தைச் சேர்ந்த 17 வயதான உயர் தர வகுப்பு மாணவனுக்கு கொரோனா.
- குருநாகல் போதனா மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வந்த 78 வயது பெண்ணுக்கு கொரோனா.
- கொழும்பு புத்தகக் கண்காட் சிக்குச் சென்ற சிலாபம் வாசிக்கு கொரோனா.
- கொழும்பு லேடி ரிஜ்வே மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட 10 மாதக் குழந்தைக்கு கொரோனா.
- முன்னேஸ்வரம் ஆலயத்துக்கு கடந்த 3ஆம் திகதி சென்ற நுவ ரெலியாவைச் சேர்ந்தவருக்கு கொரோனா.
- கதிர்காமத்துக்குச் சுற்றுலா சென்ற கம்பளை வாசிக்கு கொரோனா.
- நீர்கொழும்பு ஆவேமரியா மாவத் தையிலுள்ள தனியார் மருத்துவம னைக்கு சிகிச்சைக்கு வந்தவருக்கு கொரோனா. மருத்துவமனை மூடப் பட்டது.

# சமூகத் தொற்று!

## இராணுவத் தளபதி



# இல்லவே இல்லை!

## சுகாதார அமைச்சர்



கொழும்பு, ஒக்ரோபர் 10

இலங்கையில் மூன்றாவது அலையாக உருவெடுத்துள்ள கொரோனா சமூகத் தொற்றாக மாறியுள்ளது என இராணுவத் தளபதியும், கொரோனா தடுப்புச் செயலணியின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். ஆனாலும் இலங்கையில் இன்னமும் சமூகத் தொற்று ஏற்பட வில்லை என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி கூறியுள்ளார். 14 >

## கோண்டாவிலைச் சேர்ந்தவருக்கு மீண்டும் கொரோனாத் தொற்று

யாழ்ப்பாணம், ஒக். 10

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பி கொரோனாத்தொற் றுக்கான மருத்துவ சிகிச்சை யைப் பெற்று வீடு திரும்பியவருக்கு 14 >

## அனலைதீவு, காரைநகரின் சில பகுதிகள் முடக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 10

இந்திய மீனவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி, மஞ்சள் கடத்தி வந்தவர் 14 >

## தனிமைப்படுத்தலில் இருந்தவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 10

தனிமைப்படுத்தலில் இருந்த 70 வயது டைய ஒரு வர் நேற்று 14 >

## ரிஷாத்தின் சகோதரரை மீண்டும் கைதுசெய்க

*100 எம்.பிக்கள் கையெழுத்து*

கொழும்பு, ஒக். 10

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர் புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீ 14 >

## மன்னாரில் போக்குவரத்து வழமைக்குத் திரும்புகிறது

மன்னார், ஒக். 10

மன்னாரில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த போக்குவரத்து சேவைகள் வழமைக்குத் திரும்புகின்றன என 14 >

## ஊரடங்கு இல்லை

கொழும்பு, ஒக். 10

வார இறுதி நாள்களான இன்றும், நாளையும் ஊரடங்கை 14 >

## யாழ். பல்கலை மோதல்

## கலைப்பீட மாணவர்கள் 21 பேருக்குத் தடை

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவங்களுடன் தொடர்பு 14 >

## விசாரணைக்கு தனிநபர் ஆயம்

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணம் பல்கலைக்க ழகத்தில் நேற்றுமுன்தினம் 14 >

## விரிவுரையாளர்கள் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவங்களின் போது, பல்கலைக்கழகத் 14 >

## சீனக் குழுவினருக்கான பி.சி.ஆர். பரிசோதனை குறித்து தெரியாது

*மருத்துவர் சுதத் சமரவீர*



கொழும்பு, ஒக். 10

சீனத் தூதுக்குழுவுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டனவா என்பது குறித்து எனக்குத் தெரியாது. அதனை விமான நிலைய நிர்வாகக் குழுவினரே நிர்வகிக்கின்றனர். அவர்களிடமே அதனை உறுதிப்படுத்த வேண்டும் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் 14 >

### சர்வதேச மன்றங்களில்

## இலங்கையை சீனா விட்டுக் கொடுக்காது

*சீனத் தூதுக் குழு உறுதியளிப்பு*



கொழும்பு, ஒக். 10

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச 10 >

## கோத்தாபய ஊடாக அமெரிக்காவுக்கு பதிலடி

*சீனத் தூதுக்குழு நகர்வு*

கொழும்பு, ஒக். 10

இலங்கை - சீனா இடையிலான உறவு தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் 10 >

உலக உளநல நாள் 2020

உதவி வரமாகலாம்

காயங்களைச் சீர் செய்வோம்
உளம் காத்து, நலம் வளர்ப்போம்
உதவிகள் பெறுவோம் - உளத் தயக்கங்கள் களைவோம்
உதவி வரமாகலாம்

சாந்திகம் உளவளத்துணை நிலையம்

உளவளத்துணைசார் உதவிகளுக்கு
யாழ்ப்பாணம்: 076 766 5151, 076 766 8080, 076 766 8585
கிளிநொச்சி : 076 766 5252
முல்லைத்தீவு: 076 766 5353

# முல்லை. மருத்துவமனைகளில் பரிசோதனைகள் அதிகரிப்பு

முல்லைத்தீவு, ஒக். 10

**கொரோனாத் தொற்றை இனங்காண்பதற்காக நோயாளர்களின் மாதிரிகளைச் சேகரித்தல், பரிசோதனைகளை அதிகரித்தல், மருத்துவமனைகளில் தொற்று பரிசோதனை செய்ய குழு உருவாக்குதல் உள்ளிட்ட பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளோம் என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.காண்டீபன் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொரோனாத் தொற்று தொடர்பிலான விழிப்புணர்வுக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவட்ட பொது மருத்துவமனைகளிலும் ஏனைய ஆதார மருத்துவமனைகளிலும் கட்டாயமாக நோயாளர்களின் மாதிரிகளை சேகரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கொண்டு மருத்துவமனைகளில் கொரோனாத் தொற்று பரிசோதனைகளுக்காக குழு அமைக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதில் முக்கியமாக தொற்றுநோய்க்குரிய பொறுப்பான தாதிய அலுவலர் ஒருவரையும், பொதுசுகாதாரப் பரிசோதகர்களையும் இணைத்து மருத்துவமனைகளில் குழு அமைக்கப்படும் என்று மேலும் தெரிவித்தார். (கு-246)

# மன்னார் வந்தவருக்கு கொரோனா: 35 பேர் சுயதனிமைப்படுத்தலில்

## மன்னார் ஆயர் இல்லமும் தப்பவில்லை

கொழும்பு, ஒக். 10

கொழும்பு வென்னப்புவ பகுதியிலிருந்து மன்னார் பட்டித்தோட்டம் பகுதியில் கட்டப் பணிக்கு வந்தவருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் அவருடன் பணிபுரிந்த 35 பேர் சுயதனிமைப்படுத்தலில் உள்ளனர் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டி.வினோதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதனையடுத்து மன்னார் ஆயர் இல்லத்துக்கான உட்செல்லும் அனுமதி மற்றும் வெளிச் செல்லும் அனுமதி இடைநிறுத்தப்பட்டுள்ளன. தொற்றாளர் ஆயர் இல்லத்திலும் கட்ட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்தமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மருத்துவர் மேலும் தெரிவித்ததாவது அந்தத் தொழிலாளி காய்ச்சல் மற்றும் இருமல் காரணமாக கடந்த புதன்கிழமை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அவருக்கு எழுந்தமானமாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனால் அவருடன் கட்ட நிர்மாணப் பணியில் ஈடுபட்டு தங்கியிருந்த 32 பேரும் அவருடன் வேலைசெய்ய வந்த மேலும் 3 பேரும் உடனடியாக அந்தந்த பகுதிகளிலேயே சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் மன்னார் மாவட்டத்தில் எங்கெங்கு சென்றனர் என்பது தொடர்பான தகவல் சேகரிப்பு இடம்பெறுகின்றன. அவர்கள் சென்றனர் என்று கூறப்படும் மன்னார் நகரப் பகுதியில் சில வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. மன்னார் மீன் விற்பனை நிலையமும் மூட வேண்டிய தேவை உள்ளது. இவர்களுடன் தொடர்புபட்டவர்கள் தமது வீடுகளிலே சுய தனிமைப் படுத்தப்பட உள்ளனர்.

கம்பஹா சிலாபம் மற்றும் மாரவில பகுதிகளிலிருந்து மன்னார் மாவட்டத்துக்கு வேலைசெய்ய வந்து தங்கியிருக்கக்கூடிய அனைவரையும் அருகில் இருக்கின்ற பொலிஸ் நிலையங்களில் தங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றோம். பொதுமக்கள் பதற்றம் அடைய வேண்டிய அவசியம் இல்லை. எனினும், முகக்கவசம் அணிந்து தனியாள் இடைவெளியை பின்பற்ற வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (கு)

# வீடு திருத்த விண்ணப்பித்தோரிடம் பணம் அபகரிக்கும் நாசகார செயல்

## தென்மராட்சி மக்களுக்கு செயலகம் எச்சரிக்கை

சாவகச்சேரி, ஒக். 10

வீடு திருத்தத்துக்கு உதவி கோரி விண்ணப்பித்தவர்களிடம் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் ஏமாற்றிப் பணம் அபகரிக்கும் சம்பவங்கள் தென்மராட்சி பகுதியில் இடம்பெறுகின்றன. அவ்வாறு இனி அழைப்பு வந்தால் தங்களிடம் முறையிடுங்கள். எந்தக் காரணம்கொண்டும் பணம் வழங்காதீர்கள் என்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் மக்களைக் கேட்டுக்கொள்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலகங்களால் வீடு திருத்தத்துக்கு நிதி தேவைப்படுவோரின் விவரங்கள் கோரப்பட்டன. பலர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களின் அலைபேசிக்கு அழைப்பு எடுக்கும் ஒருவர் "தான் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கயனின் அலுவலகத்திலிருந்து கதைக்கின்றேன். வீடு திருத்த வேலைக்கு விண்ணப்பித்த தங்களின் விண்ணப்பம் பரிசீலனையில் உள்ளது. தங்களுடைய வீடு திருத்தத்துக்கு நிதி ஒதுக்குவதாயின் அருகில் உள்ள கணினி வசதியுடைய அஞ்சல் அலுவலகத்தில் குறித்த இலக்கத்துக்கு 15 ஆயிரம் ரூபா அனுப்பிவிடுங்கள்" என்று கூறப்பட்டுள்ளது. இதனை நம்பிய பலர் அஞ்சல் அலுவலகங்களில் பணத்தைச் செலுத்திவிட்டு குறித்த அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டபோது அலைபேசி செயலிழந்துள்ள நிலையில் உள்ளது. இதன்பின்னரே தாம் ஏமாந்துள்ளோம் என்று பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

செலுத்திய பணத்தை நிறுத்துவதற்கு அஞ்சல் அலுவலகத்துக்குச் சென்றபோதும், வைப்பிலிட்டிருந்த பணம் வங்கிக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டமையும் தெரியவந்துள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான முறைப்பாடுகள் பிரதேச செயலகத்துக்கு கிடைக்கின்றன.

இவ்வாறான தகவல் கிடைத்தால் உடனடியாக பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினர் மக்களைக் கேட்டுக்கொள்கின்றனர்.

இதேவேளை, வீடு திருத்த வேலைக்கு பிரதேச செயலகத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதனின் அலுவலகத்திலும் மட்டுமே விண்ணப்பங்களை கொடுத்திருந்தோம் என்று கூறும் பாதிக்கப்பட்டவர்கள், தமது அலைபேசி இலக்கங்கள் ஏமாற்றுப் பேர்வழியிடம் சென்றமை எவ்வாறு என்றும் கேள்வியெழுப்புகின்றனர். (கு-9)

# ரயிலில் மோதுண்டு இறந்தாரா கொல்லப்பட்டு வீசப்பட்டாரா?

## மன்னாரில் நீடிக்கின்றது மர்மம்

மன்னார், ஒக். 10

மன்னார் சௌத்பார் பகுதியில் ரயிலில் மோதுண்டு உயிரிழந்தார் என்று கூறப்படும் நபரின் இறப்பில் சந்தேகம் நிலவுகின்றது. அவர் வசித்த வீட்டில் குருதிச் சிதறல்கள் காணப்படுகின்றமையால் அவர் கொல்லப்பட்டாரா என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் எமில் நகர் பகுதியைச் சேர்ந்த ரொமியன் பொல்டஸ் சொய்சா (வயது 38) என்பவரே ரயிலில் மோதுண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

மன்னார் சௌத்பார் ரயில் நிலையத்துக்கு சற்று தொலைவில், கொழும்பிலிருந்து தலைமன்னார் நோக்கி பயணித்த ரயிலில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை ரயிலில் மோதுண்டு அவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். மன்னார் பொது மருத்துவமனையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டது.

எனினும், அவர் தனிமையில் வசிக்கும் வீட்டில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தக்கூடிய தடயங்களை மன்னார் தடயவியல் பொலிஸார் நேற்று இனங்கண்டுள்ளனர்.

வழமைபோன்று குறித்த நபரை கடற்றொழிலுக்கு அழைத்துச்செல்வதற்காக சக தொழிலாளர்கள் அவரின் வீட்டுக்கு நேற்றுக் காலை சென்றுள்ளனர். அங்கு அவரைக் காணவில்லை. ஆனால், வீட்டில் அவர் உறங்கும் இடத்தில் குருதிச் சிதறல்கள் காணப்பட்டன.

இதுபற்றி மன்னார் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டனர்.

அந்தநபர் கொலை செய்யப்பட்ட பின்னர் ரயில் வரும்போது தண்டவாளத்தில் வீசப்பட்டுள்ளாரா? அல்லது தற்கொலையா என்று பல்வேறு கோணங்களில் விசாரணைகள் தொடர்கின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (கு-56)

# திருடப்பட்ட நகைகளுடன் வவுனியாவில் 2பேர் கைது

வவுனியா,ஒக். 10

வவுனியா - மன்னார் வீதியில் கடந்த வாரம் திருடப்பட்ட தங்க நகைகள் செட்டிகுளம் பகுதியில் நேற்று மீட்கப்பட்டுள்ளன என்றும் சந்தேகத்தில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என்று கிடைத்த முறைப்பாட்டுக்கமைய நடத்திய விசாரணையில் அவை மீட்கப்பட்டன. செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 23 வயதுடையவர்களே கைதுசெய்யப்பட்டு அவர்கள் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் மேலும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (கு-110)

# கிளிநொச்சி சென்றது பயணம்



'வேலையிலிருந்து வீடு நோக்கி' என்ற சமூக விழிப்புணர்ச்சிக்கான மிதிவண்டிப் பயணம் யாழ்ப்பாண நகரிலிருந்து கிளிநொச்சி நகர்வரை நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை முன்றலிலுள்ள காந்தி சிலைக்கு மலர் வணக்கம் செலுத்தி பயணம் ஆரம்பிக்கப்பட்டது. நிகழ்வில் மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவமனை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கொரோனா பரவுவதைத் தடுத்தல், போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல், வீதி விபத்துக்களைத் தடுத்தல், சூழல் மாசடைதலைத் தடுத்தல் மற்றும் உடல் ஆரோக்கியத்தைப் பேணல் ஆகியனவற்றைக் கருத்தில் கொண்டு பயணம் நடைபெற்றது. (கு-159)

# மினுவாங்கொடயிலிருந்து வந்தீர்களா? சுகாதார அதிகாரிக்கு அறிவியுங்கள்!

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக். 10**



**மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையிலிருந்து வந்தவர்கள், வடக்கு மாகாணத்தின் எந்தப் பகுதியில் தங்கியிருந்தாலும் உடனடியாக அருகிலிருக்கும் சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் தெரிவித்துள்ளார்.**

இந்த விடயம் தொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது:-

கம்பஹா, மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் கொத்தணி, நாடு முழுவதும் பரவியிருக்கக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டு இருக்கும் நிலையில், தொற்றாளர்களுடன் தொடர்புடைய பலர் தங்களுடைய தகவல்களை மறைப்பதால் அவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பின் மிகக் கடுமையான சவாலை சமூகம் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இந்த நிலையில் கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்கள், அவர்களோடு தொடர்புடையவர்கள் எவரேனும் வடக்கு மாகாணத்தின் எந்தப் பிரதேசத்தில் தங்கியிருந்தாலும் உடனடியாக சுகாதார மருத்துவ அதிகாரிக்கு அறிவிக்குமாறும், தொடர்ந்து சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் வடக்கு மாகாண மக்களுக்கு ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார் என உள்ளது. (ற-இ)

## ஆள்பதிவுத் திணைக்கள செயற்பாடுகள் நிறுத்தம்

கொழும்பு, ஒக். 10

ஆள்பதிவுத் திணைக்களத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை அடுத்து மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## திருடப்பட்ட ஆடுகள் யாழ். பொலிஸ் நிலையத்தில்

கொடிகாமம், ஒக். 10

மானிப்பாய் மற்றும் நாவாந்துறை ஆகிய பகுதிகளில் வீடுகளில் திருடப்பட்ட ஆடுகள் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கட்டப்பட்டுள்ளன.

ஆட்டின் உரிமையாளர்கள் ஆதாரங்களைக்காட்டி பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இரு மாதங்களுக்கு முன்னரும் குறித்த பகுதிகளில் களவாடப்பட்ட ஆடுகளுடன் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார். ஆடுகளும் மீட்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில், யாழ்ப்பாணம் நீதிமன்ற உத்தரவின் பிரிகாரம் 7 ஆடுகள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் உள்ளன. ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் பொலிஸார் அறிவித்துள்ளனர். (த-159)

## பரீட்சார்த்திகள் தகவல்களை இணையத்தில் பதிவிடுக!

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஒக்.10

இந்த ஆண்டு கல்விப் பொதுத்தராதர, உயர்தர மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தங்களது தகவல்களை கல்வி அமைச்சின் இணையப் பக்கத்தில் பதிவிடுமாறு கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இதற்கமைய பரீட்சார்த்திகள் தங்களது தரவுகளை www.info.moe.gov.lk என்ற இணையப் பக்கத்தில் பதிவிட முடியும் என்றும், இணையம் ஊடாக தகவல்களை வழங்க முடியாத பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மத்திய நிலையத்தில் தங்களது தகவல்களை வழங்க முடியும் என்றும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று பரவிவரும் நிலையில், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கமைய இவ்வாறு தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ற-இ)

## குழந்தை சிகிச்சையில்; தந்தைக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.10

கொழும்பு ரிட்ஜ்வே ஹார்யா சிறுவர் வைத்தியசாலையில் குழந்தை ஒன்று அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வரும் நிலையில், அந்தக் குழந்தையின் தந்தைக்கு கொரோனா தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சிசுவின் பெற்றோருக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவரது தந்தைக்கு கொரோனாத் தொற்றிருப்பது உறுதியானது. எனினும், குழந்தை மற்றும் தாய்க்கு கொரோனாத் தொற்று ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டியைச் சேர்ந்த இந்தக் குழந்தை கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறது எனவும், அவர்களுடைய பெற்றோர் கொட்டிகாவத்தை பகுதியில் தற்காலிகமாக தங்கியிருக்கின்றனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கு முன்னர் இந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 10 மாத சிசுவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ற-இ)

## சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன் பிடித்தவர்களுக்கு தண்டம்

திருகோணமலை, ஒக்.10

திருகோணமலை கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட ஏழு மீனவர்களுக்கு நேற்று முன்தினம் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் நீதிமன்றம் தண்டம் விதித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கிண்ணியா, தோப்பூர், சல்லி, சாம்பல்தீவு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், 35 தொடக்கம் 45 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் தெரியவருகின்றது.

மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளும், இலங்கை கடற்படையினரும் இணைந்து நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து சுருக்கு வலைகள் கைப்பற்றப்பட்டன என்றும், இதனால் அரசுக்கு 15,270 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது எனவும் மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சின் திருகோணமலைக்கு பொறுப்பான அதிகாரி, நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதையடுத்து இந்த 7 மீனவர்களுக்கும் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் செலுத்துமாறும், அதைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒரு மாதகாலம் சிறைத் தண்டனை வழங்குமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டது.

அடுத்த தவணைக்கு முன்னர் செலுத்துவதாக நீதிமன்றுக்கு அவர்கள் தெரியப்படுத்தினர் அதை அடுத்து, அவர்களை நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டது. (ற-இ)

## ரிஷாத் சகோதரனின் ஆதரவுடன் சஹ்ரான் இந்தியாவுக்கு தப்பினார்

### முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 10

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசீம், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் சகோதரரின் ஆதரவோடு, படகொன்றின் ஊடாக இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளார் என உளவுத்துறை தெரிவித்துள்ளது என்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தற்போது வசித்து வரும் ஜெனரல் சேனநாயக்க, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக இணையக் காணொலி வாயிலாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சாட்சியம் அளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படைத் தளபதியாக பணியாற்றிய காலப்பகுதியில் சஹ்ரான் பற்றித் தெரிந்து கொண்டேன். சஹ்ரான் பற்றிய அதிக விவரங்களைக் கண்டறியும் திறன் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு இருக்கின்றது.



ஆனால் இது குறித்து விசாரணைகளை நடத்திய நிறுவனங்கள், இராணுவப் புலனாய்வு பிரிவின் ஆதரவைப் பெறவில்லை -என்றார். (ற-இ)

## கொரோனா அறிகுறிகள் இருந்தால் அறிவியுங்கள்

கொழும்பு, ஒக். 10

கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது எனச் சந்தேகம் இருந்தால் அது தொடர்பில் அச்சம் கொள்ளாது உடனடியாக சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்குமாறு தொற்றுநோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, சுகாதாரப் பிரிவினரால் பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆலோசனைகள் உரிய முறையில் பின்பற்றப்படாமை காரணமாக நாட்டினுள் மீண்டும் கொரோனாத் தொற்று பரவ ஆரம்பித்துள்ளது என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (ற-இ)

# போரின் இறுதி வாரங்களில் சீனாவிலிருந்த பொன்சேகா!

**கொழும்பு, ஒக்.10**

**இலங்கையில் போர் முடிவுக்குவர இரண்டு வாரங்களுக்கு முன்னர் தான் சீனா சென்றது உண்மையே. அங்கிருந்தபடியே போர் நகர்வுகளை முன்னெடுத்தேன் என்று முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**


நாடாளுமன்றத்தில் நேற்று சர்வதேச உடன்படிக்கைகள் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, போர் முடிவுக்கு வரும் வேளையில் சரத் பொன்சேகா சீனாவிலேயே இருந்தார் என்று தெரிவித்திருந்தார்.

அப்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய சரத் பொன்சேகா, போர் முடிவுக்கு வர இரண்டு வாரங்களே இருந்தபோது கீழ்மட்ட அதிகாரிகளின் பணிகள் மட்டுமே அவசியம் என்ற நிலைப்பாடு இருந்தது என்று கூறினார்.

அப்போது இராணுவத்துக்கு போர்த் தாங்கியொன்று தேவைப்பட்டது. அதைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டதால், அதைப் பெறுவதற்காக நேரடியாகவே சீனாவுக்குச் செல்ல நேரிட்டது என்றும் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

"குறித்த தினத்துக்குள் வராவிட்டால் போர்த் தாங்கிகள் எமக்கு வழங்கப்படாது எனக் கூறினார்கள். அதற்காகவே நான் அங்கு (சீனா) சென்றேன்" என்றார் பொன்சேகா.

"ரணில், மைத்திரி போன்றவர்கள் ஆட்சியில் இருந்திருந்தால் எம்மால் போரை முடிவுக்குக் கொண்டுவந்திருக்க முடியாது. அதை நான் ஏற்கனவே ஏற்றுக் கொண்டுள்ளேன்" என்றும் அவர் தெரிவித்தார். (எ-22)



## காணியை துப்புரவாக்குமாறு அறிவித்தல் பதாகைகள்!

கிளிநொச்சி, ஒக்.10

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பராமரிக்கப்படாத காணிகளில் பிரதேச சபையால் அறிவித்தல் பதாகைகள் ஒட்டப்பட்டு வருகின்றன.

அந்தக் காணிகளை உரிமையாளர்கள் துப்புரவாக்கிப் பராமரிக்க அறிவுறுத்தும் பதாகைகளே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

காணிகளின் உரிமையாளர்கள் இந்த அறிவித்தலைக் கருத்தில் எடுத்து தமது காணிகளைத் துப்புரவாக்க ஆரம்பித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. அதேவேளை, சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பராமரிக்கப்படாத காணிகள் இருப்பின் அது தொடர்பாக சபைக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டால் சபை உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-222)



கொரோனாத் தொற்றாளர் இனங்காணப்பட்டமையை அடுத்து, மன்னார் மாவட்டத்துக்கான போக்குவரத்துச் சேவைகள் திடீரென நிறுத்தப்பட்டன. அதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். மன்னார் தீவுப் பகுதியில் இருந்து பல கிலோமீற்றர் நடந்து வந்து இவர்கள் பஸ்ஸுக்காகக் காத்திருந்தமையைத் காண முடிந்தது. (எ-213)

## பிறப்புச் சான்றிதழ் இல்லாது 105 சிறுவர்கள்

வவுனியா, ஒக்.10

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் 105 சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லை. அவற்றை வழங்குவதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செட்டி குளம் பிரதேச செயலக பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிறப்புச் சான்றிதழ் இல்லாத சிறுவர்களின் பாதுகாவலர்கள் பிரதேச செயலக பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளரைத் தொடர்பு கொண்டால் துரிதமாக அவை பெற்றுக்கொடுக்கப்படும்.

பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத 65 பேருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 15 பேர் பிறப்புச் சான்றிதழ் களைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.- என்றார். (எ-18)

## வாக்காளர் பதிவு விவகாரம் கூட்டத்தில் வாத, பிரதிவாதம்

மன்னார், ஒக்.10

வெளிமாவட்டங்களில் உள்ள மன்னாரைச் சேர்ந்தவர்கள் வாக்காளர் இடாப்பில் தம்மைப் பதிவு செய்வதில் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர் என்று மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1990 ஆம் ஆண்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மக்கள் வெளிமாவட்டங்களில் வாழ்கின்றனர். அவர்கள் தமது சொந்தக் கிராமங்களில் வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவு செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவு செய்ய முடியாது என கிராம அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. - என்றார்.

இந்த விடயம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பேசப்பட வேண்டிய விடயம் என்று சுட்டிக்காட்டிய, மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீப், கிராம அலுவலர்கள் தேர்தல் உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அவர்கள் செயல்படுகின்றனர். இது விடயமாக தீர்மானம் எடுப்பது உதவித் தேர்தல் ஆணையாளர் என்று சுட்டிக்காட்டினார்.

அங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னாரில் மீள்குடியமர்வு நடந்து 10 ஆண்டுகளாகின்றன. இந்த மக்கள் வசித்த பகுதிகளில் எத்தனை வீடுகள் அமைக்கப்பட்டு ஆள்கள் இல்லாது இருக்கின்றன? அவர்கள் சொந்த மண்ணில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்ய வேண்டுமானால் அவர்கள் சொந்த இடத்திலேயே குடியேறலாமே?

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட கிராம அலுவலர்கள், தேர்தல்கள் ஆணையாளர் எமக்கு எதை வெளிப்படுத்தியுள்ளனரோ அதையே நாங்கள் செய்கின்றோம். வீடுகளில் குடியிருக்காமல் நாங்கள் அவர்களுக்குப் படிவங்களை வழங்க மாட்டோம் என்று தெரிவித்தனர். (எ-60)

## சுகாதார நடைமுறைக்கு முரணாக பழ விற்பனை

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

மன்னார், ஒக்.10

மன்னார் நகர்புறத்தில் சுகாதார நடைமுறைகளுக்கு முரணாக அங்காடி வியாபாரிகள் பழ வகைகள் மற்றும் மரக்கறிகளை விற்பனை செய்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது தொடர்பில் மன்னார் நகர சபை தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் நகருக்குள் வீதியோரங்களில் மரக்கறிகள், பழ வகைகள் என்பன விற்பனை செய்யப்படுகின்றன. அவை சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுகின்றன என்று பலரும் குற்றஞ்சாட்டுகின்றனர். இது தொடர்பாக மன்னார் நகர சபையின் கவனத்துக்குக் கொண்டு சென்றபோதும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு மன்னார் நகர சபை இந்த விடயத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (எ-60)

## பணப் பரிவர்த்தனையில் கொரோனா பரவும் அபாயம்

*பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை*

பணப் பரிவர்த்தனையின்போது கொரோனா வைரஸ் தொற்று பரவும் அபாயம் காணப்படுகின்றது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனால் பணப் பரிவர்த்தனையின் போது மிகவும் கவனமாகச் செயற்படுமாறு பொதுமக்களிடம் அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் 18 பொலிஸ் அதிகார பிரிவுகளுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும், நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று அவதான நிலைமை காணப்படுகின்றது என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஏனிந்தப் பாரபட்சம்?

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக கள் விற்பனை செய்யும் தவறணைகளை மூடுமாடு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. கொரோனா இலங்கையில் சமூகத் தொற்றாகப் பரவியுள்ள நிலையில் சுகாதார அமைச்சின் இந்த அறிவிப்பு தவிர்க்க முடியாததுதான். இதற்கு இயலுமான ஒத்துழைப்பை வழங்க வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு. ஆனால் ஏனைய மதுச்சாலைகளை மூடுமாறு எந்த அறிவித்தலும் விடுக்கப்படவில்லை. அவை தொடர்ந்தும் திறந்தேதான் இருக்கின்றன. பார்கள் திறந்திருக்க அனுமதி, கள்ளுத் தவணைகளுக்கு அனுமதியில்லை என்ற விடயம்தான் இங்கு எவருக்கும் புரியவேயில்லை.

இலங்கையில் போதைப்பாவனையாளர்கள் அதிகம் நாடுவது தவறணையையா அல்லது 'பார்களையா? என்றால் பார்'கள்தான் பதில். பார்கள்தான் பெரும் போதைப்பொருள் விநியோக இடங்களாக இருக்கின்றன. தவறணைகளுக்குச் செல்லும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை விட 'பார்'களுக்குச் செல்லும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகம். அதுமட்டுமல்லாமல் கள் மூலம் ஏற்படுகின்ற போதையைவிட பலமடங்கு போதையை 'பார்' களில் உள்ள இறக்குமதித் திரவங்கள் த்ந்துவிடுகின்றன. ஏராளமான குடும்பப் பிணக்குகள் ஏற்படுவதற்குக் காரணமாகவும் இந்தப் 'பார்' களே இருக்கின்றன. எப்பிடிப் பார்த்தாலும் 'பார்' களை மறுஅறிவித்தல் வரும்வரை பூட்டவேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்த அறிவித்தல் விடுக்கப்படாமல் கள்ளுத் தவறணைகளை மாத்திரம் பூட்டுமாறு விடுக்கப்பட்டிருக்கும் உத்தரவின் சூட்சுமம் என்னவென்று புரியவில்லை.

'எரியிற வீட்டில் பிடுங்கியது இலாபம்' என்று சொல்வார்கள். இதே கொள்கையைத்தான் கோத்தாபய தலைமையிலான அரசு கடைப்பிடிக்கின்றதோ என்ற சந்தேகம் வலுவாகவே இருக்கின்றது. தவறணைகள் உள்ளூர் வாசிகளால் இயக்கப்படுபவை. அங்கு விற்கப்படும் கள்ளை அளவாகப் பருகினால் அது உடலுக்கும் நல்லது என்பது எம் முன்னவர்களின் கருத்து. சீவல் தொழில் செய்து தமது வாழ்வாதாரத்தைக் கொண்டுசெல்லும் பல்லாயிரம் குடும்பங்கள் வடக்கில் உள்ளன. அன்றாடச் சீவலே அவர்களின் வாழ்வாதாரமாக இருக்கையில், தவறணைகளைப் பூட்டுமாறு விதிக்கப்பட்டுள்ள இந்த உத்தரவு அத்தகைய குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் மிகையாகவே பாதிக்கும். தவறணைகளைப் பூட்டிவிடுவதால் மதுப்பிரியர்கள் பேசாமல் இருந்துவிடப் போவதில்லை. அவர்கள் 'பார்'களுக்குப் படையெடுக்கவே செய்வார்கள். இதனால் இறக்குமதி மதுவகைகள் விற்றுத்தள்ளும். இது கொழும்பில் உள்ள மது முதலாளிகளை குபேரர்களாக ஆக்கும். பெரும்பாலான சீவல் தொழில் புரிவோர் தமிழர்களே. இப்போது தவறணைகளைப் பூட்டிவிட்டால், அவர்கள் கள்ளிறக்க முடியாது. கள்ளுக்காக பதப்படுத்தப்பட்ட பனை பயனற்றுப் போகும். அப்படியே அவர்களின் வாழ்வாதாரமும் அடிப்பட்டுப் போக, அடுப்படிக்குள் பூனை உறங்கும் நிலைதான் வரும். ஆக, கொரோனாவைக் காரணமாகக் காட்டியும் தமிழர்களின் வயிற்றில் அடிக்கத்தான் கோத்தாபய அரசு வரிந்துகட்டிக் கொண்டு நிற்கின்றது.

கோத்தாபய அரசால் ஏற்கனவே கொண்டுவரப்பட்ட போக்குவரத்துச் சட்டங்கள் செல்வந்தர்களுக்கும் பணபலவான்களுக்கும்தான் சாதகம் என்ற கடுமையாக விமர்சனம் ஏற்கனவே இருக்கின்றது. இந்த நிலையில் தவறணைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள இந்தத் தடை இலங்கையில் ஒவ்வொரு விடயத்திலும், துறையிலும் செல்வந்தர்களுக்கும் பெரும் முதலாளிமார்களுக்கும் உரித்தான ஆட்சிதான் இடம்பெறப்போகின்றது என்பதைத்தான் கட்டியம் சொல்கின்றது.
கொரோனா பெருந்தொற்றில் இருந்து நாட்டை விடுவிக்கும் பொறிமுறைகளில் மதுபானங்களை விற்பனை செய்யும் இடங்களைப் பூட்டவேண்டியதும் ஒன்று என அரசு கருதினால், அதை நடைமுறைப்படுத்தத்தான் வேண்டும். ஆனால் தவறணைகளுக்கு ஒரு நீதியும், பார்களுக்கு இன்னொரு வகையான நீதியும் காட்டுவது மக்களை ஆள்பவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களுக்கு அழகல்ல.

# வெளிமாவட்டங்களில் இருந்து வந்தோரிடம் பி.சி.ஆர். சோதனை

## யாழ். மாவட்டச் செயலர் மகேசன் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 10**

**வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்தவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களிடம் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தார் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணத்தில் கொரோனா ஆபத்தான நிலையில்தான் தற்போதும் உள்ளது. முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். மஞ்சள் கடத்தலுடன் தொடர்புடைய இருவர் அனலைதீவில் நடமாடியதை அடுத்து அந்தப் பகுதி தற்காலிகமாக சுகாதாரப் பகுதியினரால் முடக்கப்பட்டுள்ளது.
இன்றைய நிலையில் சுமார் 411 குடும்பங்களைச் சேர்ந்த 868 நபர்கள் சுயதனிமைப் படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். புங்குடுதீவில் சுமார் 127 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன. புங்குடுதீவில் ஒரு பகுதி தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.
வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளவர்களை இனங்கண்டு அவர்களிடம் பி.சி.ஆர் சோதனைகள் முன்னெடுக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
கரையோரப் பகுதிகளில் இருக்கும் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும். கடத்தல்கள் போன்ற சட்டவிரோதத் தொழில்களில் ஈடுபடுபவர்களின் விவரங்களை வழங்கினால் நாம் மிக இலகுவாக தனிமைப்படுத்தலை மேற்கொண்டு பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ளலாம் - என்றார். (ம)

## ஹரினுக்கு தொற்றில்லை

கொழும்பு,ஒக்.10
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவுக்கு, கொரோனா வைரஸ் தொற்றில்லை என்பது பி.சி.ஆர் பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.
நாட்டில் கொரோனா வைரஸ் கொத்தணி பரவல் ஏற்பட்டுள்ள நிலையில், ஹரின் பெர்னாண்டோ , தாமாக முன்வந்து தனியார் மருத்துவமனையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டிருந்தார்.
பரிசோதனை முடிவு தொடர்பான மருத்துவ அறிக்கையை அவர் நேற்று வெளியிட்டுள்ளார். அதில்ஹரினுக்குகொரோனா வைரஸ் தொற்றவில்லை என்பது உறுதியாகியுள்ளது.
ஹரின்பெர்னாண்டோ பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளும் காணொலி சமூகவலைத்தளங்களில் வைரலாகியது. அவருக்கு கொரோனா தொற்றியுள்ளது என வதந்தியும் பரப்பப்பட்டது. அந்த வதந்திக்கு மருத்துவ அறிக்கை மூலம் ஹரின் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். (க-44)

## புலனாய்வுத்துறை அதிகாரி கிணற்றில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 10
வவுனியாவில் உள்ள வீடொன்றின் கிணற்றில் இருந்து இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரியின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. வவுனியா பட்டாணிச்சூர் பட்டைக்காட்டுப் பகுதியிலே 33 வயது மதிக்கத்தக்க மேற்படி இராணுவ அதிகாரி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
வவுனியா பட்டாணிச்சூர் பட்டைக்காட்டுப் பகுதியில் கஞ்சா வியாபாரம் நடைபெறுவதாக நேற்றுமுன்தினம் மாலை இராணுவ புலனாய்வாளர்களுக்கு இரகசியமாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அங்கு விரைந்த இராணுவ உளவுத்துறை அதிகாரி நீண்ட நேரம் ஆகியும் திரும்பி வரதமையால் அவரைத் தேடி அப்பகுதிக்கு சென்ற ஏனைய உளவுத்துறை அதிகாரிகளால் மேற்படி சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர் தேடுதலின்போது தவறுதலாகக் கிணற்றுக்குள் விழுந்தாரா அல்லது திட்டமிட்ட கொலையா? என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-18.110)

# தகவல்களை மறைக்காதீர்!

## ஆடைத் தொழிற்சாலைக்கு எம்.பி லக்ஷ்மன் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 10
செப்ரெம்பர் 22ஆம் திகதி இந்தியாவில் இருந்து வந்தவர்களின் பெயர்ப் பட்டியலையும், அவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட இடங்களின் விவரங்களையும் மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை வெளியிட வேண்டும் என்று எதிர்க்கட்சி பிரதம கொடறாவான லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்தினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று விசேட அறிக்கையொன்றை விடுத்து உரையாற்றுகையிலேயே அவர் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.
'மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை பெரியதொரு நிறுவனமாகும். நாட்டுக்கு பெரும் சேவையாற்றுகின்றனர் என்பதும் எமக்குத் தெரியும். அந்த நிறுவனம் உண்மையை கூறுகின்றதெனில் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊடாகவேனும் மேற்படி தகவல்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
அதேவேளை, கொரோனா வைரஸ் பிரச்சினை இன்னும் முடியவில்லை என வைத்தியர்கள் உட்பட சுகாதார அதிகாரிகள் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்துவந்தனர். எனினும், அரசியலுக்காக நாட்டில் கொரோனா சமூகத்தொற்று இல்லை என்ற அறிவிப்பு ஆளுங்கட்சிதரப்பில் விடுக்கப்பட்டிருந்தது. மக்கள் சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளை பின்பற்றாமல் நடப்பதற்கு இந்த அறிவிப்பும் ஒரு காரணமாகும்' என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (ம-44)

## தென்மராட்சியில்
# 5 கிராம பிரிவுகளில் டெங்குப் பரிசோதனை

**சாவகச்சேரி ஒக்.10**
**தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு பரவுவதைத் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக, ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளில், விசேட டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.**



சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட கல்வயல், சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கைதடி நுணாவில், மறவன்புலவு, கெற்பேலி, எழுதுமட்டுவாழ், ஆகிய இடங்களில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.
டெங்கு நுளம்பு உருவாகக்கூடிய இடங்களை வைத்திருந்த 29 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
கடந்த முதலாம் திகதி டெங்கால் பீடிக்கப்பட்ட நால்வர், சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பாக பரிசோதனைகளையும், விசாரணைகளையும் மேற்கொண்ட பொது சுகாதாரப் பரிசோதகர்கள், பாதிப்பு தொடர்பாக உறுதிப்படுத்தி, சுகாதார மருத்துவ அதிகாரிக்கு அறிக்கையிட்டுள்ளனர். அவர் பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார்.
இதனையடுத்து கடந்த புதன்கிழமை டெங்குக் கட்டுப்பாட்டுக்குழுவுக்கான விசேட கூட்டம், பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்டது. அதில் டெங்குப் பாதிப்பு ஏற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் வழங்கி, டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் சுகாதாரப் பகுதியினர், பொலிஸார், கிராம மட்ட சுகாதாரக் குழுக்கள் மற்றும் டெங்கு உதவியாளர்கள் பரிசோதனையில் ஈடுபட்டனர். (க-9)

## பாதுகாப்பு தரிப்பிடத்தில் சைக்கிள்கள் திருட்டு


சாவகச்சேரி,ஒக்.10
சாவகச்சேரி பொதுச்சந்தை பாதுகாப்புத் தரிப்பிடத்தில், கடந்த ஒரு மாதத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட, பூட்டப்பட்ட சைக்கிள்கள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.
சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து தூர இடங்களுக்கு வேலைக்குச் செல்வோர் மற்றும் யாழ். போதனா மருத்துவமனைக்குச் சிகிச்சை பெறச் செல்வோர் பஸ் நிலையத்துக்கு அருகில், சந்தை வளாகத்தில் காணப்படும் பாதுகாப்பு நிலையத்தில் தமது சைக்கிள்களையும், மோட்டார் சைக்கிள்களையும் விட்டுச் செல்கின்றனர்.
இவ்வாறு விடப்பட்ட சைக்கிள்கள் தொடர்ச்சியாகத் திருடப்பட்டுள்ளன.
சைக்கிள் திருட்டு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-9)

## மத்தியஸ்தர் சபை அமர்வு இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஒக்.10
நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 இரண்டாவது அலைப்பரம்பலின் தாக்கத்தின் அசாதாரண சூழ்நிலை காரணமாக, மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் மறுஅறிவித்தல் வரை நடைபெறமாட்டாது என்று யாழ்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மத்தியஸ்தர் பயிற்றுவிப்பாளர் ப.சனாதனசர்மா அறிவித்துள்ளார்.
இதேவேளை நாட்டிலுள்ள அனைத்து மத்தியஸ்தர் சபையின் அமர்வுகளும் நடைபெறாது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. (க-39)

## அவசியமானோர் மட்டும் வரவும்

சாவகச்சேரி,ஒக்.10
கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில், தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு, அவசிய தேவை எனக் கருதப்படுவோர் மட்டும் வருகை தருமாறு, பிரதேச செயலர் திருமதி உ.சுபலிங்கம் அறிவித்துள்ளார்.
அத்துடன் பிரதேச செயலகத்துக்கு வருவோர் அவசியம் முகக் கவசம் அணிந்திருப்பதுடன், தனிநபர் இடைவெளியைப் பேணுமாறும் அறிவித்துள்ளார். (க-9)




## சுகாதார நடைமுறைகளுடன் பள்ளிவாசல்களில் தொழுகை

வவுனியா,ஒக்.10
அரச அறிவுறுத்தலுக்கமைய சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி, வவுனியா பள்ளிவாசல்களில் நேற்று மதியம் ஜும்மா தொழுகை இடம்பெற்றது.
வவுனியா நகர பெரிய பள்ளிவாசலின் பிரதான கதவுகள் மூடப்பட்டு, முகக் கவசம் மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, சுமார் 50 - 60 பேர் வரையானோர் மட்டுமே பள்ளிக்குள் அனுமதிக்கப்பட்டனர்.
இதன் காரணமாக பள்ளிவாசல்களுக்கு வருகை தந்த பலரும், உள்ளே சென்று தொழுகையில் ஈடுபட முடியாது திரும்பிச் சென்றமையையும் அவதானிக்க முடிந்தது. (க-18)

## சிறுதானிய செய்கைக்கு விதைகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.10
யாழ்.மாவட்டத்தில் சிறுதானியப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு, விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை வழங்க விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.
உழுந்து, கௌப்பி, கச்சான், குரக்கன் போன்ற சிறுதானியச் செய்கையை இம்முறை கூடுதலாக முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
வெற்றுக்காணிகள், பனம் மற்றும் தென்னங் காணிகளை ஒழுங்குபடுத்தி சிறுதானியச் செய்கையை மேற்கொள்வதற்கு மக்கள் முன்வர வேண்டும்.
ஆர்வமுள்ளவர்கள் திருநெல்வேலியில் உள்ள விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தில், விதைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

## வெளியீட்டு பணியகத்துக்கு தற்காலிகமாக பூட்டு

கொழும்பு, ஒக்.10
அரசாங்க தகவல் திணைக்களத்துக்கு அருகிலுள்ள வெளியீட்டுப் பணியகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.
நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் இது மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அரசாங்க அச்சீட்டு திணைக்களத்தையும் மீள் அறிவிப்பு வரும் வரையில் மூடி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## பரீட்சை நிலையங்களில் கிருமித் தொற்று நீக்கல்

யாழ்ப்பாணம்,ஒக்.10
புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த.உயர்தரப் பரீட்சை இடம்பெறவுள்ள பாடசாலைகளின், பரீட்சை நிலையங்களுக்கு கிருமித் தொற்று நீக்கம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மாணவர்களின் பாதுகாப்புக் கருதி, பரீட்சை நிலையங்களைச் சுற்றி, கிருமித் தொற்று நீக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.
யாழ்.மாநகர சபைக்குட்பட்ட 18 பரீட்சை நிலையங்களுக்கும், மாநகர சுகாதாரப் பிரிவினர் தொற்று நீக்கல் பணிகளை முன்னெடுத்துள்ளனர். (க-17)

## தாதிப் பயிற்சிக்கான நேர்முகப் பரீட்சை இடைநிறுத்தம்


நாட்டில் தாதிய மாணவர் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளவர்களுக்கான தகுதிகளைப் பரிசோதனை செய்வதற்கான நேர்முகப் பரீட்சை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.
சுகாதார அமைச்சின் ஊடகப் பிரிவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

## அராலிப் பிரதேசத்தில்
## 15 ஹெக்ரேயரில் பெரிய வெங்காயம்

அராலி,ஒக்.10
அராலிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரிய வெங்காய செய்கை இம்முறை பெரும் வெற்றியளித்துள்ளது.
கிட்டத் தட்ட 15 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் செய்கை மேற்கொள்ளப்பட்டது.
தற்போது வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. செய்கையாளர்கள் அதிக விளைச்சலைப் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
திருநெல்வேலி சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் தற்போது 180 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-17)

## விசேட நிகழ்வுகளுக்கு மீண்டும் கட்டுப்பாடுகள்

கொரோனாத் தொற்றின் அச்சுறுத்தலை அடுத்து, யாழ்.குடாநாட்டில் திருமணம், மரணச் சடங்குகள் மற்றும் ஆலயத் திருவிழாக்களுக்கு, மீண்டும் இறுக்கமான கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
சுகாதார நடைமுறைகளுடன், நிகழ்வுகளை நடத்த வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.
நடைமுறைகளை மீறுவோருக்கு எதிராக, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
ஆலயங்களில் வழிபடுவோர் கட்டாயம் தனிநபர் இடைவெளியைப் பேண வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-17)



## இன்றைய நாள்

**மேடம்:** நண்பர்கள் மூலமாக மகிழ்ச்சியளிக்கும் செய்தி வந்து சேரும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள். அலுவலகத்தில் அதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள்.

**இடபம்:** நெருங்கியவர்கள் மூலம் உதவி உண்டு. உங்களின் மதிப்பு கூடும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். பரபரப்பான நாள். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள்.

**மிதுனம்:** பெற்றோருக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் மூலம் லாபம் வரும். சக ஊழியர்களின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும்.

**கடகம்:** நாளின் பிற்பகுதியில் எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள். மனைவியைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப மாறுவீர்கள். மனநிறைவான நாள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும்.

**சிம்மம்:** அதிரடியான திட்டங்களை நிறைவேற்றுவீர்கள். பரபரப்பான நாள். உயரதிகாரிகளிடம் மரியாதை கூடும். லாபங்கள் அதிகரிக்கும். குடும்பத்தினரின் விருப்பப்படி வசதிகளை மேம்படுத்துவீர்கள்.

**கன்னி:** அக்கம் பக்கத்தினரின் அன்பு கூடுதலாக இருக்கும். வேற்று மொழிக்காரர்களின் உதவி கிடைக்கும். கனவு நனவாகும். ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகும். சலுகைகள் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதி வசூலாகும். பணி பற்றிய அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. உங்கள் ஆலோசனையைப் பிறர் ஏற்றுக் கொள்வார்கள்.

**விருச்சிகம்:** ஆரோக்கியம் பற்றிய பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். நேற்றிருந்த தொல்லைகள் அனைத்தும் இல்லையென்றாகும். பெரும்பாலும் மகிழ்ச்சியும் ஓரிரு சிரமங்களும் நிலவும்.

**தனுசு:** நண்பர்கள், உறவினர்களால் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். புதிய வாகனங்கள் வாங்குவதால் மகிழ்ச்சி அதிகரிக்கும். வெறுத்துப் பிரிந்தவர்கள் தேடி வருவார்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைக் கைவிடாதீர்கள். பணவரவு உண்டு. எதிர்பார்த்த முயற்சியில் வெற்றி உண்டு. எதிலும் பொறுமை தேவை. தாயால் நன்மை ஏற்படும்.

**கும்பம்:** சகோதரர்களால் பணம் பற்றி சில சங்கடங்கள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் செலவைச் சமாளிப்பீர்கள்.

**மீனம்:** எதிரிகளால் நீங்கள் பயந்த அளவுக்கு பாதிப்புகள் இருக்கமாட்டா. பெண்கள் பிறரை முழுமையாக நம்ப வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

# கொரோனா தொடர்பில் கடுமையான நடைமுறைகள்

### கொவிட்-19 செயலணியின் கலந்துரையாடலில் முடிவு

முல்லைத்தீவு ஒக்.10

**கொரோனா கட்டுப்பாடுகள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட கொவிட்-19 செயலணி மேற்கொண்ட தீர்மானங்கள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட கொவிட்-19 செயலணியின் விசேட கலந்துரையாடலில் இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.**

இதன்போது மாவட்டத்தில் மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்த்தல், பொதுப் போக்குவரத்து சேவையில் நடைமுறைப்படுத்த வேண்டிய சுகாதார நடைமுறைகள், சுற்றுநிருபத்திற்கமைய மேலதிக அறிவித்தல்கள் வரும்வரை தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளை இடைநிறுத்தல், கடற்கரையோர பகுதிகளை கண்காணித்தல், வெளிமாவட்டங்களுக்குச் சென்று வந்தோர் தொடர்பான தகவல்கள் மற்றும் அவை தொடர்பான பாதுகாப்பு நடைமுறைகள், கடந்த காலங்களில் செயற்பட்டமையைப் போன்று சுகாதார வழிமுறைகளான கைகழுவுதல் மற்றும் முகக் கவசம் அணிவது தொடர்பில் மக்களை அறிவுறுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (வ-19)

கந்தளாயில்

## ஒருவருக்குத் தொற்று உறுதி; 41 பேர் தனிமைப்படுத்தலில்!

### பிரதேச செயலாளர் தெரிவிப்பு

கந்தளாய், ஒக்.10

கந்தளாய் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 41 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 5 பேர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி தெரிவித்துள்ளார்.

கந்தளாய் பிரதேசத்தின் கொரோனா நிலைமை தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு கந்தளாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போதே இந்தத் தகவலை அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா இரண்டாம் அலை மூலமாக கந்தளாய் பிரதேசத்தில் யுனிட் 11, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த யுவதியொருவருக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 41 பாடசாலை மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இம்மாணவர்கள் கந்தளாய் பகுதியிலிருந்து கம்பஹா பகுதிக்கு தனியார் வகுப்புக்குச் சென்றவர்களாவர். ஐந்து பேர் பி.சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். இவற்றை கந்தளாய் பொதுச் சுகாதார அதிகாரிகள் மேற்கொள்கின்றனர் எனத் தெரிவித்தார். (வ-இ)

## கம்பஹாவைச் சேர்ந்த 160 பேர் கேப்பாபிலவில் தனிமைப்படுத்தல்

முல்லைத்தீவு, ஒக்.10

கம்பஹாவைச் சேர்ந்த 160 பேர் தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்காக கேப்பாபிலவுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் இராணுவ பாதுகாப்புடன் முல்லைத்தீவு கேப்பாபிலவு 59 ஆவது படைப்பிரிவின் தனிமைப்படுத்தல் நிலையத்தை 5 பேருந்துகளில் நேற்றுமுன்தினம் இரவு வந்தடைந்துள்ளனர் .

அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை கேப்பாபிலவு விமானப்படைத் தள தனிமைப்படுத்தல் நிலையத்தில் வெளிநாடுகளில் இருந்து விமான நிலையம் ஊடாக நாட்டுக்கு வருகை தந்த 225 பேர் கடந்த 3ஆம் திகதி தொடக்கம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவர் கொரோனா தனிமைப்படுத்தல் மருத்துவமனைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஏனையவர்கள் அனைவருக்கும் கட்டம் கட்டமாக பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-19)

## ஊரடங்கு மீறல்: 91 பேர் கைது

கம்பஹா, ஒக்.10


கம்பஹாவில் பொலிஸ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவைமீறிய 91 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். 23 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.



அத்துடன் கம்பஹா மாவட்டத்தில் 18 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## அனைத்து தொழிற்சாலைகளிலும் பி.சி.ஆர்.

கொழும்பு, ஒக்.10



அதிகளவான தொழிலாளர்களைக் கொண்ட அனைத்து தொழிற்சாலைகளிலும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. தொற்றுநோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று பரவலைத் தொடர்ந்து அதிகளவான தொழிலாளர்களைக் கொண்ட அனைத்து தொழிற்சாலைகளிலும் பி.சி.ஆர். பரிசோதனைகளை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் அனைத்து தொழிற்சாலைகளுக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது. யாராவது வைரஸுடன் அடையாளம் காணப்பட்டால், அனைத்து ஊழியர்களிடமும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்பதே விதிமுறையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# சிறுநீரக நோயாளருக்கான கொடுப்பனவு நிறுத்தம்

## பொதுமக்கள் அசௌகரியம்

வவுனியா,ஒக்.10

**வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் எவ்வித முன் அறிவித்தலின்றி நிறுத்தப்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என கவலை தெரிவித்தனர்.**

சிறுநீரக நோயாளர்களுக்கு மத்திய சமூக சேவைகள் அமைச்சால் 5000 ரூபா கொடுப்பனவும், மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் 1000 ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் மத்திய சமூக சேவைகள் அமைச்சால் 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதால், மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படும் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் பொதுமக்களுக்கு எவ்வித முன்னறிவித்தலும் வழங்காது, வவுனியா பிரதேச செயலகம் கொடுப்பனவை நிறுத்தியமையால் தபால் நிலையங்களுக்கு வருகை தந்த சிறுநீரக நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

கொவிட் -19 நோய்த் தாக்கம் நாட்டில் அதிகரித்து வருகின்ற சமயத்தில் பொதுமக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கிய வவுனியா பிரதேச செயலகத்தின் செயற்பாடு குறித்து சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஐ-18)

## இணக்கசபை அமர்வு நடைபெறாது

சாவகச்சேரி,ஒக்.10

கொரோனாத் தொற்றுக் காரணமாக சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த சாவகச்சேரி இணக்க சபை அமர்வு நடைபெறாது என்று சபைத் தவிசாளர் அறிவித்துள்ளார். (ஐ-9)

## மாணவர்களுக்கான செயலமர்வு

கொடிகாமம்,ஒக்.10

கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையில் இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தயார்ப்படுத்தல் செயலமர்வு அண்மையில் நடைபெற்றது.

செயலமர்வில் மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் சி.தீபன் வளவாளராக கலந்துகொண்டார். (ஐ-159)

## ஹோமசாந்தி பெருவிழா

கைதடி,ஒக்.10

கைதடி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் நவக்கிரக ஹோமசாந்திப் பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத்துக்கு வருகை தரும் அடியார்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-159)

## புரட்டாதி சனி விரத வழிபாடு

யாழ்ப்பாணம்,ஒக்.10

புரட்டாதி சனி விரதத்தை முன்னிட்டு இந்து ஆலயங்களில் இன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

சிவன் ஆலயங்களிலேயே பெரும்பாலும் இந்தச் சிறப்பு பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இன்று கடைசி சனி விரதம் என்பதால் சனீஸ்வரனுக்கு எண்ணெய் எரித்தல், தண்ணீர் ஊற்றுதல் மற்றும் சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெறும். (ஐ-17)

# நிர்ணய விலை தேங்காய் சந்தைகளில் இல்லை

## வியாபாரிகள் கவலை

கொடிகாமம்,ஒக்.10

கொடிகாமம் சந்தையில் தேங்காயை நிர்ணய விலையில் கொள்வனவு செய்ய முடியாதுள்ளது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தேங்காய்களை சந்தைக்கு கொண்டுவரும் உற்பத்தியாளர்கள் தரம் பிரிக்காது தாம் நிர்ணயிக்கும் விலையிலேயே வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

தேங்காய் ஒன்று 75 தொடக்கம் 80 ரூபாவுக்கு இடையில் உற்பத்தியாளர்கள் விலை நிர்ணயம் செய்தால் தாங்கள் கொள்வனவு செய்யும் தேங்காய்களின் சுற்றளவுக்கு ஏற்ற விலையில் விற்பனை செய்ய முடியாதிருக்கிறது என வியாபாரிகள் கவலை தெரிவித்தனர். (ஐ-ரி1)




# தனிமைப்படுத்தல் நிறைவு: 52 பேர் வீடு திரும்பினர்

வவுனியா, ஒக்.10

கொரோனாத் தொற்றுக் காரணமாக கிளிநொச்சி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 52 பேர் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக டுபாய் நாட்டில் சிக்கித் தவித்த இலங்கையர்கள் 100 பேர் அண்மையில் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு 21 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதில் 52 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் எவருக்கும் தொற்றில்லை என்று கண்டறியப்பட்டதையடுத்து வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். (ஐ-214)



கைதடி குருசாமி வித்தியாலயத்தில் தரம் 1, தரம் 2 மாணவர்களின் ஆங்கில தின நிகழ்வு அண்மையில் அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் நடைபெற்றது. (ஐ-159)



## சிறுவர் தின நிகழ்வு

கொடிகாமம்,ஒக்.10

கைதடி குருசாமி வித்தியாலயத்தின் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கட்டடப் பொருள் விற்பனை நிலைய உரிமையாளர் ஜெகநாதன் சிவராசாவின் நிதி அனுசரணையில் பாடசாலையின் அனைத்து மாணவர்களுக்கும், கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ-159)



## மாணவர்களுக்கான செயலமர்வு

கொடிகாமம்,ஒக்.10

கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையில் இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தயார்ப்படுத்தல் செயலமர்வு அண்மையில் நடைபெற்றது.

செயலமர்வில் மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் சி.தீபன் வளவாளராகக் கலந்து கொண்டார். (ஐ-159)



பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் சிறுவர் தின நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்றது. (ஐ-159)



பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் இயக்கச்சி மல்வின் கிருஷ்ணன் ஆலயம் மற்றும் புலோப்பளை புனித இராயப்பர் ஆலயம் ஆகியவற்றுக்கு அண்மையில் சென்று வழிபாடுகளை மேற்கொண்டனர். (ஐ-159)

### காக்கைதீவு பொதுச் சந்தையில்
## பாதுகாப்புக் கட்டணம் இரு மடங்காக அறவீடு

வலி.தென்மேற்கு, ஓக்.10

காக்கைதீவு பொதுச் சந்தையில் வாகனங்களுக்கான பாதுகாப்பு கட்டணம் இரு மடங்காக அறவிடப்படுவதால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ள வலி..தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், சபையால் விதிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கட்டணத்தை மட்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தவிசாளரை கோரியுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 9 பொதுச் சந்தைகள் இயங்குகின்றன. இவற்றில் காக்கைதீவு பொதுச்சந்தையைத் தவிர ஏனைய சந்தைகளில் பிரதேச சபையால் விதிக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கான பாதுகாப்பு கட்டணம் மட்டுமே அறவிடப்பட்டு வருகின்றது.

காக்கைதீவு இறங்குதுறையில் அமைக்கப்பட்டுள்ள பொதுச்சந்தையை குத்தகைக்கு எடுத்தவர் ஆரம்பத்திலிருந்தே சைக்கிளிலுக்கு 10 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 20 ரூபாவும் பாதுகாப்பு கட்டணமாக அறவிட்டு வருகின்றார்.

இந்தநிலை குறித்து பொதுமக்கள் பிரதேச சபை உறுப்பினர்களின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதனையடுத்து பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இது பற்றி ஆராயப்பட்டது. இதனையடுத்து அறவிடப்பட வேண்டிய கட்டணம் பற்றி சந்தையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்க ப்பட்டது.

ஆனால் இத்தீர்மானம் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படாமையால் குத்தகைக்காரர் கட்டணத்தை தொடர்ந்தும் இருமடங்காக அறவிட்டு வருகின்றார்.

இது தொடர்பில் பிரதேச சபையின், கடந்த மாதம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டிய உறுப்பினர்கள், சபையால் விதிக்கப்பட்ட கட்டணத்தை மட்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தவிசாளரை கோரியுள்ளனர். (ஜ-115)

## வகுப்புகள் நடைபெறாது

யாழ்ப்பாணம்,ஒக்.10

வடக்கு மாகாண மும்மொழிக் கற்கை நிலையத்தால் நடத்தப்படும் சகல பயிற்சிநெறி வகுப்புகளும் இன்று சனிக்கிழமையில் இருந்து மறுஅறிவித்தல் வரை நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

### வெடுக்குநாறி
# ஆலய நிர்வாகத்தினர் பிணையில் விடுவிப்பு

வவுனியா,ஒக்.9

**வெடுக்குநாறி மலை ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக, நெடுங்கேணிப் பொலிஸாரால், வவுனியா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், நிர்வாகத்தினர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.**

நெடுங்கேணி வெடுக்குநாறி மலை மற்றும் அதனை அண்டிய பகுதிகள் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமானது எனத் தெரிவித்து, ஆலயத்தில் பொதுமக்கள் வழிபடுவதற்குத் தடை ஏற்படுத்தப்பட்டது. பொதுமக்களின் முயற்சியால் வழிபடுவதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது.

எனினும் ஆலய வளாகத்தில் கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கும், பூசை வழிபாடுகளை முன்னெடுப்பதற்கும் நெடுங்கேணி பொலிஸாரால் தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டு வந்தது.

கடந்த வாரம் ஆலயத்தின் பூசாரியை நெடுங்கேணி பொலிஸார் விசாரணைக்காக அழைத்ததுடன், ஆலய வளாகத்துக்குள் சென்று பூசை நிகழ்வுகளை மேற்கொண்டால் கைதுசெய்வோம் எனத் தெரிவித்திருந்ததுடன், தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்கையும் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கு வவுனியா நீதிமன்றில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆலயத்தின் சார்பில் தலைவர், செயலாளர், பூசகர் ஆகியோர் முன்னிலையா கினர்.

நீதிமன்றில் முன்னிலையாகிருந்த, பொலிஸார் ஆலய நிர்வாகத்தினரைக் கைதுசெய்ய வேண்டும் என்றும், தொல்பொருள் சார்ந்த விடயம் என்பதால் வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை ஆலய நிர்வாகத்தினரை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்றும் நீதிவானிடம் கோரினர்.

இதற்கு ஆலயத்தின் நிர்வாகத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளால் கடுமையான எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டிருந்தன. தெற்கிலும் ருவன் வெலிசாய போன்ற பல்வேறு பகுதிகள் தொல்பொருள் திணைக்களத்தின் கீழே தான் இருக்கிறன. எனினும் அங்கும் வழிபாடுகள் இடம்பெறுகின்றமையையும், நீதிவானுக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் நிமித்தம் 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் ஆலய நிர்வாகத்தினர் விடுவிக்கப்பட்டனர். எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த விடயத்துக்கு நீதிமன்றங்களின் ஊடாக தீர்வைப் பெறுவது என்பது கல்லிலே நார் உரிப்பதற்கு ஒப்பானது. இவற்றுக்கு அரசியல் ரீதியாகவே முடிவுகளை எடுக்க வேண்டும். என்று சட்டத்தரணி சுகாஸ் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

ஆலயத்தின் நிர்வாகத்தினர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சிற்றம்பலம் தலைமையில் 15 க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகினர். (க-110)



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு தபால் அத்தியட்சகர் ரி.எம்.ஏ.ரட்நாயக்க தலைமையில் மன்னார் மாவட்ட அஞ்சல் திணைக்களத்தின் உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மன்னார் பிரதான தபால் திணைக்கள மண்டபத்தில் குருதிக்கொடை வழங்கினர். குருதி வங்கி மருத்துவ அதிகாரி பசிது பெனாண்டோ தலைமையிலான மருத்துவக் குழுவினர் குருதிக் கொடை பெறும் சேவையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-60)


யாழ்ப்பாணம்


வவுனியா



மானிப்பாய்

# அஞ்சல் தின நிகழ்வு


கொடிகாமம்


சாவகச்சேரி

சாவகச்சேரி,ஒக்.10

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நாட்டில் உள்ள அனைத்து அஞ்சல் அலுவலகங்களிலும் அஞ்சல் தின நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றன.

யாழ்ப்பாணம் முதன்மை தபாலகத்தில் அஞ்சல் தின நிகழ்வுகள் முதன்மை தபாலதிபர் தலைமையில் நடைபெற்றன. நிகழ்வில் தேசியக் கொடியை பிரதம தபாலதிபர் சஜித் பெரகரா ஏற்றி வைக்க, அஞ்சல் கொடியை பிரதி பிரதம தபாலதிபர் திருமதி பிரபாகரன் சாந்தகுமாரி ஏற்றி வைத்தார்.

அதன் பிறகு உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் சத்தியப் பிரமாண நிகழ்வு நடைபெற்றது.

இதேவேளை சாவகச்சேரி அஞ்சலகத்திலும் அஞ்சல் தின நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் தேசியக் கொடியை அஞ்சல் அதிபர் இ.லம்பேர்ட்டும், அஞ்சல் கொடியை பணியாளர் ஒருவரும் ஏற்றினர்.

கொடிகாமம் அஞ்சல் அலுவகத்தில் அஞ்சல் அதிபர் திருமதி பத்மினி அசோகன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதேவேளை மானிப்பாய் அஞ்சல் சமூகத்தினரால் வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் விநியோகிக்க ப்பட்டன.

வவுனியா முதன்மை தபாலகத்திலும் அஞ்சல் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

இதன்போது தபால் சேவை தொடர்பில் கருத்துப் பகிர்வு இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை தபாலக அஞ்சல் அதிபர், தபால் நிலைய உத்தியோகத்தர்கள், தபால் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-9,20,159,18)

## இலங்கையை.....

மன்றங்களில் இலங்கையின் சுயாதீனம், இறைமை, ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக சீனா குரல்கொடுக்கும் என்றும் சீன தூதுக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

சீன கம்யூனிச கட்சியின் மத்திய செயற்குழுவின் அரசியல் சபை உறுப்பினர் மற்றும் சீன கம்யூனிச கட்சியின் மத்திய செயற்குழுவின் வெளிவிவகார ஆணைக் குழுவின் அலுவலக பணிப்பாளர் யங் ஜியேசி தலைமையிலான ஏழு பேர் கொண்ட தூதுக்குழு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோத்தாபயவைச் சந்தித்தனர். நீண்ட காலமாக சீன வெளிவிவகார அமைச்சின் பல்வேறு பதவிகளை வகித்த யங் ஜியேசி, 2001ஆம் ஆண்டிலிருந்து 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமெரிக்காவுக்கான சீனத் தூதுவராகவும் 2007ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிவிவகார அமைச்சராகவும் பதவி வகித்தார். சீன ஆட்சி கட்டமைப்பில் அவர் உப பிரதமருக்கு நிகரானவர்.

இந்தக் குழுவினர் அவசர அவசரமாக, கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ள நிலையிலும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் காணொலி ஊடான கலந்துரையாடல் நடத்திய சில தினங்களில் சீனாவின் இந்தப் பயணம் இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கு வந்த சீனக் குழுவினர் ஜனாதிபதி கோத்தாபய, பிரதமர் மஹிந்த இருவரையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஜனாதிபதி கோத்தாபயவுடனான சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில், குறிப்பாக சீனாவின் கிராமிய பிரதேசங்களில் பாரிய அபிவிருத்தியை நான் கண்டேன். இதற்கு நிகரான அபிவிருத்தியை எமது நாட்டிலும் குறிப்பாக கிராமங்களில் அதனை ஏற்படுத்துவது கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது தனது இலக்காகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். எதிர்வரும் நான்கு ஆண்டுகளில் துறைமுக நகர திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காண்பது தனது எதிர்பார்ப்பாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சீனாவுடனான வர்த்தகத்தின் போது இலங்கையின் வர்த்தக பற்றாக்குறை பெரியதாக இருப்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அதனை குறைப்பதற்கு இலங்கையிலிருந்து கொள்வனவு செய்யும் பொருள்களின் அளவை அதிகரிக்குமாறும் தூதுக்குழுவிடம் கோரிக்கை விடுத்தார்.

'இலங்கையின் தனியார் துறை வலுவான நிலையில் உள்ளது. அவர்கள் பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். அதற்காக சீன சந்தை வாய்ப்புகளைத்திறந்துவிடுங்கள். இலங்கையில் முதலீடு செய்யுமாறு சீன வர்த்தகர்களை ஊக்குவியுங்கள். இலங்கையில் சுற்றுலாவுக்காக சீனர்களை ஊக்குவியுங்கள். இலங்கையின் தேயிலை ஏலத்தில் பங்குகொள்ள சீனாவுக்கு முடியுமானால் அது பொருளாதார உறுதிப்பாட்டுக்கு பெரும் பலமாகும்' என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

உயர் தரத்தில் சித்தியடையும் இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு திறந்திருக்கும் உயர்கல்வி வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்த இளைஞர் யுவதிகளுக்காக தொழிநுட்ப பல்கலைக்கழகமொன்றை ஆரம்பிப்பது சீனாவுக்கு இலங்கையில் முதலிட முடியுமான துறையாகும் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு பேச்சில் மட்டுமன்றி செயலில் உதவுவதற்கு சீனா தயாராக உள்ளது என்று யங் ஜியேசி குறிப்பிட்டார்.

இலங்கையுடன் பல்தரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு பொருத்தமான பல துறைகளை சீனா இனம் கண்டுள்ளது. தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பெரிய திட்டங்களை நிறைவுசெய்வதற்கு மேலதிகமாக விவசாயம், கல்வி, சுற்றுலா, நீர் வழங்கல், சுகாதாரம், மருத்துவ வழங்கல், நவீன தொழில்நுட்பம், டிஜிடல் பொருளாதாரம், நீல பொருளாதாரம் மற்றும் தொழில் பயிற்சி என்பன அவற்றில் சிலவாகும்.

சீனா இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்த கலந்துரையாடலை மீண்டும் ஆரம்பிக்கவும் ஹம்பாந்தோட்டை கைத்தொழில் நகர திட்டத்தை விரைவாக நிறைவுசெய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக சீன தூதுக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

கொவிட்-19 நோய்த்தொற்றை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியதன் பின்னர் ஜனாதிபதி சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்வார் என பெரிதும் எதிர்பார்ப்பதாகவும் யங் ஜியேசி தெரிவித்தார், என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

## கோத்தாபய.....

தூதுவர் தெரிவித்த கருத்துக்கு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஊடாக பதிலடியை கொடுத்துள்ளது சீனத் தூதுக்குழு.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில், இலங்கையுடனான உறவுகளில் சீனா வெளிப்படைத்தன்மையோடு நடந்து கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். அத்துடன் சீனா இலங்கைக்கு வழங்கிய கடன்கள், இலங்கைக்கு விரிக்கப்பட்ட கடன் வலை என்றும் அமெரிக்கா தெரிவித்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் இலங்கைக்கு நேற்று முன்தினம் வருகை தந்த சீனத் தூதுக்குழு ஜனாதிபதியை நேற்றுச் சந்தித்தது. இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி கோத்தாபய, பெரிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றுக்கு சீனா பங்களிப்பு செய்தது. ஹம்பாந்தோட்டை துறைமுகம், துறைமுக நகர திட்டம், தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அவற்றில் சிலவாகும். ஹம்பாந்தோட்டையில் துறைமுகமொன்றை நிர்மாணிப்பது சீனாவுடையதன்றி இலங்கையின் எண்ணமாகும். அது அதிக வருமானத்தையும் தொழில்வாய்ப்புகளையும் கொண்டுவரும் சிறந்த திட்டம் என்பதை நாம் விளங்கியிருந்தோம். அதற்கு நிதி உதவியளிக்க சீனா முன்வந்தது.

பெரும்பாலான புவி அரசியல் பகுப்பாய்வுகள் இந்தத் திட்டத்தை இலங்கையில் சீனா ஏற்படுத்தியிருக்கும் கடன் வலை என்றே அர்த்தப்படுத்தப்படுகின்றது. அது அவ்வாறல்ல என்றும், இந்தப் பெரிய திட்டம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உதவும் என்பதை நான் உறுதிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. எனவே அதற்காக எமக்கு உதவுங்கள், என்று ஜனாதி

# புலம்பெயர் அமைப்புகளால் வாழ்வாதார உதவிகள்

மன்னார், ஒக் 10

மன்னார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட சில குடும்பங்களுக்கு புலம்பெயர் அமைப்புக்களால் வாழ்வாதார உதவிகள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன. வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பிரத்தியேக செயலாளர் வசந்தனின் வேண்டுகோளுக்கு இணங்க வெளிநாடுகளில் உள்ள காந்தள் இளையோர் அமைப்பு மற்றும் அறம் செய் அறக்கட்டளை ஆகிய அமைப்புகள் நிதிஉதவியை வழங்கியிருந்தன. மன்னார் மாவட்டத்தில் வெள்ளாங்குளம், கத்தாளம்பிட்டி, சிலாவத்துறை, நானாட்டான், பேசாலை ஆகிய பகுதிகளில் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே வாழ்வாதார சுயதொழில் மற்றும் கல்விக்கான உதவிகள் வழங்கப்பட்டன அத்துடன் மாவீரர் குடும்பங்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன. (ந-213)

# ஊரடங்கு பகுதிகளில்
## வர்த்தக நிலையங்கள் திறப்பு

கம்பஹா, ஒக்.10

கம்பஹா மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள 18 பொலிஸ் பிரிவுகளுக் குட்பட்ட பகுதிகளில் அத்தியாவசிய பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக அருகாமையில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு செல்லலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார். சதோச மற்றும் மருந்தகங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்யக்கூடிய வர்த்தக நிலையங்களே திறக்கப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டுள்ளது. (ந-இ)

**பெயர் மாற்றம்**

புதிய பஸ் நிலைய வீதி, கல்கமுவை எனும் இடத்தில் வசிக்கும் மனுவேல் விமலாதேவி ஆகிய நான் எனது பெயரை மனுவேல் சம்ஸியா என மாற்றம் செய்துள்ளேன். மேலும் சகல ஆவணங்களிலும் மனுவேல் சம்ஸியா என கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

மனுவேல் சம்ஸியா

# மின்சார தூண் உடைவு: போக்குவரத்துத் தடை

வவுனியா,ஒக்.10

வவுனியா ஹொறவப்பொத்தானை வீதியில் உயர் அழுத்த மின்சாரத் தூண் சேதமடைந்ததால் இவ் வீதியூடான போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த வீதியில் அமைந்துள்ள உயர் அழுத்த மின்சாரத் தூணுடன் நேற்று அதிகாலை, பாரவூர்தி ஒன்று மோதியதில் மின்சாரத் தூண் சேதமடைந்திருந்தது. இந்நிலையில் இது தொடர்பாக மின்சார சபைக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் மின்சாரக் கம்பத்தை மாற்றி புதிய கம்பத்தை அமைக்கும் பணிகள் மின்சார சபை ஊழியர்களால் வேகமாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

இத் திருத்தப்பணி காரணமாக ஹொறவப்பொத்தான வீதியூடாக நகருக்குள் வாகனங்கள் செல்வதற்கான பிரதான வீதி மூடப்பட்டுள்ளதுடன், மாற்று வழியியை பயன்படுத்துமாறு பொலிஸாரால் சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ந-110)

**மரண அறிவித்தல்**

பிறப்பு
29 . 12 . 1977



இறப்பு
08 . 10 . 2020

**இரத்தினசபாபதி ஆதித்தன்**

நயினாதீவு 07ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் நாட்டை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி ஆதித்தன் கடந்த (08.10.2020) அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் இரத்தினசபாபதி-சண்முகவடிவு தம்பதியரின் பாசமிகு மகனாரும், காலஞ் சென்றவர்களான கதிரேசு- அன்னபூரணி, முத்தையா-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புப் பேரனும், ஓம்சக்தி, ஆதிசக்தி, சிவசக்தி, மணிகண்டன், ஞானசக்தி ஆகியோரின் அன்பு சகோதரனும் யசோதன், லோகேந்திரன், சுதாகரன், இராகுலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிலாந்தி, புராதனி, பார்கவி, பிரணவிகா, சாத்விகா ஆகியோரின் பாசமிகு பெரிய மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30/6, நாவலடி லேன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

தகவல் : குடும்பத்தினர்.

# ஆபத்தான நிலைக்கு நாடு செல்லவில்லை!

## சளாப்புகின்றார் சுகாதார அமைச்சர்

கொழும்பு, ஒக். 10

**கொரோனாவின் நான்காம்கட்ட அச்சுறுத்தல் இலங்கையில் இல்லை. மூன்றாம் கட்ட அச்சுறுத்தலையே எதிர்கொண்டுள்ளோம் என்று தெரிவித்தார் சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி.**

நாடாளுமன்றத்தில் நேற்று எதிரணி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியல்லவால் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனா சமூகத்தொற்று அபாயத்திலிருந்து தற்போது நாடு விடுபட்டுள்ளது என்ற அறிவிப்பை சில காரணிகளை அடிப்படையாகக்கொண்டே நான் வெளியிட்டிருந்தேன். விஞ்ஞான பூர்வமாக 4 கட்டங்களாகவே இந்நோய் பரவல் கணிக்கப்படுகின்றது.

நோயாளி எவரும் இல்லை என்பது முதல் கட்டமாகும், ஆங்காங்கே நோயாளிகள் அடையாளம் காணப்படுதல் மற்றும் அவர்களின் தொடர்புகளைக் கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்கும் நிலையே 2ஆம் கட்டமாகும். கடற்படை, கந்தக்காடு போன்ற கொத்தணி பரவல்களே மூன்றாம்கட்ட அலையாக கருதப்படுகின்றது. சமூகத்தில் வகைதொகையின்றி எல்லா இடங்களிலும் நோயாளிகள் அடையாளம் காணப்படுதல், எங்கிருந்து எப்படி அவர்களுக்கு தொற்று பரவியது என்பதைக் கண்டுபிடிக்கமுடியாத நிலை நான்காம் கட்டமாகும். இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்நிலைமை காணப்படுகின்றது.

சமூகத்தொற்று குறித்த அறிவிப்பை நான் விடுப்பதற்கு முன்னர் 25 ஆயிரம் பேரை சமூகத்தில் இருந்து பரிசோதித்திருந்தோம். அவர்களில் எவருக்கும் வைரஸ் தொற்றவில்லை. நாளாந்தம் 10 பேரிடம் பி.சி.ஆர் பரிசோதனை நடத்துமாறு பிரதான வைத்தியசாலைகளுக்கு அறிவித்திருந்தோம். அதன்போதும் எவரும் அடையாளம் காணப்படவில்லை. நிமோனியா போன்ற நோயினால் உயிரிழந்தவர்களின் மாதிரிகளும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. அதன்போதும் தொற்று ஏற்படவில்லை. இவற்றை அடிப்படையாகக்கொண்டே செப்ரெம்பர் 3ஆம் திகதி நாட்டில் சமூகத்தொற்று இல்லை என்ற அறிவிப்பை விடுத்திருந்தேன். ஆனாலும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து எமது நாட்டவர்கள் அழைத்துவரப்படுகின்றனர், எனவே, தொடர்ந்தும் அவதானமாக செயற்படவேண்டும் எனவும் கூறியிருந்தேன். எனது உரையின் ஒரு பகுதியை மாத்திரம் தூக்கிப்பிடிக்காமல் முழு உரையையும் செவிமடுக்குமாறும் குறிப்பிட்டேன். சுவாசிக்கும்போதுகூட தொற்று பரவலாம் என்ற எச்சரிக்கையைக்கூட நான் விடுத்திருந்தேன்' என்றார் சுகதார அமைச்சர்.

இதன்போது எழுந்த லக்ஷ்மன் கிரியல்ல, அமைச்சர் ஏப்ரலில் விடுத்த அறிவிப்பு தொடர்பிலேயே நான் குறிப்பிட்டிருந்தேன், இவர் செப்ரெம்பர் பற்றி கதைக்கின்றார். ஏப்ரலில் எவ்வாறு குறிப்பிடமுடியும், எதனை அடிப்படையாகக்கொண்டு அறிவிப்பு விடுக்கப்பட்டது என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பவித்ராதேவி, 'எல்லா சந்தர்ப்பங்களிலும் நான் பொறுப்புடனேயே உரையாற்றியுள்ளேன். சமூகத்தில் தொற்று இல்லை என்பதாலேயே மாஸ்க் அணியாமல் எதிர்க்கட்சித் தலைவரால் நடமாட முடிந்தது. தேர்தலையும் எதிர்கொண்டனர். நாம் உண்மையையே கூறினோம். இலங்கையில் 4ஆவது கட்டம் இல்லை' என்றார். (ம-44)



## மாற்றுத் திறனாளிகள் அமைப்பு சிறந்த சமூக அமைப்பாக தெரிவு

கிளிநொச்சி, ஒக்.10

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேசமாற்றுத்திறனாளிகள்அமைப்புகிளிநொச்சி மாவட்டத்தில்சிறந்தசமூக அமைப்பாகத்தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இவர்கள் கடந்த 5ஆம் திகதி சமூக சேவைத் திணைக்களத்தில் நடைபெற்ற தேசிய மட்டப் போட்டிகளிலும் கலந்துகொண்டனர்.

மாதாந்தக் கூட்டம் நடத்துதல், மருத்துவ உதவிகள், சேமிப்பு, சிறந்தக் கருத்திட்டம், கல்வி உதவிகள் மற்றும் ஏனைய சமூக மட்ட செயற்பாடுகளைக் கொண்டு இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 25 மாவட்டங்களில் இயங்கும் அமைப்புக்களுடன் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. (எ-222)

## புத்தக கண்காட்சிக்கு சென்றவருக்கு கொரோனா



கொழும்பு,ஒக்.10

கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சியில் பங்கேற்றவருக்கு, கொரோனா தொற்றியுள்ளமை உறுதியானது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி, அவர் புத்தகக் கண்காட்சிக்கு வருகை தந்துள்ளார்.

அவர், புறக்கோட்டை பஸ் நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் ஆகியவற்றுக்கும் பயணித்துள்ளார். கடந்த 30 ஆம் திகதியன்று நுவரெலியாவுக்கும் சென்றுள்ளார். 36 வயதான, சிலாபத்தைச் சேர்ந்த நபருக்கே கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது. (க-இ)

## 10 மாத குழந்தைக்கு கொரோனா

கொழும்பு, ஒக். 10

கொழும்பு ரிஜ்வே ஹார்யா சிறுவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 10 மாதக் குழந்தைக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மினுவங்கொட பிரதேசத்தில் இருந்து நேற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையிலேயே கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. மேலதிக சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ம-இ)

## உழவு இயந்திரம் புரண்டதில் இருவர் இறப்பு, மூவர் காயம்

மட்டக்களப்பு, ஒக். 10

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிமுன்மாரி - கொக்கட்டிச்சோலை பிரதான வீதியில் பயணித்த உழவு இயந்திரம் புரண்டதில் இருவர் உயிரிழந்ததுடன், மூவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள், கொக்கட்டிச்சோலை கிராமத்தினைச் சேர்ந்த 17 வயதினையுடைய ஞானசேகரம் தினுஜன், 15 வயதினையுடைய ஜெயச்சந்திரன் சஞ்சிதன் என இனங்காணப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-150)

## உரமானியம் வழங்கல்

கிளிநொச்சி,ஒக்.10

கிளிநொச்சி அக்கராயன் குளம் கமநலசேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட பிள்ளையார் கமக்கார அமைப்புக்கு பெரும்போகத்துக்கான உரமானியம் வழங்கப்பட்டது.

இம் மானிய உரம் அக்கராயன் குளம் கமநலசேவை நிலையத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டதாக கமநலசேவைத் திணைக்கள பெரும். போக உத்தியோகத்தர் சிவராஜா பார்த்தீபன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

அக்கராயன் குளம் கமநலசேவைத் திணைக்களத்தின் கீழ் இம்முறை 5,250 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டு ள்ளது.

அந்தவகையில் பெரும்போக நெற்செய்கைக்கான உரமானியம் முதற்கட்டமாக பிள்ளையார் கமக்கார அமைப்புக்கு வழங்கியிருக்கின்றோம். தொடர்ச்சியாக ஏனைய கமக்கார அமைப்புகளுக்கும் உரமானியம் வழங்குவதற்குரிய செயற்பாட்டை துரிதமாக மேற்கொள்வோம் என்றார். (ஜ-246)

# கட்டாக்காலி மாடுகள் இறைச்சியாக்கப்படும் அவலம்!

## பிரதேச சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.10

வேலணை பிரதேசத்தில் பிடிக்கப்படும் கட்டாக்காலி மாடுகள், பசுக்கள் வெளியிடத்து ஆள்களுக்கு விற்கப்படுவதால் அவை இறைச்சியாக்கப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்று வேலணை பிரதேச சபை உறுப்பினர் க.நாவலன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வேலணை பிரதேசத்தில் போக்குவரத்துக்கும் விவசாயத்துக்கு சேதம் விளைவிக்கும் கால்நடைகள் பிரதேச சபையாலும், பிரதேச செயலகத்தாலும் பிடிக்கப்படுகின்றன.

இவ்வாறு பிடிக்கப்படும் கால்நடைகள் உள்ளூர் மக்களுக்கு வளர்ப்புக்காக வழங்கப்பட வேண்டும் அல்லது பண்ணைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும், தீவுப் பகுதியை விட்டு அவை வெளியே கொண்டு செல்லப்படக்கூடாது என்றும் வேலணை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த வேலணை பிரதேச சபை உறுப்பினர் க.நாவலன் தெரிவித்துள்ளதாவது


பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் கன்றுத்தாச்சிப் பசுக்கள் உட்பட 47 மாடுகள் அண்மையில் பிடிக்கப்பட்டிருந்தன.

அவை பகிரங்க ஏலத்தில் வெளியிடத்தைச் சேர்ந்த பண்ணையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.

பண்ணையாளருக்கு வழங்கப்பட்ட மாடுகள், இறைச்சியாக்கும் செயற்பாட்டுக்காக வெறொருவருக்கு விற்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (ஐ)

## மரண அறிவித்தல்



தோற்றம்
03 . 09 . 1959

மறைவு
07 . 10 . 2020

### இராமநாதன் இறங்கநாதன்

உரும்பிராய் கிழக்கு முருகன், வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் இறங்கநாதன் 07.10.2020 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான உரும்பிராயைச் சேர்ந்த இராமநாதன் - மகாலட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - மனோன்மணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஜெயலட்சுமியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் வினிதா (பிரான்ஸ்). விபுதா (பிரான்ஸ்). வினுஷன்( பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மாபதி (பிரான்ஸ்). இரகுநாதன் (பிரான்ஸ்). ஜெயமோகன் (ஜேர்மனி). இரஞ்சினி (உரும்பிராய்). அருள்ஜோதி (சுவிஸ்).குமுதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் இந்திரகுமார் (உரும்பிராய்). ரஞ்சிதமலர்(பிரான்ஸ்). ஸ்ரீகமலன் (சுவிஸ்). சுசிலன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் மயூரன்(பிரான்ஸ்). சிறில் (பிரான்ஸ்). தினோத் (பிரான்ஸ்). யனிஷியா (பிரான்ஸ்). சர்மின் (பிரான்ஸ்). ஜீவந்தன் (சுவிஸ்). பிரியங்கன்( சுவிஸ்). அபினன் (சுவிஸ்). சுஜித் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் றம்மியா (பிரான்ஸ்). கௌதம் (ஜேர்மனி) ஆகியோரின் சித்தப்பாவும் திஷாவின் (பிரான்ஸ்) தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
இந்திரகுமார் (மைத்துனர்)
இ. இரஞ்சினி (சகோதரி)

**077 615 2345**

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நாகமணி பொன்னம்மா

பிறப்பு
23.12.1942

இறப்பு
10.10.1995

எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம் மனதை விட்டு அகலாது

கணேஸ்வரம் வீதி,
குளமங்கால்,
மல்லாகம்.

*என்றும் உங்கள் நினைவுகளுடன்*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## பத்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர் திருமதி

### சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற யாழ் போதனா மருத்துவமனை உத்தியோகத்தர்)



தோற்றம்
31.07.1928

திதி:வளர்பிறை திருதியை
(10.10.2010)

மறைவு
10.10.2010

கருவில் கலந்த துணையே எம்
உயிரில் கலந்த உறவே அம்மா!
எங்கள் தாயே நீங்கள் இவ்வுலக
வாழ்வை விட்டு இறைவனடி சேர்ந்து
இன்றுடன் 10 ஆண்டுகள் நிறைவு
பெற்றுவிட்டன. ஆலம் விழுதுகள்
போல் உறவு ஆயிரம் இருந்து
என்ன. அழுவதை கேட்க ஆட்களும்
இல்லை.ஆறுதல் வழங்க யாருமே
இல்லை.உங்கள் நல்லாசிகள்
என்றும் எமக்கு கிடைக்க இறைவனை
வேண்டி உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இல.56,பிரம்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள் - சீதாலட்சுமி,
சிவனேஸ்வரி
பேர்த்தி - கஜேந்தினி

## வாகனம் விலைக்குத் தேவை

நல்ல நிலையில் உள்ள Townace Cr27 lotto flat roof (4 door) அல்லது Noah (Kr42 4Door) வாகனம் விலைக்குத் தேவை. தரகர்கள் தேவையில்லை.

075 815 2778

## காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு 'கோயில் குடியிருப்பில்' 2 காணிகள் விற்பனைக்கு.

077 508 4730.0047 46959255
mariagjoseph@gmail.com

## காணி குத்தகை

தெல்லிப்பளை வீமன்காமம்.தபாற்கந்தோர் ஒழுங்கையில் உள்ள வீமன்காமம் சந்தைக்கு முன்பாக உள்ள 40 பரப்பு காணி (நான்கு பக்கமும் அடைக்கப்பட்ட காணி)குத்தகைக்கு கொடுக்கப்படும்.

021 225 5169
077 396 0224

## வீடு வாடகைக்குத்தேவை

யாழ் நகரை அண்மித்த ஓர் சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு தேவை.

077 078 8700

## யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை

1. மேசன் - 1700.00 ரூபா (மதிய உணவும் வழங்கப்படும்)
2. லேபர் - 1300.00 ரூபா (மதிய உணவும் வழங்கப்படும்)

(வேலை தொடங்கும் நேரம்: 8.00 am - 5.45 p.m

தேவைப்படின் உணவு. தங்குமிடம் வழங்கப்படும்

தொடர்பு: 074 002 9658 (Dialog)

(திங்கள் - சனி வரை 8.30 am - 5.00 p.m வரை மட்டும் தொடர்புகொள்ளவும்)

## இரசாயனவியல் (Chemistry)

பிரபல பாடசாலையின் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரினால் தனி அல்லது குழு வகுப்புகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 076 386 0592


## பெயர் மாற்றம்

கிளாலி எழுதுமட்டுவாழில் வசிக்கும் **நல்லதம்பி நந்தகுமார்** ஆகிய நான் எனது பெயரை **முஹம்மத் பயாஸ்கான்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **முஹம்மத் பயாஸ்கான்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**முஹம்மத் பயாஸ்கான்**

# ஊரடங்குநேர பாஸ்' ஆனது பரீட்சை அனுமதிப்பத்திரம்

யாழ்ப்பாணம், ஒக். 10

ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்கள், பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தை தமது ஊரடங்கு நேரத்தில் பயணிப்பதற்கான அனுமதிப் பத்திரமாக பயன்படுத்தமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)


## நாகபூஷணி திருமண சேவை

மணமகன், மணமகள் அனைவருக்கும் பதிவு கட்டணங்கள் யாவும் இலவசம் (04.10.2020 முதல் 11.10.2020 வரை)

நீங்கள் விரும்பும் உள்நாட்டு. வெளிநாட்டு மணமக்கள் ஏராளமாக உள்ளனர் மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் பெற்றுக்கொள்ளலாம்.ஞாயிறும் திறந்திருக்கும்.

**இல.5, ஐந்தாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**


## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

06 . 06 . 1970



09 . 10 . 2012

### திருமதி காயத்திரி பாலமுரளீதரன்

(ஆசிரியர் – கொக்குவில் இந்துக் கல்லூரி)

**திதி: தேய்பிறை நவமி**

காலமது மாறும்
காயமது ஆறும் – ஆனால்
காலத்தில் நாம் பட்ட
காயத் தழும்பு மாறுமா?
உயிருக்குயிராயிருந்து
எமைக் காத்த அம்மாவே!
எத்தனை ஆண்டுகள் உருண்டாலும்
ஆறுமா எம் துயரம்
மாறாது உங்கள் நினைவு.
உங்கள் ஆன்மா சாந்தியடைய
அம்பிகையின் அடி பிடித்து வேண்டுகின்றோம்.

No19, 6 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### உருத்திரசிங்கம் துரைசிங்கம்

(யாழ்ப்பாணம் சிவசக்தி கடைச்சல் தொழிலக முன்னாள் உரிமையாளர்)



வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உருத்திரசிங்கம் துரைசிங்கம் (யாழ்ப்பாணம் சிவசக்தி கடைச்சல் தொழிலக முன்னாள் உரிமையாளர்) நேற்று முன்தினம் (08.10.2020) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் உருத்திரசிங்கம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும். திரு நாவுக்கரசு நாகேஸ்வரி அவர்களின் அன்பு மருமகனும். அற்புதராணியின் அன்புக் கணவரும். பிரதீப் அவர்களின் பாசமிகு தந்தையும். காலஞ்சென்ற நாகேஸ்வரி. இரத்தினசிங்கம் (கனடா). தர்மகுலசிங்கம் (கொழும்பு). யோகேஸ்வரி (லண்டன்). காலஞ்சென்ற சபாநடேசன் (சக்திவேல் தொழிற்சாலை). நிர்மலானந்தன் (ஜேர்மன்). திலகவதி. சுகிர்தவதி. கலாவதி (அவுஸ்ரேலியா). லிங்கேஸ்வரன் (சுவிஸ்). தேவகனி (பிரான்ஸ்). வரதலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும். சிவசுப்பிரமணியம் காலஞ்சென்ற பொன்னம்பலம் கணேசன் மற்றும் புஸ்பராணி. சண்முகசுந்தரம். இந்திரராசா (சுவீடன்). செல்வராணி (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.10.2020) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அரசடி வீதி. வடலியடைப்பினில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

# அரச சாரதிகள் சங்கம் நாளைமறுதினம் கவனவீர்ப்பு

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் தம்மை வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுமுன்தினம் சுகவீன விடுப்பில் குதித்த நிலையில், அவர்களுக்கான இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தி நாளைமறுதினம் திங்கட்கிழமை ஒருநாள் அடையாள சுகவீன விடுப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என்று வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது.


இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தினர் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் நேற்றுமுன்தினம் கோரிக்கை முன்வைத்து மனு கையளித்து தமது போராட்ட முடிவையும் அறிவித்துள்ளனர்.

மனுவில், இரண்டு வருடங்களாக இணைந்த சேவை சாரதிகளின் வருடாந்த இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் கடந்த ஜனவரியில் ஜனாதியின் கவனத்துக்கு கொண்டு சென்றதையடுத்து வருடாந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு முகவரியிட்டு எமது சங்கத்துக்கு பிரதியுடன் பதில்க் கடிதம் அனுப்பப்பட்டது.

அதன்படி இடைநிறுத்தப்பட்டிருந்த வருடாந்த இடமாற்றம் கடந்த16 ம் திகதி நடைமுறைக்கு வந்திருந்தது.

ஆனால் இடமாற்றம் வழங்கப்பட்ட 35 சுகாதார திணைக்கள சாரதிகளில் 25 சாரதிகள் இடமாற்ற கட்டளையை பின்பற்றாமல், தங்களை வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்வதை நிறுத்துமாறும் தங்களது இணைந்த சாரதி சேவையை மூடிய சுகாதார சேவையாக்குமாறு கோரிக்கை முன்வைத்து போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சுகவீன விடுப்பு போராட்டத்தை செய்யவுள்ளோம்" என்றுள்ளது. (கு)

## மரண அறிவித்தல்



தோற்றம் 29.08.1942 — மறைவு 09.10.2020

### முருகேசு கிருஸ்ணபிள்ளை

(கட்டடக் கலைஞர்)

அல்வாய் சக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் அல்வாய் தெற்கு கொக்கட்டியாவளவு கிருஸ்ணாவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கிருஷ்ணபிள்ளை நேற்று (09.10.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற மகாமலரின் அன்புக் கணவரும் மற்றும் மலர்வதனி. காலஞ்சென்ற கிருஸ்ணகுமார் மற்றும் மலர்விழி. பிரதீபன். மலர்மகள். கிருஸ்ணா ஆகியோரின் பாசமிகு தந்தையும். செல்வநேசன். நக்கீரன். திருமதி காமினி - பிரதீபன். தங்கநிதி. மணாளன் ஆகியோரின் அன்பு மாமனாரும். காலஞ்சென்ற வள்ளியம்மா மற்றும் கணேசம்மா. காலஞ்சென்ற அமிர்தலிங்கம். மற்றும் அன்னபாக்கியம். யோகசரஸ்வதி. தணிகாசலம். சகுந்தலா ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்றவர்களான சிவலிங்கம். சின்னத்துரை மற்றும் நாகலிங்கம். நாராயணசாமி. கருணாநிதி (பேராசிரியர்). கருணாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்ஷினி. அமுதா. ஜெனித்தா ஆகியோரின் அன்புப் பெரியதந்தையும். வர்மா. விதுர்சன். பரதன். நக்ஷன். நிரூஷன். அஷேன். அஷான். அனிஷ்கா. அகீஷன். மகிஷா. மிர்த்திக். திருமதி கோபிகாவர்மா ஆகியோரின் அன்புப் பேரனும். அத்விக்கினின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2020) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் அல்வாய் பங்கு வேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அகீஸ்வரம். அல்வாய்.

தகவல் :
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 10 . 1941



மறைவு 10 . 10 . 2018

### அமரர் சிவயோகன் சரஸ்வதி

*அன்பான அம்மாவே!*
*அன்புத் துணைவியே!*

அன்புடனும் நன்றியுடனும்
நினைவு கூருகின்றோம்
என்றும் எம் உள்ளத்தில்
உயிராய் வாழ்வீர்



"முருக நிழல்"
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

இ.சிவயோகன் (கணவர்)
சி.சசிந்தன் (மகன்) - ஜெயவதனி குடும்பம்
மணிவண்ணன் - சசினி (மகள்) குடும்பம்
சி.சஞ்ஜீவன் (மகன்) - சாளினி குடும்பம்
பேரப்பிள்ளைகள்.

## சமூகத்தொற்று.....

நேற்று வரை 18 மாவட்டங்களில் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மினுவாங்கொட பிரண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணாதவர்களும் நேற்றும் நேற்றுமுன்தினமும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனால் நாட்டு மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

சமூகத்துக்குள் கொரோனாவின் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில், கொரோனா வைரஸ் பரவல் தற்போது சமூகப் பரவலாக மாற்றமடையவில்லை என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்று நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார். இதனால் எதிரணியினர் கடும் சீற்றமடைந்துள்ளனர்.

அதேவேளை, இலங்கையில் மீண்டும் ஏற்பட்டுள்ள கொரோனா பரவலுக்குக் காரணம் என்ன என்பதை வெளிப்படுத்துமாறு நாடாளுமன்றத்தில் நேற்று எதிரணியினர் கேள்வி எழுப்பிய போதிலும் அதற்குப் பதிலளிக்காமல் சுகாதார அமைச்சர்மௌனம் காத்துள்ளார்.

இதனிடையே சமூகத்துக்குள் ஊடுருவியுள்ள கொரோனாவுக்கு விரைவில் முடிவு கட்டியே தீருவோம் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார். மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை கொத்தணி பரவலின் மூல காரணத்தை இன்னமும் கண்டறியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், கொரோனா வைரஸ் பரவல் தற்போது சமூகப் பரவலாக மாற்றமடையவில்லை என்று சுகாதார அமைச்சர் நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பில் இராணுவத் தளபதியிடம் வினவியபோது, அது அமைச்சரின் கருத்து; இது எனது கருத்து, என்று மட்டும் பதிலளித்தார். மேற்படி கேள்வி தொடர்பில் மேலதிக கருத்து எதையும் தெரிவிக்க இராணுவத் தளபதி விரும்பவில்லை.

### 35பேருக்குத் தொற்று

இதேவேளை, நேற்று இரவு 9 மணி வரை 35 பேர் கொரோனாத் தொற்றுடன் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி தெரிவித்தார்.

மினுவாங்கொட பிரண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் இருவருக்கும், அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய 24 பேருக்கும், ஏனைய மூவருக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் மினுவாங்கொட பிரண்டிக் ஆடைத்தொழிற்சாலையுடன் தொடர்புடைய 1072 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர், என்றும் அவர் கூறினார்.

நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் 3 பேருக்கும், நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் 5 பேருக்கும் கொரோனா வைரஸ் எப்படிப் பரவியது என்று கண்டறியப்படவில்லை. இவர்கள் 8 பேரும் மினுவாங்கொட பிரண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணாதவர்கள். குறித்த 8 பேரும் வெவ்வேறு பிரதேசங்களில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர், என்றும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் நேற்றிரவு 9 மணிவரை மொத்தமாக 4 ஆயிரத்து 504 பேர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். அவர்களில் 3 ஆயிரத்து 296 பேர் குணமடைந்துள்ளனர். 13 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்து 195 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ.5,22)

## கோண்டாவிலை.....

மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவருக்கு 'வீக் பொசிட்டிவ்' (குறைந்தளவு கொரோனாத் தொற்று) ஏற்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வடக்கின் பல இடங்களிலிருந்தும் பெறப்பட்ட 255 மாதிரிகள் நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது என போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதனையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் கோண்டாவிலில் உள்ள அவரது வீட்டுக்குத் திரும்பியிருந்தார். அதன் பின்னர் அவருக்கு சுகவீனம் ஏற்பட்டிருந்த நிலையில், பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

'கொரோனாத் தொற்றுக்கான சிகிச்சை பெற்று வீடு திரும்பியவர்களுக்கு பின்னர் மேற்கொள்ளப்படும் சோதனையில் தொற்று அடையாளம் காணப்படுகின்றது. அது வீக் பொசிட்டிவ். இவ்வாறானதொரு தொற்றே கோண்டாவில் வாசிக்கும் அடையாளம் காணப்பட்டது' என்று கேதீஸ்வரன் குறிப்பிட்டார். (ஒ.5)

## அனலைதீவு.....

கள் நடமாடியதை அடுத்து அனலைதீவு மற்றும் காரைநகரின் சில பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் இருந்து மஞ்சள் கடத்தி வந்த இருவர் யாழ்ப்பாணத்தில் நடமாடுகின்றனர் என்று அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலை அடுத்து, அவர்களில் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். மற்றைய நபர் தலைமறைவாகியிருந்தார்.

அந்த நபர் காரைநகரில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவர் காரைநகரில் அதிகளவிலும், யாழ்ப்பாணத்திலும் நடமாடியுள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்த இருவரும் அனலைதீவிலும் நடமாடியுள்ளனர்.

அவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டு அந்த அறிக்கைகள் கிடைக்கும்வரையில் அனலைதீவு மற்றும் காரைநகரின் சில பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ,ஓ,26)

## தனிமைப்படுத்தலில்.....

உயிரிழந்தார்.

கடந்த 4ஆம் திகதி கொழும்பிலிருந்து மொனராகலைக்கு தனியார் பேருந்தில் பயணித்த பெண்ணொருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளார். தனிமைப்படுத்தலில் இருந்து உயிரிழந்தவரின் மகளும் அதே பேருந்தில் பயணித்திருப்பது பின்னர் கண்டறியப்பட்டது. அதைத் தொடர்ந்து முழுக் குடும்பமும் சுகாதார அதிகாரிகளால் அவர்களது வீட்டில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், 70 வயதானவர் நேற்று இரவுதிடீர் நோயால் பாதிக்கப்பட்ட நிலையில், மொனராகலை மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், உயிரிழந்தார். அவர் கொரோனாவால் உயிரிழந்தாரா இல்லையா என்பதைக் கண்டறிய பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. (மஜ)'

## கலைப்பீட.....

டையவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடங்களைச் சேர்ந்த கலைப்பீட மாணவர்கள் 21 பேருக்கு நேற்று முன்னிரவு முதல் மறுஅறிவித்தல் வரையில் பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைவதற்கு, துணைவேந்தர் மூத்த பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜாவின் கையெழுத்துடன் தடை விதிக்கப்பட்டுள்ளது. கலைப்பீடச் சபையால் முன்னெடுக்கப்பட்ட பூர்வாங்க விசாரணைகளின் அடிப்படையிலேயே இந்தத்தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## ரிஷாத்தின் .....

னின் சகோதரரான ரியாட் பதியூதீன் குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் விடுதலை செய்யப்பட்டமைக்கு எதிராக ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் 100 பேரினால் கையெழுத்திடப்பட்ட கடிதம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் அலரி மாளிகையில் வைத்து நேற்றுக் கையளிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்ட பயங்கரவாதிகளுக்கு உதவியாக செயற்பட்ட சந்தேகத்தின் பேரில் ரியாட் பதியூதீன் கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் கைது செய்யப்பட்டார். அவரது கைது தொடர்பில் வலுவான சாட்சிகள் காணப்பட்ட போதிலும் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படாது, எவ்வித சட்ட அனுமதியுமின்றி குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த தன்னிச்சையான செயற்பாடு தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு பயங்கரவாதத்துக்கு துணையாக செயற்பட்ட ரியாட் பதியூதீனை மீண்டும் கைது செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பிரதமரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.இ)

## மன்னாரில்.....

மன்னார் மாவட்ட பதில் மாவட்டச் செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் பணிபுரிந்த வென்னப்புவவைச் சேர்ந்த ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டமையை யடுத்து மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவருடன் நேரடித் தொடர்புடைய 42 பேரும் அவருடன் அவ்வப்போது தொடர்பில் இருந்தார்கள் என்னும் சந்தேகத்தில் 51 பேரும் அடையாளப்படுத்தப்பட்டு அவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ஒ.5,213)

## ஊரடங்கு.....

பிறப்பிக்கும் திட்டம் இல்லை என்று பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இதே கருத்தை இராணுவத் தளபதியும் கொரோனா தடுப்புச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வாவும் குறிப்பிட்டுள்ளார். (ஒ.ம.இ)

## விசாரணைக்கு.....

வியாழக்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவம் மற்றும் தாக்குதல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்வதற்காக தனிநபர் விசாரணை ஆயம் நியமனம் இடம் பெற்றுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை கூடிய விசேட பேரவைக் கூட்டத்தில் வைத்து யாழ். பல்கலைக்கழக முன்னாள் வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் எம். நடராஜசுந்தரம் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காகப் பேரவையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தனி நபர் ஆயத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின்போது துணைவேந்தர் எஸ். சிறிசற்குணராஜாவும் சாட்சியமளிக்கவுள்ளார். அத்துடன் இந்த ஆயத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணை அறிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில், துணைவேந்தர் தலையிட மாட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

துணைவேந்தர் மீதும் மாணவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளதாலேயே இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

## விரிவுரையாளர்.....

துணைவேந்தர், விரிவுரையாளர்கள் மற்றும் பாதுகாப்பு ஊழியர்கள் தாக்கப்பட்டமையைக் கண்டிக்கும் வகையிலும், தாக்குதலாளிகள் அடையாளம் காணப்பட்டு, அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் கலைப்பீட விரிவுரையாளர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதற்கு முடிவு செய்துள்ளனர்.

நேற்றுக் காலை இடம்பெற்ற விரிவுரையாளர்கள் சந்திப்பொன்றினை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. நேற்று நண்பகல் 12 மணி முதல் அனைத்து வகுப்புகளுக்கும் செல்லாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பல்கலைக்கழக கலைப்பீடத்தில் இரண்டாம், மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் முற்றிய நிலையில் சமரசப்படுத்த முனைந்த துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, கலைப்பீட விரிவுரையாளர்களான எஸ்.ஜீவசுதன், எஸ்.ரமணராஜா மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தாக்கப்பட்டிருந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்தே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்று கலைப்பீட விரிவுரையாளர்கள் வகுப்புகளுக்குச் செல்ல மறுத்துள்ளனர். (ஒ.இ)'

## சீனக் குழு.....

சுதத் சமரவீர தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேலும் மேற்கண்டவாறு கூறினார்.

'சீனாவிலிருந்து உயர்மட்ட தூதுக்குழு வந்துள்ளது. எனினும் அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை. நாட்டில் இவ்வாறானதொரு நிலைவரம் காணப்படும் போது இதுபோன்ற செயற்பாடுகளை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, இதனை வெளிவிவகார அமைச்சிடமே கேட்க வேண்டும். நாம் நாடு என்ற ரீதியில் செயற்படும்போது ஒரே வகையில் செயற்பட்டால் எல்லா விடயங்களையும் செய்ய முடியாமல் போகும். 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் ஈடுபடவேண்டியிருக்கிறது. இவ்வாறான நிலைமைகளின் போது 15 ஆவது தினத்தில் தொற்று ஏற்படாதா என்று சிலர் வினவுகின்றனர். அவ்வாறெனில் மேலும் ஒரு வாரத்திற்கு தனிமைப்படுத்தல் காலத்தை அதிகரிக்க முடியுமா ? எனவே தான் அனைத்து விடயங்களிலும் இதனை பின்பற்ற முடியாமலுள்ளது. என்றார். (ஒ.இ)

# தமிழர் தேசத்தை அங்கீகரித்து தீர்வைத் தர வேண்டும் இந்தியா

## நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் வலியுறுத்து

**கொழும்பு, ஒக்.10**

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கான தொடக்கப் புள்ளியாகவேனும் நாங்கள் ஏற்றுக்கொள்ளாவிடினும், நாங்கள் அந்தச் சட்டத்தை நிராகரிக்கின்றோமே தவிர இலங்கை - இந்திய உடன்படிக்கையை நிராகரிக்கவில்லை. மாறாக இந்த உடன்படிக்கையின் சரத்துக்களின்படி தமிழர் தேசத்தை அங்கீகரித்து அந்த ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றி அதனடிப்படையில் இந்தத் தீவில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் நிலைத்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வை எட்டுவதற்கு இந்தியா பொறுப்புக்கூறும் கடப்பாடு உடையது என்பதை வலியுறுத்துகின்றோம்.**



இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலே அவர்கள் சம்பந்தப்பட்ட மிக முக்கியமான சர்வதேச உடன்படிக்கைகளில் ஒன்று இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையாகும். தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே இந்த உடன்படிக்கையின் முக்கிய குறிக்கோளாக அமைந்திருந்தது.

தமிழ் மக்கள் இந்த உடன்படிக்கையின் ஒரு தரப்பினராக் இணைத்துக்கொள்ளப்படாதது இந்த உடன்படிக்கையின் மாபெரும் குறைபாடாக இருக்கிறது. தமிழ் மக்கள் இந்த உடன்படிக்கையின் ஒரு தரப்பாக தவிர்க்கப்பட்டதால் தமிழ் மக்களின் சார்பில் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இந்தியாவுக்கு இந்த உடன்படிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கான மேலதிகமான ஒரு கடப்பாடு உள்ளது. ஆனால், உண்மை நிலைவரமோ வேறு.

அன்று உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இலங்கை அரசோ அந்த உடன்படிக்கையையும், அதில் அடங்கிய சரத்துக்களையும் தான் நடைமுறைப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தையும், மாகாண சபைகள் சட்டத்தையும் அறிமுகப்படுத்தியது.

இந்தச் சட்டங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருந்தபோது, அப்போதிருந்த முதன்மையான தமிழ்க் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்திக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது. அந்தக் கடிதத்தின் முடிவில், இக்காரணங்களுக்காக தமிழ் மக்கள் திருப்தியடையும் வகையில் இவ்விடயங்களுக்குத் தீர்வு காணப்படாமல், மேற்படி சட்டமூலங்களை இப்போதுள்ள வடிவத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டாம் என ஜனாதிபதி ஜயவர்தனவை வற்புறுத்துமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறோம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கும் இடையில் பெரும் இடைவெளி காணப்படுகின்றது. நாம் 13ஆவது திருத்தச் சட்டத்தை நிராகரிக்கின்றோம். தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இது ஓர் ஆரம்பப் புள்ளியாகக் கூட அமையவில்லை என்ற காரணத்தினாலேயே நாம் 13ஆவது திருத்தச் சட்டத்தை நிராகரிக்கின்றோம்.

தமிழ் மக்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைக் காரணம் காட்டி இந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிவதற்கு இதனை ஒரு சந்தர்ப்பமாக ஆளும் தரப்பினரும், ஜனாதிபதியும், பிரதமரும் நினைக்கலாம். ஆனால், அது ஒருபோதும் நடக்கப் போவதில்லை. ஏனெனில், இந்திய - இலங்கை உடன்படிக்கையும் 13ஆவது திருத்தச் சட்டமும் முற்றிலும் வேறு வேறானவை. அப்போதைய அரசு இந்திய - இலங்கை உடன்படிக்கையை தன்னிச்சையாக வியாக்கியானப்படுத்தியதன் விளைவே 13ஆவது திருத்தச் சட்டம்.

ஆகவே, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான தொடக்கப் புள்ளியாகவேனும் நாங்கள் ஏற்றுக்கொள்ளாவிடினும், நாங்கள் அந்தச் சட்டத்தை நிராகரிக்கின்றோமே தவிர இலங்கை - இந்திய உடன்படிக்கையை நிராகரிக்கவில்லை. மாறாக இந்த உடன்படிக்கையின் சரத்துக்களின்படி தமிழர் தேசத்தை அங்கீகரித்து அந்த ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றி அதனடிப்படையில் இந்தத் தீவில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வை எட்டுவதற்கு இந்தியா பொறுப்புக்கூறும் கடப்பாடு உடையது என்பதை வலியுறுத்துகின்றோம் - என்றார். (எ-22-26)

# கிளிநொச்சியில் தங்கியுள்ள கம்பஹாவாசிக்கு பி.சி.ஆர்.

கிளிநொச்சியில் தங்கியிருக்கும் கம்பஹாவைச் சேர்ந்த ஒருவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இவரது மாதிரிகள் நேற்றுமுன்தினம் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. இவர் கிளிநொச்சியில் வேலை நிமித்தம் தங்கியுள்ளார். இவருக்கு தும்மல் மற்றும் இருமல் போன்றன காணப்பட்டமையை அடுத்தே அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர் விடுமுறையில் கடந்த 7ஆம் திகதி கம்பஹா சென்று கடந்த 24ஆம் திகதியே கிளிநொச்சி திரும்பியுள்ளார்.

அதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் கற்கும், வெளி மாவட்டங்கள் சென்று வந்த 6 மாணவர்களுக்கும், கிளிநொச்சியில் இருமல், சளி அறிகுறிகளுடன் காணப்பட்ட ஒருவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-6)

# மயானங்கள் உரிய வளத்தோடு செயற்படுவதை உறுதி செய்க!

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.10

வடக்கிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக எல்லைக்குள் நிர்வகிக்கப்படுகின்ற சகல மயானங்கள் உரியவளங்களுடன் செயற்படுகின்றமையை உள்ளூராட்சி மன்றங்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இதனை வடக்கு மாகாண ஆளுநர் சகல உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர், செயலாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற ஆளுகைக்குட்பட்ட மயானங்களின் முழுமையான பராமரிப்பு, அபிவிருத்தி தொடர்பில் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணத்துக்குட்பட்ட 34 உள்ளூராட்சி சபைகள் ஒவ்வொன்றின் கீழும் மயானங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பாலான மயானங்கள் அபிவிருத்தியின்றி உள்ளமை தொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்துக்குட்பட்ட சகல மயானங்களும் உள்ளக வீதி, மயான எரிகொட்டகை, மயான மண்டபம், சிறு ஆலயம், கிணறு சுற்று மதில், வெளிச்ச வசதி, பூந்தோட்டம் உட்பட சகல வசதிகளையும் உள்ளடக்கியதாக பராமரிக்க உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், மேயர்கள், செயலாளர்கள் தவிசாளர்கள் முன்வர வேண்டும்.

மயானங்கள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் தகுந்த அதிகாரி என்ற வகையில், அதிக கவனம் எடுத்து செயற்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும்-என்றுள்ளது. (ற-50)

# கல்லுண்டாயில் கழிவுகள் கொட்டுவதை நிறுத்துக!

## வலி. தென் மேற்கு அபிவிருத்தி சபை தலைவர் கோரிக்கை

கல்லுண்டாய்வெளியில் பொறிமுறையற்ற திண்ம கழிவகற்றும் செயன்முறை உடன் நிறுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாணம் மாநகரக் கழிவுகள் கல்லுண்டாய் கடற்கரை வெளியில் கொட்டப்படுமாயின் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று வலி. தென் மேற்கு பிரதேச அபிவிருத்திச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கல்லுண்டாய்வெளியில் பொறிமுறையற்று திண்மக் கழிவுகள், சமையல் கழிவுகள், இறந்த மிருகங்களின் கழிவுகள், மனிதக் கழிவுகள் கொட்டப்படுகின்றன. கல்லுண்டாய் கழிவுக் குதத்தால் ஆனைக்கோட்டை, நவாலி, காக்கைதீவு மற்றும் வலி. தென்மேற்கு பிரதேச மக்களுக்கு ஆபத்தான நோய்கள் பரவலாம் என்று சுகாதாரப் பிரிவு மீண்டும், மீண்டும் எச்சரித்துள்ளது.

ஒரு பிரதேசத்தின் கழிவுகளால் இன்னொரு பிரதேச மக்கள் ஆபத்துக்களை எதிர்கொள்வதை அனுமதிக்க முடியாது. மழை காலத்துக்கு முன்னர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகின்றோம். - என்றார். (எ-50)



புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ள பாடசாலைகளில் தொற்றுநீக்கும் செயற்பாடு வவுனியா பாடசாலைகளில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது. (எ-18)

# டெல்லி கப்பிரல்ஸ் வெற்றிப் பயணம்



ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை 46 ஓட்டங்களால் வீழ்த்தி டெல்லி கப்பிரல்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது. அத்துடன் புள்ளிப் பட்டியலிலும் முதலிடம் பிடித்தது.

நடப்பு ஐ.பி.எல். தொடரின் 23ஆவது ஆட்டம் சார்ஜாவில் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. துடுப்பெடுத்தாட களமிறங்கியது டெல்லி அணி. ராஜஸ்தான் அணி ஆதிக்கம் செலுத்தியது. தவான் 5 ஓட்டங்களுடன் இரண்டாவது பந்துப் பரிமாற்றத்தில் வெளியேறினார். மறுமுனையில் வெளுத்து வாங்கிய பிரித்திவி சா 10 பந்துகளில் 19 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் ஸ்ரேஸ் ஐயர் 18 பந்துகளில் 22 ஓட்டங்களுடனும், ரிசப் பந்த் 9 பந்துகளில் 5 ஓட்டங்களுடனும் களத்தை விட்டு வெளியேற 79 ஓட்டங்களுக்கு 4 இலக்குகள் என்ற நிலைக்கு ஸ்கோர் போர்ட் வந்தது.



ஸ்றொய்ன்ஸ் மற்றும் ஹெட்மயர் இணைந்து சிறப்பான ஆட்டத்தை அதிரடியாக ஆடினர். ஹெட்மயர் 24 பந்துகளில் 45 ஓட்டங்களைக் குவித்தார். பின் வரிசையில் அக்ஸர் பட்டேல் 8 பந்துகளில் 17 ஓட்டங்களைக் குவித்தார். 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ராஜஸ்தான் ஆட்டத்தை ஆரம்பித்தது. அணித் தலைவர் ஸ்மித் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கவில்லை. ஆனாலும் செய்யப்பட்ட மாற்றம் அவர்களுக்கு கைகொடுக்கவில்லை. ஜெய்ஸவால் 36 பந்துகளில் 34 ஓட்டங்களையும், பட்லர் 8 பந்துகளில் 13 ஓட்டங்களையும், ஸ்மித் 17 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பின்வரிசையில் ராகுல் ரிவேட்டியா மாத்திரம் 29 பந்துகளில் 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். 19.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 138 ஓட்டங்களையே ராஜஸ்தானால் பெற முடிந்தது. பந்து வீச்சில் ரபாடா 35 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார். 4 பந்துப் பரிமாற்றங்கள் வீசி 22 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளைக் கைப்பற்றிய டெல்லி கப்பிரல்ஸ் அணி வீரர் அஸ்வின் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஒ-5)

## உலக சாதனை

ஸ்பெய்னில் நடைபெற்ற தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் உகண்டா வீரரான ஜோசுவா செப்டெகி உலக சாதனை படைத்துள்ளார். இந்த தடகளப் போட்டி ஸ்பெய்ன் நாட்டின் வேலன்சியா நகரிலுள்ள துரியா அரங்கில் நடைபெற்றது. கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறைந்த அளவிலான நபர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டது.

இவற்றில் விளம்பரதாரர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட 400 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப் பட்டது.

இந்தத் தடகளப் போட்டியின் 10 ஆயிரம் மீற்றர் பிரிவில் பங்கேற்ற உகண்டாவைச் சேர்ந்த தடகள வீரர் ஜோசுவா செப்டெகி (வயது 24), 26 நிமிடங்கள் 11.02 விநாடிகளில் பந்தயத் தூரத்தைக் கடந்தார். கடந்த 2005 ஆம் ஆண்டு எதியோப்பியா நாட்டைச் சேர்ந்த தடகள வீரர் கெனெனிசா பெகெலே 26 நிமிடங்கள் 17.53 விநாடிகளில் போட்டித் தூரத்தை நிறைவு செய்திருந்தமையே இதுவரை உலக சாதனையாக இருந்தது. (ற)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ராச வீதி நவக்கிரி வங்கி வீதி. அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை முன்பாக 22 பரப்பு காணி பிரித்து கொடுக்கப்படும். 2 பரப்பாக. விலை பின் காணி 1 பரப்பு- 5 லெச்சம். முன்காணி 6 லெச்சம்.

தொடர்பு : 077 805 1655

யாழ்ப்பாணம் கொட்டடி சீனிவாசகம் வீதியில் 2 பரப்பு.

யாழ்ப்பாணம் ஊரெழு பொக்கன் வீதியில் 3 பரப்பு காணி உள்ளது.

தொடர்பு : 077 190 4814

யாழ்ப்பாணம் ராச வீதியில் 2 பரப்பு காணி உள்ளது. தேசிய கல்வியியற் கல்லூரி வீதியில் 2 பரப்பு காணி உள்ளது.

தொடர்பு:
குரு 077 468 3354, 076 221 2037

**கணக்காளர் தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் இடம்பெறும் மருந்தகம் ஒன்றிற்கு கணக்காளராக பணிபுரிவதற்கு முன் அனுபவமுள்ள கணக்காளர் தேவை.

தொடர்பு:076 624 8529

**A/L தொழினுட்பப்பிரிவு**
S.Shakthy Bsc (Hons), Msc.
TP: 0771703549, 0761703542
ZOOM ONLINE CLASSES
-இலவச வகுப்புக்கள்-
A/L 2022
தொழினுட்பவியலுக்கான
விஞ்ஞானம்
விசை
திங்கள் முதல் வெள்ளி வரை
7.30-8.30 pm
Meeting ID:509 028 7747
Passcode:TWSFT2020
A/L 2022 பிரிவைச் சேர்ந்த எவரும் பங்குபற்றலாம்.

**A/L தொழினுட்பப்பிரிவு**
S.Shakthy Bsc (Hons), Msc.
TP: 0771703549, 0761703542
ZOOM ONLINE CLASSES
-இலவச வகுப்புக்கள்-
A/L 2021
தொழினுட்பவியலுக்கான
விஞ்ஞானம்
தரம் 12 இற்கான SFT பாடங்களின்
Revision and Past Paper Discussion
திங்கள் முதல் வெள்ளி வரை
5.00-6.00 am
Meeting ID:509 028 7747
Passcode:TWSFT2020
A/L 2021 பிரிவைச் சேர்ந்த எவரும் பங்குபற்றலாம்.

## பெண்களுக்கான குத்துச்சண்டையில் முல்லைத்தீவு மாவட்டம் சம்பியன்

முல்லைத்தீவு, ஒக்.10

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்டங்களுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான குத்துச்சண்டையில் முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இந்தக் குத்துச்சண்டைப் போட்டி கடந்த 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியின் குத் துச்சண்டைத் திடலில் நடைபெற்றது. இதில் முல்லைத்தீவு மாவட்ட அணி 3 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள், ஒரு வெண்கலப் பதக்கம் உட்பட 6 பதக்கங்களைக் கைப்பற்றிச் சம்பியனானது.

வவுனியா மாவட்ட அணி 2 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 7 பதக்கங்களைக் கைப்பற்றி இரண்டாமிடத்தையும், மன்னார் மாவட்ட அணி ஒரு வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றி மூன்றாமிடத்தையும் சுவீகரித்தன. (ற-422)





## கால்பந்து பயிற்சிகள் தற்காலிக இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக்.10

அரியாலை யாழ். கால்பந்தாட்ட சங்கத்தின் பயிற்சி நடவடிக்கைகள் யாவும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று தலைமைப் பயிற்றுநர் ம.டனிஸ்ரன் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால், இந்த இடைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மீள ஆரம்பிக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-422)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 புரட்டாதி 24 சனிக்கிழமை (10.10.2020) சிகரம் : 17

பெருந்தொற்றுக் காலமது கம்பஹாவில் முளைவிட
மருந்து இனி முடக்கலும் முகக்கவசமுமேயென– உருக்கொண்டு
ஆடினாலும் கொலர்ஷிப் எக்ஸாம் என்று வந்துவிட்டால்
ஓடிபோகுமாம் கொரோனாவும் கோதாரியும் காண்!

புங்குடுதீவு பூசாரி கொலை 02



சாதனை சத்திரசிகிச்சை 12







# மஞ்சள் – தேங்காய் – வைரஸ் – இருபதாவது திருத்தம்

நிலாந்தன்

நாடாளுமன்றத்தை ராஜபக்சக்கள் கைப்பற்றுவதற்கு முன்பு நாட்டில் கஞ்சா கடத்துவோரின் படங்கள் அவ்வப்போது ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருந்தன. ஆனால் இப்பொழுது மஞ்சள் கடத்தி அகப்படுவோரின் படங்கள் ஊடகங்களில் வெளிவருகின்றன. கஞ்சாவின் இடத்தை மஞ்சள் பிடித்திருக்கிறது. அரசாங்கம் மஞ்சள் இறக்குமதியைத் தடை செய்துவிட்டது. இதன் விளைவாக உள்ளூர் சந்தைகளில் மஞ்சளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. உள்ளூரில் மஞ்சள் உற்பத்திக் கிராமங்களை உருவாக்குவதன் மூலம் மஞ்சள் தேவையைப் பூர்த்திசெய்யலாம் என்று அரசாங்கம் திட்டமிடுகிறது. கிளிநொச்சியில் உள்ள ஒரு மஞ்சள் உற்பத்தியாளரிடம் கேட்டேன்.

"சாதாரணமாக பச்சை மஞ்சள் எவ்வளவு போகிறது?" என்று .

"700 ரூபாய்க்கு குறையாமல் போகிறது" என்று சொன்னார்.

"ஒரு கிலோ உலர்ந்த மஞ்சளை பதப்படுத்தி எடுப்பதற்கு எவ்வளவு பச்சை மஞ்சள் வேண்டும்?" என்று கேட்டேன். "கிட்டத்தட்ட ஐந்து கிலோ பச்சை மஞ்சள் தேவை" என்று சொன்னார். அப்படி என்றால் ஒரு கிலோ கட்டி மஞ்சளின் விலை மூவாயிரத்து ஐநூறு ரூபாய்களுக்குக் குறையாமல் வரும். மேலும் பச்சை மஞ்சளை உலர்த்தி எடுக்கும் பொறிமுறைக்கான செலவையும் சேர்க்க வேண்டும். இப்படிப் பார்த்தால் ஒரு கிலோ மஞ்சளை நாலாயிரத்துக்கும் குறைவாக விற்க முடியாது. சந்தையில் இப்பொழுது மஞ்சள் ஒரு கிலோ நாலாயிரத்தில் இருந்து ஆறாயிரம் ரூபா வரை விற்கப்படுகிறது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மஞ்சள்தான் நாட்டின் பெருமளவிலான மஞ்சள் தேவையைப் பூர்த்தி செய்கின்றது என்று மஞ்சள் வியாபாரிகள் கூறுகிறார்கள். இலங்கைத் தீவின் புள்ளி விபரங்களின்படி ஒரு குடும்பம் சராசரியாக ஓராண்டுக்கு இரண்டரைக் கிலோ மஞ்சளை நுகர்கிறது. இதன்படி மொத்தம் 8,600 மெட்ரிக் தொன் மஞ்சள் ஓராண்டுக்குத் தேவை. ஆனால் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மஞ்சளின் மொத்த தொகை மூவாயிரத்துக்குக் குறைவான மெட்ரிக் தொன் தான். எனவே உள்ளூர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இந்தியாவிலிருந்து மஞ்சளை இறக்குமதி செய்ய வேண்டி இருக்கிறது.

உலகின் 60 வீதத்துக்கும் குறையாத மஞ்சளை இந்தியா தான் உற்பத்தி செய்கின்றது. அங்கே ஒரு கிலோ கட்டி மஞ்சள் இப்பொழுது இந்தியக் காசில் 130-170 ரூபாவுக்கு கிடைக்கிறது. கட்டி மஞ்சளை இலங்கைக்கு கொண்டு வரும்போது இறக்குமதிச் செலவுகள் வரிகளோடு சேர்த்து ஒரு கிலோ கட்டி மஞ்சள் 350-550 ரூபா வரை முன்பு விற்கப்பட்டது. முன்பு என்றால் கொவிட் 19 முதலாவது தொற்றலுக்கு முன்பு.

இந்தியாவிலிருந்து கட்டி மஞ்சளை இறக்குமதி செய்வோர் அதை உள்ளூர்த் தேவைகளுக்கு மட்டும் விநியோகிப்பது இல்லை. மாறாக மேலதிகமாக இறக்குமதி செய்து இலங்கையிலிருந்து மஞ்சள் தூளை புலம்பெயர்ந்த நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறார்கள். இவ்வாறு ஏற்றுமதித் தேவைகளுக்காக அதிகரித்த மஞ்சள் நாட்டுக்குள் இறக்கப்படும்பொழுது அது உள்ளூர் உற்பத்தியைப் பாதிக்கின்றது. இதைத் தடுப்பதற்காக ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் மஞ்சள் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன. அதனால் மஞ்சளின் விலை அதிகரித்தது. இப்பொழுது ராஜபக்ச அரசாங்கம் மஞ்சள் இறக்குமதியைத் தடுத்தபின் மஞ்சள் கஞ்சா போன்று மாறிவிட்டது என்று மஞ்சள் உற்பத்தியாளர்கள் சொன்னார்கள்.

மஞ்சள் மட்டுமல்ல தேங்காயின் நிலையும் அப்படித்தான். அரசாங்கம் தேங்காய் விற்பவர்களுக்கு அளவுப் பிரமாணங்களை அறிவித்திருக்கிறது. அவற்றின் அளவுப் பிரமாணத்தின் படி தேங்காயின் விலை தீர்மானிக்கப்படும். இதற்கென்று சில முஸ்லிம் வர்த்தகர்கள் தேங்காயை அளக்கும் கம்பி வளையங்களை உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

எனது நண்பர் ஒருவர் சொன்னார்" ......தமிழில் ஒரு நல்ல பழமொழி உண்டு. மாம்பழத்தை பெருப்பத்தை பார்த்து வாங்கு தேங்காயை அடைப்பத்தைப் பார்த்து வாங்கு என்று. அதாவது தேங்காய் வாங்கும்போது அதன் பருமன் அல்ல அதன் அடர்த்தி தான் முக்கியம். அடர்த்தி கூடிய தேங்காய் எடை அதிகம் நிற்கும். எனவே தேங்காயைத் தூக்கி பார்த்து கைக்கணக்கில் எடை அடிப்படையில் தான் அதை வாங்குவது உள்ளூர் வழமை. அதற்கு அளவுப் பிரமாணம் வைக்க முடியாது. பருமனில் பெரிதாக இருக்கும் ஒரு தேங்காயின் உள்ளுடல் அடர்த்தி குறைந்ததாக இருக்க முடியும்" என்று சொன்னார்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்குக் கிட்டவாக தனிச் சிங்கள வாக்குகளால் வெற்றி பெற்ற ஓர் அரசாங்கம் தேங்காயை அளந்து வாங்கும் ஒரு நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்து விட்டிருக்கிறது. தையல் கடைகளில் இருக்கும் அளவு நாடாவை தேங்காய் கடைக்கு் கொண்டு வந்து விட்டது.

மஞ்சளும் தேங்காயும் மட்டுமல்ல உழுந்தின் விலையும் ஏனைய உப உணவுகளின் விலைகளும் அதிகரித்துச் செல்கின்றன. கொவிட் 19 க்கு முன்பு உழுந்து வடை 45 ரூபா வரை விற்கப்பட்டது. கொவிட் 19 க்குப் பின்பு அதாவது கொவிட் 19 முதலாவது தொற்றலுக்குப் பின் ஒரு வடை 60 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. இப்பொழுது உழுந்தின் விலை ஒரு கிலோ ஆயிரத்து நாநூறைத் தாண்டி விட்டது. இனி வடையும் போய்ச்சா?

இந்தச் சுமைகளையெல்லாம் சாதாரண ஜனங்கள் எப்படித் தாங்கப் போகிறார்கள்? தனிச் சிங்கள வாக்குகளால், தான் பெற்றவை என்று அரசாங்கம் இறுமாப்புடன் கூறும் வெற்றிகளை எவ்வளவு காலத்துக்கு தக்கவைக்க முடியும்? இந்த அரசாங்கத்தின் வெற்றிகள் அனைத்தையும் சோதனைக்குள்ளாக்கப் போகும் அம்சங்கள் இரண்டு.

முதலாவது இனப் பிரச்

## கொரோனா ராஜபக்சக்களின் பக்கமா ?

சினை. இரண்டாவது பொருளாதாரம். தனிச் சிங்கள வாக்குகளால் வென்ற அரசாங்கம் தனிச் சிங்கள வாக்காளர்களைக் கவரும் பொருட்டு நேரத்துக்கு ஒரு முடிவை எடுக்கிறது. தேர்தல் காலத்தில் தனிச் சிங்கள வாக்குகளை கவர்வதற்காக ரிசாத் பதியுதீனின் சகோதரரைப் பல்வேறு குற்றச்சாட்டுகளின் பெயரால் உள்ளே தூக்கிப் போட்டார்கள். அண்மையில் அவர் விடுவிக்கப்பட்டிருக்கிறார். அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் எவையும் நிரூபிக்கப்படவில்லை. அதன்பின் ரிசாத் பதியுதீன் கிழக்கு மாவட்டத்தில் மூத்த ராஜபக்சவான சமல் ராஜபக்சவோடு கைகுலுக்கும் காட்சி வெளிவந்திருக்கிறது. இதன் பொருள் என்ன?

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதற்கு மொத்தம் 150 ஆசனங்கள் தேவை.

பக். 8

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தைக் கலக்கிய விடயம் புங்குடுதீவுப் பூசகரின் படுகொலைதான். அவருடைய கொலைக்கான காரணங்கள் பற்றி பலவித ஊகங்கள் வெளியாகின. எனினும் வழக்கம்போல களத்தில் இறங்கி பலதரப்பட்டவர்களின் தகவல்களையும் ஆதாரங்களையும் திரட்டி முழுமையான உண்மையை சஞ்சீவி வாசகர்களுக்கு தர முனைந்தோம். ஆயினும் திடீரென ஏற்பட்ட கொரோனா அசாதாரண சூழ்நிலையால் புங்குடுதீவு முடக்கப்பட்டது. இதனால் முழுமையான தகவல்களை சரிவரப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே கிடைத்த தகவல்களின் இந்த வாரம் புங்குடுதீவுப் பூசகர்கள் பற்றிய தடயத்தைத் தேடி வெளியாகிறது. நிலைமை சீராகி மேலதிக தகவல்கள் கிடைக்கப் பெறும்போது அவையும் உரியவேளையில் சஞ்சீவியில் வெளிவரும்.

○ உளவாளி

# புங்குடுதீவு பூசாரி கொலை

## மறைந்திருக்கும் மர்மங்கள்

தடயத்தை தேடி...

நள்ளிரவுப் பொழுது கடந்து கொண்டிருந்தது.

அந்த அகால வேளையில், புங்குடுதீவு வைத்தியசாலையின் தொலைபேசி அலறியது.

" ஹலோ, ரூபன் ஐயாவை அடிச்சுப் போட்டாங்கள், அம்புலன்ஸை அனுப்புங்கோ" என்று மறுமுனையில் பதற்றமான கோரிக்கை. உடனேயே கூவிக்கொண்டு பறந்தது அம்புலன்ஸ். ஒரு சில நிமிடங்களில் சரியான இடத்தை அம்புலன்ஸ் வந்தடைந்தது. அதில் இருந்தவர்கள் பரபரப்போடு உள்ளே ஓடினார்கள். வீட்டு வாசலில் பூசகரின் உதவியாளர் கலவரமான முகத்தோடு இவர்களை அழைத்துச் சென்றார்.

வீட்டின் நடுவே-

குருதி வெள்ளத்தில் குப்புறக் கிடந்தார் பூசகர். உடலில் எந்தச் சலனமுமில்லை. பார்த்தவுடனேயே உயிரிழந்து விட்டார் என்று புரிந்தது.

" முகமூடியோட வந்த மூண்டு பேர் என்னைக் கட்டிப் போட்டிட்டு, ஐயாவுக்கு அடிச்சிட்டாங்கள்" என திரும்பத் திரும்ப உதவியாளர் சொன்ன போதும், அம்புலன்ஸ் சாரதிக்கு சந்தேகம்.

" உதவியாளரைக் கட்டிப் போட்டிருந்தால், அப்படிக் கட்டிப்போட்ட அடையாளங்கள் இருக்கும் . அவை எதுவும் அவரில் இல்லை, கட்டியிருந்தால் எப்படி அதை அவிழ்த்திருப்பார், அம்புல்னஸுக்கு தகவல் தெரிவித்த உதவியாளர் ஏன் பொலிஸுக்கு சொல்லவில்லை ?" என்று பலவாறாக யோசித்துவிட்டு, அம்புலன்ஸ் சாரதி உடனடியாகவே சம்பவத்தை பொலிஸுக்குச் சொன்னார். பொலிஸும் பறந்து வந்தது. ஆனால் குற்றவாளி யாரென்றுதான் கண்டுபிடிக்கமுடியவில்லை.

ஆனால் அடுத்தநாட் காலையே குற்றவாளிகள் கூண்டோடு பிடிபட்டார்கள்.





### யாரிந்த ரூபன்'சர்மா'?

புங்குடுதீவில் ஏற்கனவே கோயிலில் பூசகராக இருந்த ஒருவருக்கு உதவியாளராக வந்தவரே இராசையா இராஜரூபன் என்கிற ரூபன் சர்மா. பிறப்பால் அவர் அந்தணரல்லர். ஆனால் அந்தணர்கள் பயன்படுத்தும் சர்மா என்ற அடையாளத்தை, சமூக மதிப்புக் கருதியோ அல்லது தன்னைப் பிராமணராக உருமாற்றம் செய்யவோ பயன்படுத்தத் தொடங்கினார். உதவியாளராக வந்த ரூபன், பின்னர் பிரதான பூசகராக மாறி, ஒரேசமயத்தில் 14 கோயில்களின் பிரதான பூசாரியாக செயற்பட்டு வந்துள்ளார்.

அவரின் மாதாந்த வருமானம் அண்ணளவாக இரண்டு இலட்சம் ரூபா . அவரின் . உதவியாளராகச் செயற்படுபவருக்கு மாதம் 30,000 ரூபா வழங்கி வந்துள்ளார். சம்பளத்தை அதிகரித்துத் தாருங்கள் எனக் கேட்டுள்ளார் உதவியாளர். எனினும் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. இது இருவருக்கிடையிலும் மனக்கசப்பை உருவாக்கியது.

அதேவேளை ரூபனுக்கு அந்த ஊரில் நல்ல மதிப்பு. சமூக அக்கறை கொண்டவர், உதவி செய்பவர் என்று மக்கள் சொல்கிறார்கள்.

அதேவேளை அவரைப் பற்றிய எதிர்மறையான தகவல்களுக்கும் அங்கு பஞ்சமில்லை. ரூபன் சர்மா பல முகநூல் கணக்குகளை ஆரம்பித்து அவதூறு பரப்புவது, சில சமூக விரோத செயற்பாடுகளை எதிர்ப்பது போன்றும் முரண்பாடான பதிவுகளை மேற்கொள்ள பல போலி முகநூல் கணக்குகளில் பதிவிட்டுள்ளார். இவ்வாறே புலம்பெயர்ந்து வசிக்கும் ஒருவரின் மொபைல் போனை திருடி (பொருளுக்காக அல்ல தரவுகளுக்காக) அதில் இருந்த தகவல்களை.பயன்படுத்தி பணம் பறிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதிகளவான கோயில்களில் ரூபன் சர்மா வேலை செய்து வந்ததால் புங்குடுதீவில் வசிக்கும் சில சர்மாக்களுக்கும் ரூபன் சர்மா மீது கோபம் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட ரூபன் சர்மா தான், 03..10.2020 பின்னிரவில் அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

### கவ்விப்பிடித்த மோப்ப நாய்

அடுத்தநாட் காலை விடிந்ததும் சம்பவ இடத்துக்கு பொலிஸார் வெறுங்கையோடு வரவில்லை. கூடவே மோப்பநாயையும் அழைத்து வந்திருந்தார்கள். ஆனால் அந்த மோப்ப நாய் அதிக நேரம் மினைக்கெடவில்லை. ஒருசில நிமிடங்கள் மோப்பம் பிடித்துவிட்டு, விரைந்து போய் ஒருவரைப் பாய்ந்து கவ்விப்பிடித்தது.

அவர் தான் ரூபன் சர்மாவின் உதவியாளர். சிலபல 'கவனிப்புகளுடன்', தொடர்ந்து நடத்திய விசாரணையில் நடந்த உண்மையைப் பொலிஸாரிடம் சந்தேகநபர் கக்கத் தொடங்கினார். அவரையும் தமது ஜீப்பில் ஏற்றிக் கொண்ட பொலிஸார் வயலூர் முருகன் கோயில் பூசகர் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று பூசகரையும் அவரது உதவியாளரையும் கைது செய்தனர்.

### பகை மூண்டது

ரூபன் சர்மாவின் உதவியாளருக்கும்,புங்குடுதீவின் வயலூர் முருகன் கோயிலின் பூசகர் குழுவுக்கும் இடையே ஏற்பட்ட நட்பே இவற்றுக்கெல்லாம் மூலகாரணம். முருகன் கோயில் பூசகருடன் ஏற்பட்ட நட்பால், அங்கு சென்றுவர ஆரம்பித்தார் ரூபனின் உதவியாளர்.

முருகன் கோயிலின் பூசகரும் அவரது உதவியாளரான தம்பியும் கோயில் காணியில் உள்ள வீட்டிலேயே தங்கியிருந்தனர். ரூபன் சர்மா அதிக கோயில்களில் பூசை செய்வது இவர்களுக்குப் பொறுக்கவில்லை. அதனால் ரூபன் பூசகராக உள்ள கோயில் பூசைகளை தம் வசமாக்க, ரூபனின் உதவியாளர் மூலம் காய்நகர்த்தினர். இது ரூபனுக்கும் தெரிய வர, பிரச்சினை ஆரம்பமானது.

### யார் அந்தப் பெண்கள்?

இதைவிட, முருகன் கோயிலில் பூசகரது வீட்டில் இரண்டு பெண்கள் வந்து தங்கியுள்ளனர். அவர்கள் தனது மனைவியும், மனைவியின் சகோதரியும் என முருகன் கோயில் பூசகர் ஊர் மக்களுக்குச் சொல்லியுள்ளார். இந்த நிலையில் மூன்றாவதாகவும் ஒரு பெண் அந்தப் பூசகர் வீட்டுவந்து சேர்ந்தார். அந்தப் பெண்ணுக்கும் ரூபனின் உதவியாளருக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டது.

அந்தப் பெண்ணை சந்திப்பதற்காக, முருகன் கோயில் பூசகர் வீட்டுக்கு ரூபனின் உதவியாளர் அடிக்கடி சென்றுவரத் தொடங்கினார். ஒருநாள் இரவு அந்தப் பெண்ணை ரூபன் சர்மாவின் வீட்டுக்கே அழைத்து வந்துவிட்டார் உதவியாளர். அவ்வளவுதான், இருவரையும் கண்டபடி திட்டி, திருப்பி அனுப்பிவிட்டார் ரூபன். அதனால் உண்டான மனக்கசப்பால் சொந்த ஊருக்கே திரும்பி விட்டார் உதவியாளர். எனினும் சமரசப் பேச்சுக்களின் பின்னர் இருவரும் ஒற்றுமையாகி, மீண்டும் உதவியாளர் ரூபன் சர்மாவிடமே வேலைக்கு வந்தார்.

ஆனால் "பெண் பிரச்சினையால், வேலையை விட்டு அவர் செல்லவில்லை. சம்பளப் பிரச்சனையாலேயே வேலையை விட்டு சென்றார் . பின்னர் ரூபன் சர்மாவின் தம்பி சென்று கதைத்தே திரும்ப வேலைக்கு வந்தார்" என்றும் ஒரு சாரார் சொல்கிறார்கள். "அதேபோல் முருகன் கோயிலில் தங்கியிருந்தவர்கள் பூசாரியின் மனைவியோ, உறவினரோ கிடையாது அவர்கள் தகாத பாலியல் தொடர்புக்காக அழைத்துவரப்பட்டவர்கள்"என்றும் ஊரவர்கள் சொல்கிறார்கள்.

### கொலையே தீர்வு

மீண்டும் வேலைக்கு வந்த உதவியாளர் ரூபனோடு நிற்பதை விடவும், முருகன் கோயில் பூசகர் வீட்டில் நிற்பதே அதிகமாக இருந்தது. இது ரூபனுக்கு ஆத்திரத்தைக் கூட்டியது. ஒருநாள் கோபத்தோடு அங்கே போன ரூபன் சர்மா, அங்கே முஸ்லிம் பெண் ஒருவர் உட்பட சில பெண்கள் இருப்பதை நேரில் கண்டுவிட்டார். இதனால் அங்கு ஒரு சச்சரவு எழுந்தது. இந்தப் பிரச்சினையின் காரணமாக குறித்த முஸ்லிம் பெண்ணும், அவரின் காதலன் என்று சொல்லப்படும் முருகன் கோயில் பூசாரியின் சகோதரனும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இது இரு பூசகர்களுக்கும் இடையே இருந்த பகையை மேலும் பெரிதாக்கியது. இந்த நிலையில் தான் முருகன் கோயில் பூசகர், தன்னுடைய சித்தியின் மகனான , சுழிபுரம் பாண்டவெட்டையில் வசிக்கும் இளைஞனை உதவியாளர் வேலைக்கு அமர்த்தியுள்ளார். இந்த நிலையில் தான் ரூபனைக் கொலை செய்வதே ஒரே வழி என்று திட்டம் தீட்டப்பட்டது.

### கூட இருந்தவனே கொன்றான்

**03.10.2020**


அன்று ரூபன் யாழ்ப்பாணத்துக்குப் போய் வங்கியில் இருந்து பணம் எடுத்து வந்திருந்தார். ஆகவே கொலை செய்வதோடு அவரின் பணத்தையும் கைப்பற்ற இதைவிட பொருத்தமான நாள் கிடையாது என்பதால் அன்றைக்கே தங்கள் திட்டத்தை அவர்கள் நடைமுறைப்படுத்த முடிவெடுத்தனர். பூசை எல்லாம் முடிந்து வந்த ரூபன், சாப்பிட்டு விட்டு அயர்ந்து தூங்கத் தொடங்கினார். அதுவரை தொலைக்காட்சியில் 'ஐ.பி.எல் மட்ச்' பார்த்துக் கொண்டிருந்த உதவியாளன், தொலைபேசியில் முருகன் கோயில் பூசகருக்கு, "ஐயா, நித்திரை வாங்கோ" எனத் தகவல் கொடுத்துள்ளான். முருகன் கோயில் பூசாரியும், ஒன்றுவிட்ட சகோதரனும் முகத்தை மூடியவாறு வர, சத்தமில்லாமல்வீட்டுக்கதவை உதவியாளன்திறந்துவிட்டுள்ளான். வந்தவர்கள் வீடெல்லாம் தேடி, ரூபனின் பணத்தை எடுத்த போது, தற்செயலாக ரூபனும் கண்விழித்து விட்டார். அதைக் கண்ட கொலைகாரர்கள் தாம் கொண்டுவந்திருந்த கொட்டனால் அவரைத் தாக்கத் தொடங்கினர். அவர்களிடமிருந்து தப்பிக்க, ஓலமிட்டவாறு வீட்டுக்குள் ஓடத் தொடங்கினார் ரூபன். ஆனால் அயலில் வீடுகள் இல்லாததால் அவரின் அவலக்குரல் எவருக்கும் கேட்கவில்லை. இருப்பினும் புங்குடுதீவைச் சேர்ந்த பலருக்கு உதவி கேட்டு தொலைபேசி அழைப்பை எடுத்தபோதும், எல்லோரும் தூக்கத்தில் இருந்ததால் எவரும் அவருக்குப் பதிலளிக்கவில்லை. ஒரேயொரு பூசகர் மட்டும் ரூபனின் தொலைபேசிக்கு பதிலளித்த போது " என்னை அடிச்சுப் போட்டாங்கள், எல்லாம் சிசிரீவியில பதிவாகி இருக்கு. வந்து பாருங்கோ" எனச் சொல்லியுள்ளார் ரூபன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவரும் உதவிக்கு உடனடியாகப் போகவில்லை.

### நீயுமா...?

அதன் பின்னர் தன் உதவியாளரை அழைத்த ரூபன்" என்னை இவங்கள் அடிச்சுப் போட்டாங்கள், உள்ளுக்க இருக்கிற கொட்டனை எடுத்துக் கொண்டு வா" எனக் கத்தியுள்ளார். அவனும் உள்ளே ஓடிப் போய் கொட்டனை எடுத்து வந்து, ரூபன் எதிர்பாரா வகையில் அவரின் பின் தலையில் பலமாகத் தாக்க அவர் அப்படியே குப்புற விழுந்துள்ளார். அதன் பின்னர் அவரது வேட்டியை அவிழ்த்து, அவர் கையைப் பின்புறமாகக் கட்டிப் போட்டு விட்டு, மூவரும் இரும்புக்குக் கம்பி என்பவற்றால் அவரை அடித்துக் கொன்றனர். பின்னர் வீட்டில் இருந்த சிசிரீவி கமராக்களை உடைத்து விட்டு, அதன் பிரதான சேமிப்பகத்தைக் கழற்றி எடுத்தனர். முருகன் கோயில் பூசகரும், ஒன்றுவிட்ட உதவியாளரும் ( சந்தேகநபர் 2) ரூபன் வீட்டில் கொள்ளையடித்த பணத்தோடும், சிசிரிவி சேமிப்பகத்தோடும் அங்கிருந்து அகன்றனர். பொதுவான பாதைவழியே சென்றால் அங்கிருக்கும் வீடுகளில் பொருத்தப்பட்ட சிசிரிவி கமெராக்களில் தமது உருவம் சிக்கிவிடக் கூடும் என்பதற்காக காணிகளுக்கால் நடந்து போயுள்ளனர்.

கொலைக்குப் பயன்படுத்திய ஆயுதங்களை கிணற்றில் போட்டு விட்டு , ரூபனின் வீட்டில் இருந்த இரகசியக் கமராவின் காணொளி சேமிப்பகம் , ரூபனின் 5 செல்போன்கள், ரப்லெட் என்பவற்றை முருகன் கோயில் கர்ப்பக்கிரகத்தில் ஒளித்து வைத்துள்ளனர். ரூபன் சர்மா உயிரிழந்ததை உறுதி செய்த பின்னரே உதவியாளர் அம்புலன்ஸுக்கு தொலைபேசி அழைப்பெடுத்து, தன்னைக் கட்டிப்போடு விட்டு முகமூடிக் கொள்ளையர்கள் கொலை செய்துவிட்டதாக நாடகமாடியுள்ளார். ஆனால் எல்லாவற்றையும் மோப்பநாய் காட்டிக் கொடுத்துவிட்டது.

**சந்தேகநபர்கள் விசாரணையின் பின்னர் , கோயில் கர்ப்பக்கிரகத்தில் ஒளித்துவைத்த பொருட்களை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.**



**சந்தேகநபர் 1**

(பெயர் மறைக்கப்பட்டுள்ளது)

முருகன் கோயில் பூசாரி .

அவரின் தாயார் வவுனியாவில் வசித்து வருகின்றார். அவர் வீடுகளுக்குச் சென்று வேலைகளை செய்து வருகிறார். தற்போது முகக் கவசம் தைத்து விற்பனை செய்து வருகிறார். சந்தேகநபர் 1, தன்னுடைய சகோதரனுடன் வேலைக்காக யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள பிள்ளையார் கோயிலின் குருக்களுக்கு உதவியாளர்களாக அண்ணனும் தம்பியும் வேலைக்குச் சேர்ந்தனர். குருக்கள் கோயிலில் இருந்து விலகியதும் கோயில் நிர்வாகத்தினரை தொடர்புகொண்டு "நானும் சர்மா ( அந்தணர் ) ... எனக்கு கோயில் பூசையை தாருங்கள். நான் நன்றாக செய்கிறேன்" என கோயில் நிர்வாகத்தினரோடு கதைத்து பிள்ளையார் கோயிலின் பிரதான பூசகராக பொறுப்பெடுத்தார் இந்த 'சர்மா'. இவருக்கும் இவருடைய உதவியாளரான தம்பி சர்மாவுக்கும் கோயில் நிர்வாகம், தங்குவதற்கு வீடும் கொடுத்துள்ளது. ஒரு சில மாதங்கள் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் போயின.

சில மாதங்கள் நகர, பிரச்சினைகள் உருவெடுத்தன. ஒழுங்கான நேரத்துக்கு பூசைகள் நடக்காமை, பழுதடைந்த பிரசாதங்களை வழங்குதல் என்று இவர்கள் மீது புகார்கள் வரத் தொடங்க, அது பற்றி ஆலய நிர்வாகம் இவர்களிடம் கடுமையான கேள்விகளைக் கேட்கத் தொடங்கியது.

இவர்கள் தங்கியிருந்த வீட்டுக்கு பெண்களும் வந்து செல்லத் தொடங்கினர். அவர்கள் யார் என்று அயலவர்கள் கேட்டபோது, "எங்களின் உறவினர்கள்" என இவர்கள் பதிலளித்துள்ளனர். இந்தத் திடீர்ப் பூசகரதும் அவரது உதவியாளரான சகோதரனதும் செயற்பாடுகள் நாளுக்கு நாள் மாறுபடுவதை அவதானித்து ஒரு வருடத்துக்குள்ளாகவே இருவரும், கோயில் பூசையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

அதன் பின்னரே புங்குடுதீவு முருகன் கோயிலில் பூசைக்காக இவர்கள் சென்றுள்ளனர்.

**சந்தேகநபர் 2**

(பெயர் மறைக்கப்பட்டுள்ளது)

கொழும்பில் பிறந்தவர். பின்னர் இந்தியா சென்று தாயகம் திரும்பிய பின்னர் 2014 ஆம் ஆண்டில் மானிப்பாயில் உள்ள பாடசாலையொன்றில் தரம் 10 வரை கல்வி கற்று விட்டு, குடும்ப வறுமை நிலை காரணமாக படிப்பை இடை நிறுத்தினார். தாயாரோடு சேர்ந்து பூமாலை கட்டுவதும், தந்தையாரோடு மேசன் வேலைக்குப் போவதுமாக இருந்துள்ளார்.

பின்னர் யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் ஹொட்டல் ஒன்றில் அவர் வேலைக்கு இணைந்தார். ஆனால் அங்கு அவர் சில பொருட்களைத் திருடிவிட்டார். ஹொட்டல் நிர்வாகத்தினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனால் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அப்போது இவரின் உடன்பிறவா சகோதரர்கள் . களவுபோனதாகச் சொல்லப்பட்ட சில பொருட்களை கொண்டு வந்து ஒப்படைத்துள்ளனர்.

" அப்பிடி ஒண்டும் நடக்கேல்லை. அந்தக் ஹோட்டலில வேலை செய்யிற கொஞ்சப் பேரோட எங்கட மகனும் சேர்ந்து 'சுவிமிங் பூலில' ( நீச்சல் தடாகத்தில்) குளிச்சிருக்கினம். அப்ப அதில ஏதோ சேதம் வந்திட்டுது எண்டு சொல்லி, 50 ஆயிரம் கட்டச் சொன்னவை. நாங்கள் அதைத் திருத்தித் தாறம் எண்டம். ஆனால் அவை அதைக் கேக்காமல் பொலிஸில கேஸ் போட்டிட்டினம்" என்கிறார் சந்தேக நபர் 2 இன் தாயார்.

ஹோட்டல் வேலையால் நின்றதும் தந்தையாரோடு சேர்ந்து முழுநேரமாக மேசன் வேலைக்கு அவர் சென்றுவந்துள்ளார். அப்படி மேசன் வேலைக்குப் போய் வந்த போதுதான் அவருக்கும் ஒரு பெண்ணுக்கும் காதல் ஏற்பட்டுள்ளது. சுழிபுரம், பாண்டவெட்டையைச் சேர்ந்த அந்தப் பெண், ஏற்கனவே திருமணமானவர். ஆனால் கணவரோடு கருத்து முரண்பாடு ஏற்பட்டதால் , அவரை விட்டுப் பிரிந்து வந்து பெற்றோரோடு தங்கியிருந்தார். அப்போதுதான் இவர்கள் இருவருக்கும் காதல் முளைத்தது. பின்னர் இருவரும் ஒன்றாகவே , பாண்டவெட்டையில் வசிக்கத் தொடங்கினர். 'சந்தேகநபர் 2 கூலி வேலைக்குச் செல்லத் தொடங்கினார். இந்த நிலையில்தான் அவருக்கு கோயிலில் வேலை செய்ய அழைப்பு வந்தது.

"வேலை இல்லாமல் என்ன செய்வது.. அண்ணா புங்குடுதீவில் கோயில் ஒன்றில் வேலை செய்கின்றார் .. அங்கே வருமாறு கேட்கிறார் .நான் போய் அங்கே வேலை செய்துவிட்டு வருகிறேன். மெத்தை , ரீ.வி வாங்கின லீஸிங் காசும் கட்ட வேணும்.. கடைக்கும் காசும் கொடுக்க வேணும். இஞ்ச நிண்டு என்ன செய்யிறது? நான் அங்க வேலைக்கு போறன்" என்று மனைவியிடம் கூறிவிட்டு இரண்டு கிழமைக்கு முதல் தான் வேலைக்குச் சென்றுள்ளார். அதன் பின்னர் மனைவியோடு தொலைபேசியில் தினமும் உரையாடுவார்.

அதேபோல கொலை நடந்த மறுதினமும் (04.10. 2020 ) பகல் மனைவிக்கு தொலைபேசி அழைப்பை அவர் எடுத்துள்ளார்.

"அண்ணாவுடன் கோயிலில் நிக்கிறன். அண்ணா குடும்பம் இங்கே தான் .. எல்லா இடமும் பொலிஸ் நிக்கிறாங்கள்" என்று பதற்றத்தோடு சொல்லியுள்ளார். ஆனால் அவர் ஏன் அப்படி சம்பந்தமில்லாமல் ஏதேதோ சொல்கிறார் என்று மனைவிக்குப் புரியவில்லை.

"ஏன் அவங்கள் நிக்கிறாங்கள் ?நீங்கள் எங்கே நிக்கிறீங்கள்?" என மனைவி கேட்டுள்ளார்.

"ஏன் எண்டு தெரியாது. நான் கோயிலில நிக்கிறன்" என கூறி விட்டு , தொலைபேசி அழைப்பைத் துண்டித்துவிட்டார். பின்னர் சிறிது நேரத்தில் தொலைபேசி எடுத்த போது வேறு ஒருவரே பதிலளித்துள்ளார்.

" நாங்கள் பொலிஸ். என்னட்டைத் தான் போன் கிடக்கு "என்று சொல்லப்பட்டுள்ளது.

" ஏன் அவரைப் பிடிச்ச னீங்கள்?" என்று மனைவி பொலிஸிடம் கேட்டுள்ளார்.

"கனபேரைப் பிடிச்ச னாங்கள் .பிடிச்ச ஆக்களின் போன் எல்லாம் எங்களிட்டைத் தான் கிடக்கு" என்று பதில் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் சமூக வலைத்தளங்களிலும் செய்திகளிலும் கொலைச் சம்பவம் தொடர்பில் வந்த செய்திகளைப் பார்த்த போதே, புங்குடுதீவுப் பூசகரின் கொலை தொடர்பில் தன் கணவரும் கைதான விடயம் மனைவிக்குத் தெரியவந்துள்ளது. " அவர் அப்படி செய்திருக்க மாட்டார்" என்று உறுதியாக நம்புகிறார் அவரின் மனைவி.

### தவறு யாருடையது?

தகுதியற்றவர்களையும், தவறானவர்களையும் இப்படி கோயில்களில் பணிக்கு அமர்த்தினால் நடக்கும் சீரழிவுகளை ரூபனின் கொலை வெளிப்படுத்தியுள்ளது.

ரூபனின் கொலையில் கைதான சந்தேக நபர்கள் அசைவ உணவு உண்பவர்கள்.எந்தவிதமான ஆராய்வுகளும் இல்லாமல் வேலைக்கு இணைத்துவைத்திருந்தது யார் தவறு? அங்கே பெண்கள் வந்து போவது பற்றிய தகவல் கிடைத்ததும் உரிய நடவடிக்கை ஆலய நிர்வாகம் எடுத்திருக்க வேண்டுமல்லவா? அப்படி அவர்கள் முன்னெச்சரிக்கையா இருந்திருந்தால், அங்கு நடந்த பல சீரழிவுகளைத் தடுத்திருக்கலாமே. இனியாவது, இப்படி தவறான நபர்களை ஆலயம் போன்ற புனித இடங்களில் பூசகர்களாக்காமல் இருக்க நடவடிக்கை எடுப்பார்களா?



# ‘பிச்சைக்கார’ ஆட்சியாளர்கள்

○ ந.பரமேஸ்வரன்

ஸ்ரீலங்கா ஒரு சிங்கள பௌத்த நாடு. ஸ்ரீலங்காவின் அரசியல் யாப்பிலேயே பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீலங்காவை ஆட்சி செய்த ஜனாதிபதிகள், பிரதமர்கள் அனைவருமே சிங்கள பௌத்தர்கள், சேர்.ஜோன். கொத்தலாவலை போன்ற ஒரு சில விதி விலக்குகளைத் தவிர. சீனா,ஜப்பான், வியட்நாம், கம்போடியா, தாய்லாந்து போன்று பௌத்தத்தை பின்பற்றும் நாடுகள் பல இருந்தாலும் எந்த ஒரு நாட்டுத்தலைவரும் இலங்கைத்தலைவர்களைப்போல் பௌத்த தர்மத்தை ஒழுங்காகப் பின்பற்றுவதில்லை. பௌத்த தர்மத்தை முறையாகப் பின்பற்றும் ஒரேயொரு நாடு என்றால் அது ஸ்ரீலங்காதான்; ஸ்ரீலங்கா பிரதமர்கள், ஜனாதிபதிகள் பின்பற்றியதுபோல் உலகில் எந்த ஒரு பௌத்த நாட்டின் பிரதமரோ ஜனாதிபதியோ இதுவரை பௌத்த தர்மத்தை பின்பற்றவில்லை.

இங்கு நான் புத்த பெருமான் கூறியுள்ள பஞ்சசீலம் (பஞ்சமாபாதகம்), அஷ்டசீலம் (எட்டு வகையான ஒழுக்கங்கள்) தசசீலம் என்பவை பற்றியோ அல்லது நாட்டை ஆட்சி செய்யும் அரசர்களுக்காகக் கூறப்பட்டுள்ள தசராஜதர்மம் பற்றியோ கூற வரவில்லை. 'விநயபிடக' என்ற நூலில் கூறப்பட்டுள்ள ஒரேயொரு விடயத்தை மட்டுமே குறிப்பிட விரும்புகிறேன்.

“பௌத்த தர்மத்தைப் பின்பற்றும் ஒருவன், தினமும் காலையில் எழுந்து திருவோட்டை ஏந்திச் சென்று யாசகம் செய்து அதன் மூலம் கிடைக்கும் உணவைப் பகிர்ந்து உண்ண வேண்டும்” என ‘விநயபிடக’ என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்த நாள் முதல் இன்று வரை ஸ்ரீலங்காவை ஆட்சி செய்த தலைவர்கள் அனைவரும் இந்த ஒரு விடயத்தை மட்டும் ஒழுங்காகச் செய்து வருகின்றனர். பிறப்பால் கிறிஸ்தவர்களாக இருந்தாலும், பின்னர் பௌத்தத்துக்கு விசுவாசமாக இருந்த ஆட்சியாளர்கள் இலங்கையில் நிறையப்பேர் இருந்திருக்கின்றனர். ஆங்கிலேயர் ஆட்சியின்போது, உயர் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக கிறிஸ்தவ மதத்தை தழுவிய நாயக்க வம்சத்தில் வந்த தமிழர்களே, பின்னர் இப்படித் தம்மை முற்று முழுதாகச் சிங்களத்தின் ஆட்சி வம்சமாக ஆக்கிக் கொண்டார்கள். சொல்லப்போனால் புலம்பெயர் தமிழர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் வைகோவின் வம்சத்தவர்கள் என்று சொல்லலாம்.

இவர்கள் மதம் மாறினாலும், சிங்களவராக மாறினாலும், தமது நாயக்க வம்ச அடையாளத்தை மட்டும் கைவிடவில்லை. டி.எஸ். சேனநாயக்க, பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க, ஜே.ஆர். ஜெயவர்த்தன என்போர் இந்த வகையினரே. ஸ்ரீலங்கா பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இருக்கும்வரை, அங்கிலிக்கன் கிறிஸ்தவர்களாக இருந்தவர்கள், பிரித்தானியர் ஸ்ரீலங்காவை விட்டு வெளியேறியதும் அரசியலுக்காக பௌத்த மதத்தைத் தழுவிக்கொண்டவர்கள். இவர்கள் தமது பதவிக்காலத்தில் பௌத்தத்தை ஒழுங்காகக் கடைப்பிடித்தார்கள். பின்னர் வந்த பிரேமதாச, மகிந்த போன்றவர்களும் விநயபிடகவில் கூறப்பட்டுள்ள யாசகம் செய்யும் விடயத்தை மட்டும் ஒழுங்காகச் செய்து வருகின்றனர்.

அதாவது, ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியாகவோ பிரதமராகவோ பதவியேற்றதும் நாடு நாடாகச்சென்று (புத்தர் வீடு வீடாகச்சென்று என்று கூறியதைப் போல ) பிச்சை எடுக்கின்றனர். இவ்வாறு பிச்சை எடுக்கும் போதும் தமிழர்களையும் காட்டி பிச்சை எடுத்து தாங்கள் சுகபோகம் அனுபவிக்கின்றனர். ஆனால் இந்த நடவடிக்கையால் கடனாளியாவது தனியே பௌத்தர்கள் மட்டுமல்லர். ஸ்ரீலங்காவிலுள்ள அனைத்துப் பிரஜைகளும் (இந்து,கிறிஸ்தவ, முஸ்லிம்) கடனாளியாகின்றனர்.

1948 முதல் 2019 வரையான தனி நபர் கடன் சுமை (ரூபாவில்) இங்கு தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1948– 1952 டி.எஸ். சேனாநாயக்க ஆட்சிக்காலம் – | 131.00 |
| 1952– 1956 டட்லி ஆட்சிக்காலம் – | 130.00 |
| 1956– 1960 பண்டாரநாயக்க ஆட்சிக்காலம் – | 189.00 |
| 1960– 1965 சிறிமா ஆட்சிக்காலம் – | 397.00 |
| 1965– 1970 டட்லி ஆட்சிக்காலம் – | 597.00 |
| 1970– 1977 சிறிமா ஆட்சிக்காலம் – | 1,792.00 |
| 1977– 1988 ஜே, ஆர் ஆட்சிக்காலம் – | 13,510.00 |
| 1988– 1993 பிரேமதாச ஆட்சிக்காலம் – | 27.423.00 |
| 1993– 2004 சந்திரிகா ஆட்சிக்காலம் – | 1,13,357.00 |
| 2004– 2015 மகிந்த ஆட்சிக்காலம் – | 3,60,357.00 |
| 2015– 2019 மைத்திரி ஆட்சிக்காலம் – | 5,97,695.00 |

இந்தக்கடன் சுமைகள் யாவும் வரியாக மக்கள் மீதே சுமத்தப்படுகிறது.

தனிநபர் வரிச்சுமை (ரூபாவில்)
அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது

| | |
|---|---|
| 1948–1952 டி.எஸ். சேனாநாயக்க ஆட்சிக்காலம் – | 97.00 |
| 1952 –1956 வரை டட்லி ஆட்சிக்காலம் – | 109.00 |
| 1956– 1960 பண்டாரநாயக்க ஆட்சிக்காலம் – | 107.00 |
| 1960– 1965 சிறிமா ஆட்சிக்காலம் – | 145.00 |
| 1965– 1970 டட்லி ஆட்சிக்காலம் – | 200.00 |
| 1970–1977 சிறிமா ஆட்சிக்காலம் – | 395.00 |
| 1977–1988 ஜே, ஆர் ஆட்சிக்காலம் – | 2185.00 |
| 1988–1993 பிரேமதாச ஆட்சிக்காலம் – | 3557.00 |
| 1993–2004 சந்திரிகா ஆட்சிக்காலம் – | 17147.00 |
| 2004–2015 மகிந்த ஆட்சிக்காலம் – | 50.551.00 |
| 2015–2019 மைத்திரி ஆட்சிக்காலம் – | 79.573.00 |

இந்த சிங்கள பௌத்த அரசியல்வாதிகள் உலக நாடுகளிடம் பிச்சை எடுக்கும் போது பெரும்பாலும் தமிழர்களைக் காட்டியே பிச்சை எடுக்கின்றனர்.

உதாரணமாக மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கென கனேடிய அரசிடம் நிதி உதவி கோரிய போது, வடக்குக்கான நீர் விநியோகத்திட்டத்துக்கு உதவி செய்யுமாறே கோரப்பட்டது.

ஆனால் அந்த மகாவலித்திட்டம் இப்போது முல்லைத்தீவை சிங்களமயமாக்குவதில் வந்து நிற்கிறது. இன்னும் எவ்வளவு காலத்துக்கு சிங்கள அரசியல்வாதிகள் தமிழர்களைக் காட்டிப் பிச்சை எடுக்கபோகின்றனரோ?.



“பௌத்த தர்மத்தை முறையாகப் பின்பற்றும் ஒரேயொரு நாடு என்றால் அது ஸ்ரீலங்காதான். ஸ்ரீலங்கா பிரதமர்கள். ஜனாதிபதிகள் பின்பற்றியதுபோல் உலகில் எந்த ஒரு பௌத்த நாட்டின் பிரதமரோ. ஜனாதிபதியோ இதுவரை பௌத்த தர்மத்தைப் பின்பற்றவில்லை.”



# முயலும் ஆமையும் முயலாமையும்...



முயலும் ஆமையும் ஒருநாள் உரையாடிக் கொண்டிருந்தன. அதில் இருவருக்கும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. முயல் " எனது கால்களை வைத்து மிக விரைவாக ஓடி விடுவேன். ஆனால் ஆமையாகிய உன்னால் ஓட முடியாது" எனக் கேலி செய்ததுடன் "இருவரும் ஒரு தடவை ஓடிப் பார்ப்போமா?" எனக் கேட்டது. போட்டியில் பங்குபற்றாமல் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கக் கூடாது. தன்னுடைய நிலைமை தெரிந்தும் போட்டியில் பங்குபற்றாது ஒதுங்குவதைவிட போட்டியில் பங்கு பற்றுவதே சிறந்தது என நினைத்து போட்டியில் பங்குபற்ற ஆமை சம்மதித்தது. இருவருக்கும் போட்டி ஆரம்பமாகியது. அப்போது ஆமை மெல்ல மெல்ல ஊர்ந்து செல்ல முயல் கேலி செய்தபடி நீண்ட தூர இடைவெளியில் முன்னோக்கிச் சென்று ஆமை வரும் வரைக்கும் இந்த மர நிழலில் களைப்பாறலாமே என எண்ணி மரத்தின் அடியில் அமர்ந்து கொண்டது. அப்போது தன்னை அறியாமல் நித்திரை செய்து விட்டது. தற்போது ஆமை மெல்ல மெல்ல ஊர்ந்து சென்று முயலை முந்திச் சென்று வெற்றி கொடியை அடைந்தவுடன் முயல் எழும்பி பார்த்து தனது தோல்வியால் மனம் வருந்தியது.

தற்போது தனது தோல்விக்கான காரணம் என்ன என முயல் சிந்திக்கத் தொடங்கியது. சிறிது காலத்தின் பின்னர் "வெற்றி இலக்கை அடைவதற்கு முன்னர் சோர்ந்து இருந்தமையே தனது தோல்விக்குக் காரணம்" என முயல் கண்டறிந்தது. தற்போது மீண்டும் ஆமையிடம் சென்று "இன்னொரு தடவை ஓட்டப் பந்தயம் வைப்போமா?" என முயல் கேட்டது. முதலில் வென்ற எண்ணத்தில் இப்போதும் ஆமை சம்மதம் தெரிவித்தது. போட்டி ஆரம்பமாகியது. முயல் வேறு எந்தச் சிந்தனையும் இல்லாமல் தனது வெற்றி இலக்கை அடையும் வரை சோர்ந்து போகாமல் ஓடி வெற்றி பெற்றது.

தற்போது ஆமை யோசிக்க ஆரம்பித்தது. எனது தோல்விக்குக் காரணம் என்ன? நான் வெற்றி பெறுவதற்கு என்னிடம் உள்ள பலம் என்ன? முயலிடம் உள்ள பலவீனம் என்ன? என்று சிந்திக்கத் தொடங்கி, அதற்கான விடையையும் கண்டு பிடித்தது. தற்போது முயலிடம் சென்ற ஆமை "இன்னொரு தடவை ஓட்டப் பந்தயம் வைப்போமா?" எனக் கேட்டது. முயலும் முதலில் முடிவெடுத்ததுபோல் வெற்றி இலக்கை அடையும் வரை நிற்காமல் ஓட வேண்டும் என்ற நினைப்புடன் ஒத்துக் கொண்டது. தற்போது ஆமை கூறியது நான் சொல்லும் வழியாகச் சென்று வெற்றிக் கொடியை எடுக்க வேண்டும் "என்றது. முயலும் வேறு எந்த யோசனையும் இன்றிச் சம்மதித்தது. போட்டி ஆரம்பமாகியது.

முயல் மிக வேகமாக ஓடத்தொடங்கியது . குறித்த வழிக்கு சிறிது தூரம் சென்றதும் வெற்றிக் கொடிக்கு முன்பாக ஆறு ஒன்று குறுக்கிட்டது . ஆற்றைச்சுற்றி வெற்றிக்கொடி இருக்குமிடத்துக்கு வருவதாயின் நீண்ட நேரம் எடுக்கும் என்பதைப் புரிந்து கொண்ட முயல் செய்வதறியாது ஆற்றின் கரையில் நின்று கொண்டிருந்தது. அப்போது ஆமை மெல்ல மெல்ல நடந்து வந்து ஆற்றுக்குள் குதித்து வெற்றி கொடியை அடைந்து வெற்றி பெற்றது. முயலும் ஆமையும் தற்போது நண்பர்கள் ஆனார்கள். ஒவ்வொருவரிடமும் பலமும் இருக்கும்; பலவீனமும் இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டார்கள். தற்போது வெற்றி இலக்கை அடைவதற்கு இருவரின் பலத்தையும் ஒன்று சேர்த்தனர். ஆரம்ப இடத்தில் முயல் ஆமையை ஆற்றங்கரை வரைக்கும் சுமந்து ஓடி வந்தது.

ஆற்றங்கரையிலிருந்து தண்ணீருக்குள் ஆமை தனது ஓட்டில் முயலை சுமந்து அடுத்த கரையை அடைந்தன. தற்போது குறுகிய நேரத்தில் வெற்றி இலக்கை இருவரும் அடைந்தனர். இதேபோல் மாணவர்களும் தமது பலம் பலவீனம் என்பவற்றை அறிந்தால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும்.

**க.கனகராசா,**
உடற்கல்வி ஆசிரியர்.
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.அச்சுவேலி.

# சொற்சிலம்பம் போட்டி 16

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| | ■ | 8 | | | | ■ | ■ |
| 09 | 10 | | ■ | ■ | 11 | 12 | ■ |
| 13 | | ■ | 14 | | | | |
| ■ | | 15 | | ■ | ■ | | ■ |
| 16 | | | | | 17 | ■ | 18 |
| | ■ | 19 | | ■ | 20 | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:..............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. இதமான உரையாடல் 4. போதை தரும் பொருளொன்று 6. வசி 7. இறக்கைகள் கொண்ட இருகாலி 8. மேற்படிப்புக்கான தளம் 9. வேள்வி 11. ஒலியை உணரும் உறுப்பு. 13. நகை 14. பறப்பவைகள் 15. மனிதனுடன் ஒப்பிடுகையில் மிருகங்களுக்கேயான விசேட உறுப்பு 16. நீரைத் தேக்கி வைப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடு 19. பல சீப்புக்களை உள்ளடக்கியது/ கொத்து 20. புராணக் கதைகளில் வரும் வரம் கொடுக்கும் பெண் பாத்திரம்.

## மேலிருந்து கீழ்

1. துறவறம் பூண்டவர் 2. சாமர்த்தியம் 3. கேள்விக்கு வழங்கப்படுவது 4. நினைவிலிருந்து அகற்று. 5. அழுக்குத் துணிகளை சுத்தம் செய் 7. விதூஷகன்/ கோமாளி 10. விறகு எரிந்த பின்னர் எஞ்சுவது 12. மேலும் பகுக்க முடியாதது. 14. பல்வேறு வகைப்பட்ட அம்சங்கள் 15. தேர்தலொன்றில் வெற்றியாளரைத் தீர்மானிப்பது இதுவே. 16. வெட்டு என்பதை இப்படியும் சொல்வர். 17. தொலைந்ததை கண்டுபிடி என்ற ஏவல் சொல் (குழம்பியுள்ளது) 18. அறிவில் சிறந்தவர்.

### சொற்சிலம்பம் போட்டி 14 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.அமைதி, 4.தசிகாஏ (ஏகாதிசி), 7.மைத்திரிபால, 9.தல், 10.பிள, 11.கனிமம், 13.பணம் 14.தூரம், 15.காலனித்துவ, 17.பாசை, 18.புனர்வாழ்வு

**மேலிருந்து கீழ்**

1.அமை, 2.மைத்துனி, 3.திதி, 4.தபால், 5.சில, 6.ஏராளம், 8.ரிதம், 10.பிணம் 11.கலிகாலம், 12.மன்னிப்பு, 13.பரவ(ல்), 14.தூதுவர், 16.அசைவு, 17.பாழ்

**சொற்சிலம்பம் போட்டி இல.16**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**16.10.2020** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 14இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
செல்வகுமார் ஆரபி,
நாவற்காடு, வரணி

**2 ஆம் பரிசு**
திருமதி ப.சிவபாலேஸ்வரி,
22/18 விதானை வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
க.தில்லை,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**4 ஆம் பரிசு**
கே. இராஜகோபால்,
கள்ளி வீதி, வட்டுக்கோட்டை

**5 ஆம் பரிசு**
யோகராசா சுதர்சினி,
சரசாலை தெற்கு, சாவகச்சேரி

○ சிக்மலிங்கம் றெஜினோல்ட்



# காடுகளை காப்பது யார்?

இயக்கச்சிப் பகுதியில் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குரிய காட்டுப்பிரதேசத்தில் காடழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 12 பேர், குறித்த திணைக்களத்தினரால் 03.06.2020 அன்று கைதுசெய்யப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு பிணையில் 12 பேரும் விடு விக்கப்பட்டுள்ளனர். வழக்கு விசாரணைகள் தொடர்ந்து நடக்கும் என்று அறிய முடிகிறது.

வனஜீவராசிகள் திணைக்களத்தினால் எல்லைப் படுத்தப்பட்ட பிரதேசத்துக்குள் சட்டவிரோதமாக நுழைந்து காடழிப்பில் ஈடுபட்டதால்தான் இவர்களைக் கைது செய்ய வேண்டி ஏற்பட்டது என வனஜீவராசிகள் திணைக்களம் கூறுகிறது.

அப்படியல்ல. நாங்கள் எங்களுக்கென விவசாயச் செய்கைக்கென பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட அரச காணி வழங்கல் அனுமதிப்பத்திரமுடைய - எல்லைப்படுத்தப்பட்ட நிலத்தில் வைத்தே கைதுசெய்யப்பட்டோம் என்கின்றனர் கைதுசெய்யப்பட்டவர்கள் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்கள்.

ஆனால், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட ஏனைய துறைசார் பொறுப்பதிகாரிகளிடம் விசாரித்தபோது, உண்மை விவரம் வேறு என்று தெரியவருகிறது.

குற்றம்சாட்டப்பட்டவர்கள் காண்பிக்கும் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிலப் பகுதி வேறு. அவர்கள் காடழிப்பில் ஈடுபட்ட நிலப்பகுதி வேறு. உண்மையில் அது வனஜீவராசிகள் திணைக்களத்துக்குரியதே என்று உறுதி கூறப்படுகிறது. பிரதேச செயலக வட்டாரங்களின் தகவலும் ஏறக்குறைய இதை உறுதிப்படுத்துகின்றன. எனினும் இது தொடர்பான இறுதி விளக்கம் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே கிடைக்கும். எதன்பொருட்டும் இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதையும், சிதைக்கப்படுவதையும் நாம் அனுமதிக்க முடியாது. போரினாலும் படைத்தரப்பினாலும் பெருமளவு இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டும், அழிக்கப்பட்டுக் கொண்டும் உள்ள சூழலில் மக்களும் இப்படிக் காடழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை எப்படி அனுமதிப்பது?

**புலிகளின் காலத்துக் காடுகள்**

ஒருகாலம் காடழிப்புக்கு எதிராக விடுதலைப்புலிகள் கடுமையான தண்டனை வழங்கும் நடைமுறையைக் கொண்டிருந்தனர். விவசாயத் தேவைகளுக்கான நிலம் வேண்டும் என்ற அடிப்படையிலோ அல்லது குடியிருப்புக்கெனவோ எவராவது காடழிப்பில் ஈடுபட்டால், அவர்களுக்குப் புலிகளின் நிர்வாகத்தில் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.

அனுமதியின்றிக் காட்டில் மரம் வெட்டுவோரும் காடழிப்பில் ஈடுபடுவோரும் கைது செய்யப்பட்டு, விசாரணையின் பின்னர் காடுருவாக்க நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தத் தண்டனைக்காலம் இரண்டு மூன்று ஆண்டுகள் வரையில் கூட நீடிப்பதுண்டு. அதுவரையிலும் குறித்த குற்றவாளிகள் காட்டுருவாக்கப்பணிகளிலும் காடு மற்றும் சூழலியல் பயிற்சிகளிலும் ஈடுபடுத்தப்படுவர். காடு நமது மிகப்பெரிய வளம் என்பதோடு அது சூழல் பாதுகாப்புக்கும் மழை வீழ்ச்சிக்கும் அவசியமானது என்பதே இதற்குக் காரணம். இதேவேளை அப்படி எவருக்காவது நிலம் வேண்டுமாக இருந்தால், அதற்குரிய வகையில் துறைசார் வல்லுநர்களோடும் பொறுப்பான அரச அதிகாரிகளோடும் இணைந்து சூழலியல் பாதுகாப்பின் அடிப்படையில் தேவைகள் பகுத்தாராயப்பட்டு, அதன் பிறகே உரிய நிலம் இனங்காணப்பட்டு வரையறுக்கப்பட்ட அளவுகளில் காடழிப்புக்கு இடமளிக்கப்பட்டது. இதற்குப் பதிலாக வேறு பொருத்தமான இடங்கள் இனங்காணப்பட்டு அங்கே புதிய காடு வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. இதைத் தவிர, அனுமதியின்றி பிற தேவைகளுக்காக மரம் வெட்டுவதோ தடிகளை வெட்டுவதோ கூட தடை செய்யப்பட்டிருந்தது.

தேவையான மரங்களும் தடிகளும் பொதுமக்களுக்கு வனவளப்பாதுகாப்புப் பிரிவின் ஏற்பாட்டில் பிரதேச ரீதியான களஞ்சியங்களிலிருந்து குறைந்த விலையில் வழங்கப்பட்டன. ஆகவே காடழிப்பை முடிந்தவரையில் புலிகள் தடுத்து வந்தனர்.

**காடழிப்புக் கில்லாடிகள்**

ஆனால், இன்று நடப்பதோ வேறு. கண்டபாட்டுக்குக் காடுகள் அழிக்கப்படுகின்றன. சட்டவிரோதமாகக் காடுகளை அழிப்போரைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மிகப் பலவீனமாகவே காணப்படுகின்றன. வனப்பாதுகாப்புத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலர்கள், பொலிஸ் என அதிகாரமுள்ள தரப்புகள் சட்டவிரோதக் காடழிப்புகளைக் கட்டுப்படுத்த முற்பட்டாலும், இந்தத் தரப்புகளைச் சுழித்துக் கொண்டு அல்லது இவற்றுக்குத் தண்ணி காட்டிக் கொண்டு கில்லாடிகள் காடுகளை தினமும் அழித்துக் கொண்டேயிருக்கிறார்கள். காடுகள் மட்டுமல்ல, காட்டில் உள்ள பெறுமதி மிக்க மரங்கள் வெட்டப்படுவது தொடக்கம், காட்டுப் பிரதேசங்களில் உள்ள ஆறுகளிலிருந்து மணல் அகழப்படுவதும் கிரவல் எடுக்கப்படுவதும் சட்டவிரோதமாக நடக்கின்றன. மணல் அகழ்வும் கிரவல் எடுப்பும் பெருமளவில் காடுகளை அழிக்கின்றன. அல்லது பெருமளவு காடுகள் அழிவழிடையக் காரணமாகின்றன. நம்முடைய சூழலியல்வாதிகளோ குளிரூட்டப்பட்ட மண்டபங்களில் கருத்தரங்குகளை நடத்துகிறார்கள். இதுசார்ந்த ஆர்வலர்களும் அறிஞர்களும் ஊடகங்களில் கட்டுரைகளை எழுதிக் கொண்டும் பேசிக் கொண்டுமிருக்கிறார்கள்.

வடக்கில் பரவலாகக் காடழிப்புப் பல இடங்களிலும் ஒரு இரகசிய நடவடிக்கையாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிகளவில் காடழிப்பு இடம்பெறுவது, இப்போது பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள கிளாலி தொடக்கம் இயக்கச்சி வரையான பிரதேசத்திலேயே.



**பறிபோகும் பச்சிலைப்பள்ளிக்காடுகள்**

வடக்கில் பரவலாகக் காடழிப்புப் பல இடங்களிலும் ஒரு இரகசிய நடவடிக்கையாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணக்குடாநாட்டில் அதிகளவில் காடழிப்பு இடம்பெறுவது, இப்போது பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உள்ள கிளாலி தொடக்கம் இயக்கச்சி வரையான பிரதேசத்திலேயே. இதிலும் தற்போது மும்முரமாக காடழிப்பு நடைபெறுவது இயக்கச்சியிலேயே.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள காடுகளில் முக்கால் வாசிக்கு மேல் அழிக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலகம் இதற்கு எதிராகக் கடுமையான தடை முயற்சிகளில் ஈடுபட்டாலும் காடழிப்பாளர்களை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை.

(07ஆம் பக்கம் பார்க்க)





# 'அபூர்வ வைத்தியர்'

ம.பா.மகாலிங்கசிவம்

புலவர் ம.பார்வதிநாதசிவம் மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை, குருகவி ம.வே. மகாலிங்கசிவம் எனத் தொடர்ந்த கவிதை மரபின் மூன்றாவது பரம்பரையைச் சேர்ந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே புலவர் பட்டம் பெற்றவர். 'காதலும் கருணையும்' 'இருவேறு உலகம்' முதலிய ஆறு கவிதைத் தொகுப்புக்களையும் 'தமிழ்ச் செல்வம்'என்னும் கட்டுரைத் தொகுப்பையும் 'இலுப்பை மரநிழலிலே' என்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஆக்கங்களின் தொகுப்பையும் வெளியிட்டவர். காலைக்கதிர், ஈழநாடு, முரசொலி ஆகிய பத்திரிகைகளிற் பணியாற்றியதோடு உதயன் பத்திரிகையிலே பத்து வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றியவர்.

அவரது அபூர்வ வைத்தியர் என்னும் கவிதை இங்கே தரப்படுகிறது.

நோயொன் றுவரஎன் யாக்கை
நொந்திட அரசாங் கத்தார்
நேயங்கொண் டெமக்கென் றீந்த
நெடும்மருத் துவசா லைக்குப்
போயென்றன் நோயை மாற்றும்
புத்தாசை தோன்ற நானும்
மாயங்கள் பலவும் செய்யும்
மருத்துவ சாலை சென்றேன்!

வரிசையில் நூற்று வர்ப்பின்
வதங்கியே உயிரைக் காக்கும்
புருஷரை ஈற்றிக் கண்டேன்
"புதல்வனே! நினக்கென்?" னென்றார்
"வருஷமொன் றாக நோயால்
வாடுகின் றேன்யா" னென்றேன்
"சரிசரி எல்லாம் மாறும்
தருவதைக் குடிபோய்" என்றார்

நாடியைப் பார்த்தார் இல்லை!
நயனத்தைப் பார்த்தார் இல்லை!
மாடியைப் பார்த்த வாறே
மருந்தினை எழுதித் தந்தார்

"நாடியைப் பார்த்துத் தந்தால்
நன்" றென்றேன் "அயலில் நிற்கும்
லேடி"யைப் பார்க்க வேண்டும்
லேட் இன்னே செல் செல்" என்றார்

"நோயாளைப் பார்த்திடாதே
நோயினைக் கூறும் மன்னர்
ஓயாமல் அரசாங் கத்தில்
உயர்பணி செய்வ தாலே
நோயேதும் மறைவதில்லை"
என்று நாள் நுவன்றேன் "சுத்த
வாயாடி" என்று கூறி
வார்த்தைகள் மேலும் சொன்னார்

"எங்களின் கண்ணைப் பற்றி
ஏதும்நீ அறியா யப்பா!
அங்குனைக் காணும் போதே
அறிகுவோம் நோயை மற்றும்
இங்கெமைச் சார்வோர்க் கெல்லாம்
எம்மிடம் மருந்து மொன்றே
பங்கம் செய் உயர்வும் தாழ்வும்
பார்த்திடோம் அதனா" லென்றார்

வைத்தியத் தொழில் மக்கள் உயிர் காக்கும் தொழிலாகும். தமக்கு நோய் தொற்றிவிடுமே என்று அஞ்சாமல் நோயாளியுடன் நெருங்கியிருந்து சிகிச்சையளிக்கும் உன்னதமான தொழிலாகும். கொரோனா காலத்தில் கூட அஞ்சாமல் சிகிச்சையளித்துத் தம் ஆருயிரைத் தியாகம் செய்த வைத்தியர்கள் தொடர்பான செய்திகள் சீனா முதலிய நாடுகளிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன.

எனினும் இத்தகைய பொதுப் பண்பிலிருந்து விலகித் தனிப்பண்புகளுடன் இயங்கும் அபூர்வ வைத்தியர்கள் சிலரும் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களுள் ஒருவர் பற்றியதாகக் கவிதை அமைந்துள்ளது.

புலவர் நோயினால் உடம்பு நொந்து வைத்தியரைக் காண அரச மருத்துவமனைக்குச் செல்கிறார். அரசாங்க மருத்துவமனை இலவச மருத்துவமனை. எனவே அங்கே பல்வேறு விதமான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒரே வைத்தியரே அரச மருத்துவமனையில் ஒருவிதமாகவும், தனியார் மருத்தவமனையில் இன்னொரு விதமாகவம், நோயாளருடன் சம்பாஷிக்கும் அற்புதங்களையும் அறியலாம். இத்தகைய காரணங்களால் புலவர் அரச மருத்துவமனையை,

"மாயங்கள் பலவும் செய்யும்
மருத்துவசாலை" என்கிறார்.

*அடுத்து*

வரிசையில் நூற்று வர்ப்பின்
வதங்கியே உயிரைக் காக்கும்
புருஷரை ஈற்றிக் கண்டேன்
"புதல்வனே! நினக்கென்?" னென்றார்
"வருஷமொன் றாக நோயால்
வாடுகின் றேன்யா" னென்றேன்
"சரிசரி எல்லாம் மாறும்
தருவதைக் குடிபோய்" என்றார்.

என்னும் பாடலடிகளில் அரச மருத்துவமனையில் நாம் எப்போதும் எதிர்கொள்ளும் சன நெருக்கடி முதலிலே சித்திரிக்கப்படுகிறது. மருத்துவர் "உயிரைக் காக்கும் புருஷராகக்" காட்டப்படுகின்றார். வடிவேல் பாணியில் "ஆரம்பத்திலேயே எல்லாம் நல்லாத்தான் போய்க் கொண்டிருந்தாலும் அடுத்த பாடல் அபூர்வ வைத்தியரின் இயல்புகளை மிக நுட்பமாக படம் பிடிக்கின்றது.

"நாடியைப் பார்த்தார் இல்லை
நயனத்தைப் பார்த்தார் இல்லை
மாடியைப் பார்த்த வாறே
மருந்தினை எழுதித் தந்தார்
நாடியைப் பார்த்துத் தந்தால்
நன்றென்றேன் அயலில் நிற்கும்
லேடியைப் பார்க்க வேண்டும்
லேட் இன்னே செல் செல்" என்றார்.

என அப்பாடல் அமைகிறது. அபூர்வ வைத்தியர் கையில் நாடி பிடித்துப் பார்க்கவும் இல்லை. கண்களைக் கூடப் பார்க்கவில்லை. மாடியைப் பார்த்தவாறே மருந்தினை எழுதிக் கொடுத்தார் என்பதன் மூலம் தொழிலில் அக்கறையற்ற நிலை வெளிப்படுத்தப்படுகிறது. அயலில் நிற்கும் லேடியைப் பார்க்க வேண்டும் என்ற கூற்றின் மூலம் ஆண்களை விடப் பெண்க ளைப் பரிசோதிப்பதிலுள்ள நாட்டம் விபரிக்கப்படுகி றது. நாடி மாடி என்னும் சொற்களுடன் எதுகையாக அமையக் கூடியதாக 'லேடி' என்னும் ஆங்கிலச் சொல் பொருத்தமாக வந்துள்ளது.

கவிதையின் நிறைவுப்பகுதியில் நோயாளியைப் பார்க்காமலே நோயைக் கூறுபவர்கள் இருப்பதாலேதான் நோய் எதுவும் மாறுவதில்லை என்று கவிஞர் குற்றச்சாட்டை முன்வைக்கிறார். இதற்கு மருத்துவர் கூறும் விளக்கங்கள் நகைச்சுவை பயப்பனவாக உள்ளன. 'தம்பி எங்களின் கண்களைப் பற்றி நீ ஒன்றும் அறியமாட்டாய். நீ தூரத்தில் வரும் போதே உனது நோயை நாங்கள் கண்களால் இனங்கண்டு விடுவோம். அதுமட்டுமா? இந்த அரச வைத்தியசாலையில் உயர்வு, தாழ்வு இல்லாமல் சமமாக நாங்கள் வழங்குவதும் ஒரே மருந்துதான். (பனடோல்?) எனவே நோயைத் தவறாக இனங்கண்டாலும் நீ பயப்படத் தேவையில்லை என்பது குறிப்பாகக் கூறப்படுகின்றது. தொகுத்து நோக்கில் சமூகத்தில் காணப்படும் அபூர்வமான விடயம் ஒன்றை புலவர் பார்வதிநாதசிவம் நகைச்சுவையோடு வாசகர் முன் வைத்திருக்கிறார் என்றே கூற வேண்டும்.

# காடுகளை

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே இதற்கு உயர் மட்டத்திலான ஒரு பொறிமுறை அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப்படுகிறது. இல்லையெனில் மீதமுள்ள காடுகளும் அழிக்கப்பட்டு விடும். காடுகள் அழிந்தால் அந்தப் பிரதேசம் முற்றாகவே பாதிக்கப்படும். குறிப்பாக காடற்ற அந்தப் பிரதேசம் கோடைகாலத்தில் பெரும் வறட்சியை எதிர்கொள்ள நேரிடும். சோளகக் காற்றுக்காலத்தில் அங்குள்ள மண் காற்றினால் அள்ளப்பட்டு நிலத்தின் தன்மை மாறுதலடையும். நில அமைப்பும் கெட்டு விடும். மழை வீழ்ச்சியும் அங்கே குறையும். இதெல்லாம் நிலத்தடி நீரைக் கெடுத்து உப்பு நீராக்கக் கூடிய வாய்ப்புகளே அதிகமுண்டு.

**நெருங்கிவரும் அபாயம்**

இவ்வாறான தீமைகள் நடக்காமல் இதுவரையிலும் தடுத்து, இந்தப் பிரதேசத்தைக் காப்பாற்றியது இங்கிருந்த காடுகளே. அது மட்டுமல்ல, பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் லட்சத்துக்கும் மேற்பட்ட பனைகள் போர் முடிந்த பின்னர், காணிகளைச் சீர்ப்படுத்தல் என்ற பெயரில் அழிக்கப்பட்டுள்ளன. பனைகளாலும் காடுகளாலும் நிறைந்து பச்சிலைப்பள்ளி என்ற அழகிய பெயரைக் கொண்ட இந்தப் பிரதேசம் எதிர்காலத்தில் வேறு விதமாக உணரவும் அழைப்படவும் கூடிய நிலையே காணப்படுகிறது.

இந்த அபாய நிலை குறித்து சரியான விழிப்பூட்டல் நடவடிக்கைகள் மிக அவசியமாகத் தேவைப்படுகின்றன. குறித்த பிரதேசத்தில் உள்ள மக்கள் அமைப்புகள் உடனடியாக இதில் ஈடுபட வேண்டும். அந்தப் பிரதேசத்தில் மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களில் உள்ள மக்கள் அமைப்புகளும் நலன்விரும்பிகளும் சூழலியலாளர்களும் இதில் தலையிட வேண்டும். புவியியல் பேராசிரியர்கள், அறிஞர்கள் உடனடியாக அந்தப் பிரதேசத்துக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு உரிய அதிகாரிகளோடும் மக்கள் பிரதிநிதிகளோடும் பேசி இதற்குத் தீர்வு காணுவது அவசியம். ஏனென்றால் இது ஏதோ சிறிய பிரச்சினையல்ல. சாதாரண விடயமும் இல்லை. நீங்கள் இலங்கையின் வரைபடத்தை எடுத்துப் பார்த்தால் அதில் பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தின் தோற்றத்தையும் அளவையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியும். ஏ-9 என்றழைக்கப்படும் கண்டி -யாழ்ப்பாணம் வீதியின் இரண்டு பக்கமுமாக சுமார் ஐந்து அல்லது ஆறு கிலோ மீற்றர் அகலத்தை மட்டுமே கொண்ட இந்தச் சிறிய நிலப் பரப்பில் பல இடங்களில் உவர் வெளிகளும் உள்ளன. ஏனைய இரு புறங்களும் கடலால் சூழப்பட்டது. இதிலும் சில இடங்கள் இன்னும் ஒடுங்கியவை.

**போருக்குப் பின்னே..!**

இந்தச் சிறிய நிலப்பகுதியில்தான் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மிகப் பெரிய காட்டுப்பகுதியும் இருந்தது. ஏனைய இடங்களில் உள்ள காடுகள் கடல் சார்ந்த தாவரங்களைக் கொண்ட கண்டல் பற்றைகள் அல்லது கண்டல் காடுகள். ஆகவே மிஞ்சியிருந்த ஒரேயொரு காட்டையும் யாழ்ப்பாணம் இழந்து கொண்டிருக்கிறது. அதிலும் ஆனையிறவு தொடக்கம் இத்தாவில், முகமாலை, கிளாலி வரையில் மிக உக்கிரமான போர். நடந்த போதும் இந்தக் காடுகள் இதுவரையில் மிஞ்சி யிருந்தன. போருக்குப் பிறகே இது பெரும் அழிவைச் சந்தித்துள்ளது.

இந்தக் காடழிப்பில் ஈடுபட்டிருப்போர் வெளியார்களல்ல. குறித்த பிரதேசவாதிகளே அதிகளவில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். தங்களின் தலையில் தாங்களே தீயை வைத்துக் கொளுத்துமாற்போல இவர்கள் செயற்படுகின்றனர். இது தொடர்பாக நாம் ஆராய்ந்தபோது, பெருமளவு காணிகளை வைத்திருப்போரே மேலும் அரச காணிகளை அபகரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து இதுவரையில் எந்த அரசியல் தரப்பும் தங்களது கவலைகளையோ கரிசனைகளையோ வெளிப்படுத்தவில்லை என்பது துயரமானது. கண்டனத்துக்குரியது. வேண்டுமானால் காடழிப்பில் ஈடுபடுவோரைக் காப்பாற்றும் நடவடிக்கையிலேயே ஈடுபட முயற்சிக்கின்ற னர். வாக்குவங்கி அரசியலுக்கும் விடுதலை அரசியலுக்குமிடையிலான வேறுபாடு இது. இதனால்தான் புலிகளின் சிரத்தையைப் பற்றி மீள மீள நாம் பேச வேண்டியுள்ளது. புலிகளின் அடையாளத்தைச் சுமந்த அரசியல் செய்வது வேறு. புலிகளின் சிந்தனையைப் புரிந்து கொண்டு அதன் வழியாக அரசியலைச் செயற்படுத்துவது வேறு என்கிறோம். இனியாவது அகவிழிகள் திறக்கட்டும். நல் மாற்றங்கள் நிகழட்டும். சூழலும் மண்ணும் மக்களும் காப்பாற்றப்படட்டும்.

அன்று அகத்தில் குதூகலித்து
அலை போல துள்ளி விளையாடி
வரும் களைப்பைப் போக்க –கிணற்றில்
அளவளாவி நீர் அருந்திய சிட்டுக்கள்
வீட்டில் தரிக்கவும் நேரமற்று –சகாக்களுடன்
விளையாடி மகிழவும் விருப்பமற்று
வீண் மனவழுத்தம் மிகவுற –வாழ்வில்
வினாக்குறியாய் தவிக்கின்றார் இன்று

**ஆ.வாகினி**
யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி

தாகமதன் வேதனையால்
தள்ளி அடித்து முந்துகிறார்
கொட்டுறாங்கள் கீழே
ஆனாலும் குடிக்கட்டும்
சின்னவங்கள்
பொதுக்கிணறு ஆனாலும்
புண்ணியம் கிடைக்கட்டும்
இடுப்பிலே கையுடனே
எண்ணுகிறார்
எட்டி நின்று!

மதுமி, மல்லாவி

தேகமிளைக்க விளையாடி
தாகம் தணிக்க நீர் தேடி
தேகம் வெறுமையாகிய
தேசப் புயல்கள் நீவீர்
கற்று தேர்வில் புலிகளாகி
தேசம் காப்பீர் -எம்
தேச வேலிகளாய்

**சி.பாவரசன்**
யா/வட்டு இந்துக்கல்லூரி

தண்ணீர் பந்தலிலும்
தாகசாந்தி செய்யலாம்
கிணற்றில் குளிர் நீர் அள்ளி
கூடி நின்று குடிக்கும் சுகமே தனி
சிந்திடும் நீர் பற்றி
சிந்தியாத வயசெல்லோ

*அக்ஷிகா*

கோடி கோடியாய்
கொட்டி கோலாகல
கொண்டாட்டங்கள்
ஏழைச் சிறார்கள்
எம் நிலை இங்கு திண்டாட்டம்
சிறுவர் தினமென்று
சிறப்பாக பேசுவார்கள்
மேடைகளில் மட்டும்
மேன்மையுறுமா எம் நிலை
ஆகாரமும் இல்லை
அருந்த நீருமில்லை
இதுவே எம் வாழ்வு

**பரிசு பெறும் கவிதை**

**எஸ்.மதீசன்**
மு.வித்தியானந்தாக் கல்லூரி

உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோர்
தாகத்தை தனித்து
வாட்டத்தைப் போக்கும்
சுத்தமான நீருக்கும்
இது பொருந்தும்
நீரின் வகிபாகத்தை
திறன்பட
கூறிடும் வரலாறு

க.நாகராசா
நுணாவில் மத்தி

இயற்கையுடன் வாழும்
வருங்காலம் நாங்கள் !
ஆடிப்பாடி
கூடி விளையாடிய
அத்தனை களைப்பும்
அள்ளிப்பருகும் துளிநீரில்
அணைந்துதான் போகுமே!

**பி.நிதுஜா**
கனகராயன்குளம்

**15 இற்கான கவிதைகள்**



சஞ்சீவி போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு...

சஞ்சீவி வாரமலரில் இடம்பெற்ற
சொற்சிலம்பம் போட்டி (1–16)
மௌனமொழி (1–15) வெற்றியாளர்களுக்கு விரைவில்

# பரிசில்கள்!

உங்கள் பரிசில்களை உறுதிப்படுத்திக் கொள்ள

0773165555

## மௌன மொழி 17



**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**
**14.10.2020**

கவிதைக்கு பரிசு 1000/=

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*

0773165555

# மஞ்சள் –

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்திடம் 150 உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால் அதில் ஒருவர் சபாநாயகர் ஆகி விட்டார். எனவே வெளியில் இருந்து ஒருவரைப் பெறவேண்டும்.மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு அரசாங்கத்துக்கு நெருக்கடிகள் வருமாக இருந்தால் அதை ஈடுசெய்ய முஸ்லிம் தரப்பின் உதவியை அரசாங்கம் எதிர்பார்க்கின்றதா? 20ஆவது திருத்தத்துக்கு முஸ்லிம் தரப்பில் ஒருபகுதி ஆதரவாக வாக்களிக்குமா ? ஏற்கனவே முஸ்லிம் பிரதிநிதகள் 17 ஆவது திருத்தத்துக்கு வாக்களித்தார்கள் .

அதன்பின் அதற்கு எதிரான 18 க்கும் வாக்களித்தார்கள். அதன்பின் 18 க்கு எதிரான 19 க்கும் வாக்களித்தார்கள். இப்படியே மாறி மாறி ஒவ்வொரு ஆளும் தரப்போடும் சேர்ந்து அந்தந்த அரசாங்கம் கொண்டுவரும் யாப்புத் திருத்தங்களுக்கு ஆதரவாகக் கை உயர்த்தியிருகிறார்கள். கடந்தவாரம் ரவூப் ஹக்கீம் கூறுகிறார் முன்பு செய்த பாவங்களுக்கு பிராயச்சித்தமாக இப்பொழுது இருபத்தாவது திருத்தத்துக்கு எதிராக நானே ஒரு வழக்கைத் தாக்கல் செய்தேன் என்று. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் அரசாங்கம் 20 ஆவது திருத்தத்தை எப்படியாவது நிறைவேற்றி விட வேண்டும் என்று எல்லாவிதமான உபாயங்களையும் கைக்கொண்டு வருகிறது. இதில் ஆகப்பிந்தியது இரண்டாவது கொவிட்19 அலை என்று சந்தேகிக்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் ராஜபக்சக்களின் நட்புச் சக்தி போலத் தோன்றுகிறது. யுத்த வெற்றிவாதத்தை 2020 க்கும் புதுப்பிப்பதற்கு கொவிட்19 உதவியது இப்பொழுது 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றி ராஜபக்சக்களை மன்னர்கள் ஆக்குவதற்கும் அதே கொவிட்19 உதவப் போகின்றதா? எப்படி என்றால் 20 ஆவது திருத்தத்துக்கு எதிராக தமிழ், முஸ்லிம் சிங்கள தரப்புகள் வழக்குகளைத் தொடுத்திருந்தன. அந்த வழக்குகளின் முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இரண்டாவது கொவிட்19 தொற்றல் குறித்த அச்சம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டில் ஒரு தொகுதி கிராமங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன. பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. ஆனால் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. பொதுப் போக்குவரத்து இயங்குகின்றது. ஒரு தொகுதி கிராமங்களைத் தவிர பெரும்பாலான கிராமங்களும் நகரங்களும் வழமை போலச் செயற்படுகின்றன.

முதலாவது கொவிட்19 அலையைப் போலன்றி இப்பொழுது மக்கள் மத்தியில் பதற்றமும் அச்சமும். கிடையாது. அவர்கள் ரிலாக்ஸாக இருப்பதாகவே தோன்றுகிறது. ஆனால் நோய்த்தொற்றைக் காரணமாகக் கூறி பொதுக்கூட்டங்கள் பொதுமக்களை ஒன்று கூட்டும் நிகழ்வுகள் யாவும் வரும் 31ஆம் திகதி வரை தடை செய்யப்பட்டுள்ளன.

இதனால் 20ஆவது திருத்தத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குபடுத்த முடியாது. பொதுமக்கள் கருத்தை நொதிக்கச் செய்வதும் கடினம். மொத்தத்தில் நீதிமன்றத் தீர்ப்பு மட்டும்தான் அடுத்த கட்டத்தை தீர்மானிக்கப்போகிறது.

வெகுசன எதிர்ப்பைக் காட்டும் நிலைமைகள் பெருமளவுக்குத் தடுக்கப்பட்டுள்ளன. இப்படிப் பார்த்தால் 20 ஆவது திருத்தத்துக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு மறுபடியும் வைரஸ் அரசாங்கத்துக்கு உதவி இருக்கிறதா ? இருக்கலாம். வைரஸ் ராஜபக்சக்களை மேலும் பலப்படுத்த உதவக்கூடும். ஆனால் இனப் பிரச்சினையும் பொருளாதாரப் பிரச்சினையும் அவர்கள் தேர்தலில் பெற்ற வெற்றிகளைக் கேள்விக்குள்ளாக்கி விடுமா ?

கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப் புக்களையும் வெளிக்கொண்டு வருகின்றது.

## கிராமத்து மனிதர்கள்... 17

# நாய் வேட்டை நாகன்

இராகன்

நாகலிங்கத்தைத் தவிர்த்து நாகன் என்றும் நாராயணபிள்ளையைத் தவிர்த்து நாராயணி என்றும், கந்தவனத்தைத் தவிர்த்து கந்தன் என்றும் முருகுப்பிள்ளையைத் தவிர்த்து முருகன் என்றும் பெயர்கள் சூட்டும் வழக்கம் ஒரு காலத்தில் இருந்து வந்தது. நாகலிங்கம், நாகராசா, நாகநாதன், நாகேந்திரன் என்று வரும் பெயர்களுக்கும் கால ஒழுங்குக்குமிடையே தொடர்பிருப்பதை பலரும் அறிவர். நாகத் தோடு பின்னே ஒட்டியுள்ள லிங்கம், ராசா, நாதன், இந்திரன் என்பவை பெயர்களை பழையது, புதியது என்று இனங்காண வைத்தன. நாகன், முருகன், கந்தன் போன்ற பெயர்கள் காலம் எதுவெனக் காட்டாது மனிதர்களைத் "தரப்படுத்தும்" உபாயமாக ஒரு காலத்தில் நிலைத்திருந்தது!

நாகலிங்கம் என்றோ, நாகராசா என்றோ சூட்டப்பட்டிருக்கவேண்டிய பெயரை நாகன்" என்று சுமந்திருந்த அவனை ஊர்ப்பக்கங்களில் காணும்போது ஒருவகை உற்சாகம் பிறக்கும். கருகருவென்று இருக்கும் அவனது உடல் வியர்த்து, மழையில் நனைந்த பனையாய்த் தெரியும். உயரம் ஆறடிக்குச் சற்று மேலாகத்தான் இருக்கும். நீண்ட கருங்காலிக் குத்திகளாய் வீசி எறிந்து நடக்கும், மூவுலகும் அளக்கவல்ல கோலாவாலாக் கால்கள். தொடையின் திரட்சி தூலமாய் தெரியுமாறு எவ்வளவு உயர்த்த முடியுமோ அவ்வளவு உயர்த்திக் கட்டப்பட்ட சண்டிக்கட்டு".

கழுத்துப் பகுதியைச் சுற்றி இறுக்கியபடியிருக்கும் வெள்ளி அட்சரக்கூடு கட்டிய கயிறு. எண்ணெய் காணாது பரட்டையாய் தன் இஷ்டத்துக்கு பறக்கும் சுருள்விழுந்த கேசம். செருப்பே காணாத பன்னிரண்டாம் சைஸ் பாதம். எட்டிவைத்து நடக்கும் காலடிகளுக்கிடையே ஒரு யார் இடைவெளியிருக்கும். ஊரில் அவனது பாதம் படியாத புதர்க் காடுகளோ, பற்றைகளோ இருக்காது!

நாகனோடு சேர்ந்து ஏழெட்டுப்பேர் வருவார்கள். அவர்களும் தோற்றத்தில் அவனைப்போலத்தான் என்றாலும், அவன்தான் அந்தக் குழுவின் தலைவன் என்பது அப்பட்டமாகத் தெரியும். அவனது ஓட்டத்துக்கு ஈடுகொடுத்து அவர்களும் ஓடும் காட்சி சோம்பிக் கிடப்பவரிடத்திலும் வீரத்தை விதைக்கும் விறுவிறுப்புப் படக்காட்சியாய் விரையும். அவனது கால்களைப் போலவே நீண்ட கால்களையுடைய நாவல்பழக் கறுப்பு நாய்கள் நாலைந்து அவனது வேகத்தைக் கடந்து காற்றைக் கிழித்துச் சன்னமாய் பாயும். வேட்டை சூடு பிடிக்கும் தருணங்களில் நாகனுக்கும் நாய்களுக்குமிடையே நடைபெறும் ஓட்டப்போட்டி உக்கிரமாய் இருக்கும். இடது கையில் கல்லும் வலது கையில் பொல்லுமாய் காலை விரித்து புதர்களைக் கடந்து பாயும் பாய்ச்சலை ஹொலிவுட்" படக்காட்சியாய் இரசிக்க பலர் இருந்தனர்.

புதர்களைக் கிழித்துக்கொண்டு ஓடும் முயல்களுக்குக் குறிவைத்து நாகன் எறியும் காட்சியைப் பார்க்க ஊரின் இளவட்டங்கள் கூடிவருவர். முயல் ஓடும் வேகத்துக்கு அவனும் அவனது நாய்களும் ஓடி சுற்றி வளைத்து வியுகம் அமைக்கும் காட்சியை பார்த்து வியப்பர்!

ஆமணக்கு, பாவட்டை, காரை, அன்னமுன்னா, நொச்சி, எருக்கலை, அணிஞ்சில் என்பவை பற்றையாய் அடர்ந்து நிறைந்துபோயிருக்கும் ஊர்க் காணிகளிலும், ஊருக்கு வெளியேயுள்ள புதர்க் காடுகளிலும் நாகனின் பாதம் படாத இடங்கள் இல்லை. முயல், உடும்பு, அணில், காட்டெலி என்று அவனது வேட்டையில் அகப்படும் "அயிற்றங்கள்" பல. வேட்டை முடிந்து நாகன் குழு திரும்பும் வழியை சரியாக யாராலும் அனுமானிக்க முடியாது.

அது அன்றைய வேட்டையில் அவர்களுக்கிருக்கும் உத்வேகத்தையும், தேறும் அயிற்றங்களையும்" பொறுத்ததே. நாகன் திரும்பும் வழியை அனுமானிக்க முடிந்த ஊரவர் சிலர் தமக்கு விருப்பமான "குடலைகளை" வாங்க காத்துக்கிடப்பர்.

முயல் இறைச்சி மூட்டுவாதத்துக்கு நல்லது, உடும்பு இறைச்சி ஈளை இழுப்புக்கு நல்லது என்று தங்களுக்குத் தாங்களே சமாதானம் சொல்லிக் கொள்வர்! நாகனுக்கு அவர்களின் விருப்பு வெறுப்புகள் நன்றாகவே தெரிந்திருந்தது. வேட்டை முடியும் நேரத்தைப் பொறுத்தும், வேட்டையில் தேறும் "அயிற்றங்களின்" அளவு, வகைமைகளைப் பொறுத்தும் குடலை கட்டுவதா இல்லையா என்பதை நாகனே தீர்மானிப்பான்.

வேட்டையில் அயிற்றங்கள் "கூடுதலாகப் படும்" நாட்களில் வழியில் காத்திருப்பவர்களுக்கு விற்றுவிட்டுப் போகலாம் என்று கருதும் அயிற்றங்களை" பற்றைகளில் வைத்தே இறைச்சியாக்கி துப்பரவு செய்து, பற்றைகளில் நிற்கும் வடலிப் பனைகளில் ஓலைவெட்டி, அந்த ஓலைகளில் துப்பரவு செய்த இறைச்சியை குடலையாக கட்டிக் கொண்டு செல்வார்கள். நீளமான "காவு தடிகளில்" முன்னும் பின்னும் கட்டித் தொங்கவிட்டுக் தோளில் சுமந்து கொண்டு செல்லும் இறைச்சியாக்கப்படாதவற்றை நாகன்தான் சுமந்து செல்வான். அவற்றைச் சுமந்து அவன் நடக்கும் திருவிளையாடல் சிவாஜிகணேசன் நடை வேட்டையில் அவன் நிகழ்த்திய சாதனையின் பெருமிதத்தை ஊரவர்களுக்குக் காட்டும் ஓர் உற்சவமாய் நீளும்!

வழியில் காத்திருந்து வாங்குபவர்களில் காசு கொடுத்து வாங்குபவர்களும் இருந்தார்கள். பண்டமாற்றுச் செய்பவர்களும் இருந்தார்கள். நெல், பச்சையரிசி, தேங்காய், குரக்கன் கொடுத்து இறைச்சி வாங்குபவர்களும் இருந்தார்கள். கிடைக்கும் பொருள்களை தன்னோடு வேட்டைக்கு வந்தவர்களுக்கு நாகனே பகிர்ந்தளிப்பான்.

நாகன் பொந்தெலிகள் பிடிக்கும் நுட்பம் பார்த்திருப்பவர்களின் ஆர்வத்தைத் தூண்டும். நிலத்தோடு வளர்ந்திருக்கும் காரைப் பற்றைகளின் அடியில் நிலத்தில் எலிகள் பொந்துவைத்திருக்கும். உருண்டு திரண்டு கொழுத்த எலிகள் ஒரு காரைப் புதரின் அடியில் உள்ள வளையின்(பொந்து) வாயிலில் நுழைந்து தூரவுள்ள இன்னொரு காரைப் புதரின் அடியிலுள்ள வாயிலின் வழியே வெளியே வரும் வகையில் வாழ்விடம் அமைத்திருக்கும். காரைப் புதர்களின் கீழுள்ள வாயில்களை பரிசோதித்து எலிவளை எங்கெல்லாம் வளைந்து நெளிந்து செல்கின்றது என்ற நெற்வேக்கை" நாகன் சரியாக அனுமானித்துக் கொள்வான். தன் வேட்டைத் தோழர்களை எலி வெளியேறிவரும் எனக் கண்டறிந்த சரியான பொந்தின் வாயில்களை அண்டி பொல்லோடு நிறுத்துவான். எலிவளையின் இனங்காணப்பட்ட பிரதான வாயிலில் நாகனின் வேலை ஆரம்பமாகும்.

அடியிலே சிறு துளையிடப்பட்ட முட்டி ஒன்றினுள் தேங்காய்ப் பொச்சையும், வைக்கோலையும் இறுக்கமாக அடைந்து வைத்து, அதனுள் தணலிட்டு புகை வருமாறு செய்து, தடிப்பான புகை வெளியேறும் தருணத்தில் முட்டியில் இடப்பட்ட துளையின்வழி புகை எலிவளையின் வாயிலில் நுழையுமாறு வைத்து முட்டியின் வாய்வழி புகையை வேகமாக மூச்செடுத்து ஊதுவான். எலிவளையில் புகை நிறைந்து ஆங்காங்கே காரைப் புதர்களின் அடியில் முன்னரே கண்டறியப்பட்ட வாயில்களால் வெளிவரும்போது நாகனின் தோழர்கள் விழித்துக் கொண்டு தாக்குதலுக்குத் தயாராவர். புகை அதிகம் வெளியேறும் வாயிலில் நிற்பவன் பதற்றத்துடன் கண்வெட்டாது பார்த்தபடி நிற்பான். நாய்கள் மோப்பம் பிடித்தபடி எலிவளையில் வாயில்களைக் குறிவைத்துத் தாக்குதலுக்குத் தயாராகும்.

வளையில் புகை நிறைந்து உள்ளே இருக்கமுடியாது வெளியேறும் எலிகள் எந்த வழியால் வெளியேறும் என்பதை ஊகிக்கவே முடியாது.

வெளியேறும் எலிகள் நாகனின் தோழர்களிடமிருந்து தப்பித்தாலும் குறிவைத்தபடி நிற்கும் நாய்களிடமிருந்து தப்பித்துவிட முடியாது. பாய்ந்து வாயினால் கவ்வி ஓங்கி நிலத்தில் அடிக்கும் அடியில் கொழுத்த எலிகள் மூர்ச்சையாகி விழும்! தோழர்களின் திறமையும், நாய்களின் திறமையும் நாகனின் மூச்சில்தான் தங்கியிருக்கும். அவன் மூச்செடுத்து ஊதும் புகையின் அளவில்தான் வேட்டையின் வெற்றி தங்கியிருக்கும். மூச்சைக் கொடுத்து எலி பிடிக்கும் முயற்சியில் எப்போதாவது வெளியேறும் எலி தப்பித்துப்போனால் அவன் பேசும் தூசணைகளைக் கேட்டு நாய்களே நாணிக் குறுகும்!

ஆமணக்கு, பாவட்டை, காரை, அன்னமுன்னா, நொச்சி, எருக்கலை, அணிஞ்சில் நிறைந்த பற்றைகள் எல்லாம் துப்பரவாக்கப்பட்டு மதில் சுவர்கள் எழுப்பி நிலங்களுக்கு கொங்கிறீட் பாளங்கள் விரித்துவிட்ட இந்தக் காலத்தில் நாகனின் நினைவுகள் ஊரவர்களின் மனக்கிடங்கிலிருந்து சிலவேளைகளில் மேலேழும். அந்தப்பகுதியில் நடந்த பெரியதொரு வேட்டைக்காக பெருவெளியாய்ப் பரந்துகிடந்த தரவையில் வானவெளியிலிருந்து குதித்தவர்கள் அருகிலிருந்த நாகனின் ஊருக்குள் நுழைந்த நாள் முதலாய் நாகனிடம் குடலை வாங்க காத்திருப்பவர்களும் காத்திருப்பதில்லை!



கழுத்துப் பகுதியைச் சுற்றி இறுக்கியபடியிருக்கும் வெள்ளி அட்சரக்கூடு கட்டிய கயிறு. எண்ணெய் காணாது பரட்டையாய் தன் இஷ்டத்துக்கு பறக்கும் சுருள்விழுந்த கேசம். செருப்பே காணாத பன்னிரண்டாம் சைஸ் பாதம். எட்டிவைத்து நடக்கும் காலடிகளுக்கிடையே ஒரு யார் இடைவெளயிருக்கும்.

பொன்.வேளன்



# அதிர்ஷ்டம் கதவைத் தட்டும்போது...!

ஒரு மனிதனுக்கு கண் சிமிட்டும் நேரத்தில் அதிர்ஷ்டம் கிட்டி விடுவதுண்டு.

அத்தகைய அதிர்ஷ்டம் எங்கே, எப்போது ஒரு மனிதனுக்குக் கிட்டும் என்பதை எவராலும் கூறிவிட இயலாது. ஒருவருக்கு அதிர்ஷ்டம் கிட்டும் போது அவருக்கு வாழ்க்கையை வெற்றிகொள்ளும் வாய்ப்புக் கிட்டுகிறது. ஆனாலும் வேறு சிலருக்கு அப்படித் திடீரென அடிக்கும் அதிர்ஷ்டமே, அவர்களது வாழ்க்கையையே மாற்றி, நிம்மதியான வாழ்க்கையையும் புரட்டிப்போட்டு விடுகிறது.

அண்மையில் 'மெகாபவர்' அதிர்ஷ்டலாகச் சீட்டிழுப்பில் சுப்பர் பரிசுத் தொகையான 23 கோடி 62 லட்சத்து 2278 ரூபா என்றபெரிய'ஜக்பொட்'பணப்பரிசை ஒருவர் வென்றுள் ளார். இலங்கை லொத்தர் சபையின் வரலாற்றில் லொத்தர்சீட்டிழுப்பொன்றில் இத்தகைய அதிகூடிய பணப் பரிசில் தொகை வெல்லப்பட்டமை இதுவே முதற்தடவையாகும்.

இத்தகைய பெரும் பணத்தொகையை வென்றெடுத்த அதிர்ஷ்டசாலி இதுவரை தன்னைப் பகிரங்கப்படுத்திக் கொள்ளவில்லை. தேசிய லொத்தர் சபை, தனது சீட்டிழுப்புக்களில் பெரிய தொகையிலான பரிசுகளை வென்றெடுக்கும் அதிர்ஷ்டசாலிகளுக்கு குறித்த பரிசுத் தொகைகளைக் கையளிப்பதில் கடைப்பிடிக்கும் செயற்பாட்டு நடைமுறை விவரங்கள் பலருக்கும் தெரியாது. அந்த நடைமுறைகள் குறித்து வாசகர்களுக்குத் தெளிவுபடுத்துவது இந்தத் தருணத்தில் பொருத்தமானதாக இருக்கும்.

லொத்தர் சீட்டொன்றைக் கொள்வனவு செய்யும் எல்லோரது எதிர்பார்ப்பும் பணப் பரிசிலை வென்றெடுப்பதேயாகும். ஆனால் லொத்தர் சீட்டுக்களை வாங்கும் அனைவரும் பரிசில்களை வென்றெடுப்பதில்லை. வெறும் 20 ரூபா செலவு செய்து வாங்கும் லொத்தர் சீட்டொன்று கோடீஸ்வரர்களை உருவாக்குவது போன்று, தனது 20 ரூபா பணத்தை அநாவசியமாகத் தாம் செலவழித்ததாக கழிவிரக்கப்படுவோரும் பலர் உள்ளனர்.

தேசிய லொத்தர் சபையின் லொத்தர் சீட்டிழுப்புக்கள் பல தரப்பட்டவை. தத்தமது இலக்கினங்களுக்கான லொத்தர் சீட்டுக்களைத் தெரிவு செய்வது முதற்கொண்டு சுரண்டி அதிர்ஷ்டம் பார்க்கும் சீட்டு வரை, சீட்டிழுப்புக்கள் பல தரப்பட்டவை. லொத்தர் சீட்டுக்களை வாங்குவோரில் ஒரு சாரார் பலதரப்பட்ட நம்பிக்கைகளின் அடிப் படையில் தாம் வாங்கும் சீட்டுக்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஆயினும் லொத்தர் சீட்டுக்களை வாங்குவோர்களில் பெரும்பானாலோர் தமக்கு அதிர்ஷ்டமிருப்பின் எந்தச் சீட்டிழுப்பானாலும் தமக்கு வெற்றி கிட்டும் தானே என்ற நம்பிக்கையில் 20 ரூபாவைச் செலுத்தி ஏதோவொரு லொத்தர் சீட்டை வாங்கும் வழக்கத்தையே கொண்டுள்ளனர். இதில் கவலைக்குரிய விடயம் என்னவெனில் 20 முதல் 30 ஆண்டுகளாக தொடர்ச்சியாக இவ்வித லொத்தர் சீட்டுக்களை வாங்கிய பலரில் ஒருவர் கூட ஒரு முறையாவது ஏதாவதொரு சீட்டிழுப்பில் கணிசமான தொகையொன்றை வென்றெடுத்ததில்லை என்பதே.

இப்படியான சீட்டிழுப்பில் தமது லொத்தர் சீட்டுக்குப் பெரும் பணத் தொகையை வென்றெடுத்த அதிர்ஷ்டசாலிகளில் பலர் இன்று தமது முன்னைய வாழ்க்கை நிலையிலிருந்து வீழ்ச்சி கண்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர் என்ற அதிர்ச்சித் தகவல் பலருக்கும் தெரியாத ஒன்று.

இவ்விதம் லொத்தர் சீட்டிழுப்பில் கோடிக் கணக்கான பணத்தை வென்றெடுத்தோரில் ஒரு சாரார், தமது முன்னைய வசதியற்ற வாழ்க்கை நிலையினின்றும் மாறி,ஆடம்பர வாழ்க்கை மோகத்தால் தமது அதிர்ஷ்டமாகக் கிட்டிய பணத்தையும் ப்ல்வேறு தவறான வழிகளில் செலவு செய்து கடைசியில் ஒட்டாண்டிகளாக மாறியமைக்கு உதாரணங்களும் பலவுள்ளன. இத்தகைய தரப்பினரில் பெரும்பாலோர் தவறான சகவாசத்தால் மது,போதைப்பொருள் பாவனை போன்ற பழக்கங்களுக்கு அடிமையாகி தமது பணம் அனைத்தையும் செலவுசெய்து தமது வாழ்க்கையையே நாசப்படுத்திக்கொண்டதாகத் தகவல்களுண்டு.

அதே சமயம் தாம் தமது அதிர்ஷ்டம் காரணமாக வென்றெடுத்த பணத்தை முறையான முகாமைத்துவம் மூலம் இலாபம் தரும் முதலீடுகளில் பயன்படுத்தி, தமது வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொண்ட சிலரையும் அடையாளப்படுத்த முடிகிறது.

சரி ,நாம் வாங்கிய லொத்தர் சீட்டொன்று சுப்பர் பரிசை வென்றுள்ளது என்று வெறுமனே மன ஆறுதலுக்காவது கற்பனை செய்து கொள்வோமே. குறித்த லொத்தர் சீட்டுக்கான பரிசீலிப்புக்கு மறுநாள் பத்திரிகைகளில் வெளிவரும் சீட்டிழுப்பு முடிவுகள் மூலம் எமது வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்வோம்.

> **வெற்றியாளரது பரிசுச் சீட்டுக்கு உரித்தான முழுத்தொகையும் பரிசுத் தொகையாக வழங்கப்பட மாட்டாது. அந்தத் தொகையின் 14 வீதத் தொகை, அரச வரிக்கென கழிக்கப்பட்டு மீதித் தொகைக்கான காசோலையே வெற்றியாளருக்குக் கையளிக்கப்படும்.**

இந்த நிலையில் நாம் அந்த அதிர்ஷ்ட வெற்றி குறித்து எச்சரிக்கை உணர்வோடு இரகசியம் காக்க விரும்பினால், அடுத்து நாம் எத்தகைய நடவடிக்கையில் இறங்க வேண்டும்?

அவ்விதம் நாம் வாங்கிய லொத்தர் சீட்டுக்கு பெருந்தொகையில் பரிசு கிட்டியிருக்கிறது என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டால் அது குறித்து முதலில் தேசிய லொத்தர் சபைக்குத் தகவல் தெரிவித்தல் சிறப்பாகும்.

அதன் பின்னர் லொத்தர் சபையினூடாக நாம் சில நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும். தமக்கு சீட்டிழுப்பில் பதிவு கிடைத்ததை உறுதிபடுத்திக்கொண்டு தேசிய லொத்தர் சபைக்குச் செல்லும் அந்த வெற்றியாளர் தமது அடையாளங்களை வெளிப்படுத்தி , பரிசுக்குரிய லொத்தர் சீட்டை தேசிய லொத்தர் சபையில் ஒப்படைக்கிறார். உரிய பரிசுச் சீட்டு,லொத்தர் சபையின் அதிகாரிகளால் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும். பின்னர் வெற்றியாளரது அடையாள அட்டையின் பிரதி,வங்கிக் கணக்கிலக்கம் மற்றும் பெயர் விவரங்களடங்கிய ஆவணத்தின் பிரதி,என்பவை தேசிய லொத்தர் சபையால் பெறப்பட்டு ஆவணப்படுத்தப்படும்.இதன் பின்னர் வெற்றியாளரது கையொப்பம் குறித்த வெற்றிச் சீட்டின் பின்புறத்தில் லொத்தர் சபை அதிகாரிகளால் பெறப்படும். அதன் பின்னர், இரசாயன பகுப்பாய்வு முறையுட்பட வேறுசில நடவடிக்கைகளூடாக உறுதிப்படுத்திக் கொண்டே குறித்த வெற்றியாளரது பரிசுத் தொகை காசோலை மூலம் வழங்கப்படும்.

இங்கு முக்கியமான விடயம் வெற்றியாளரது பரிசுச் சீட்டுக்கு உரித்தான முழுத்தொகையும் பரிசுத்தொகையாக வழங்கப்படமாட்டாது. அந்தத் தொகையின் 14 வீதத் தொகை, அரச வரிக்கென கழிக்கப்பட்டு மீதித் தொகைக்கான காசோலையே வெற்றியாளருக்குக் கையளிக்கப்படும்.

குறித்த வெற்றியாளரது வெற்றி குறித்த எந்தவொரு தகவலும் வெளிச் செல்லாதவாறு இரகசியத் தன்மையை பாதுகாக்க தேசிய லொத்தர் சபை கடப்பாடு கொண்டுள்ளதெனத் தெரியவருகிறது. குறித்த வெற்றியாளருக்கான பரிசுத் தொகைக்கான காசோலை அவரிடம் கையளிக்கப்படும் காட்சி லொத்தர் சபையால் புகைப்படம் பிடிக்கப்படும்.

சிலசந்தர்ப்பங்களில் அந்தக் காட்சி தொலைக்காட்சி படப்பிடிப்பாளர் மூலமும் பொது வெளிக்குத் தெரியவரவும் வாய்ப்புண்டு. லொத்தர் சபையின் செயற்பாடுகள் வர்த்தக நோக்கத்துடன் முன்னெடுக்கப்படுவதால் பொது மக்கள் மத்தியில் லொத்தர் சபை மீதான நம்பிக்கையையும் விசுவாசத்தையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியிருப்பதே இதற்கான காரணம்.


இத்தகைய வெற்றியாளரொருவருக்கு வழங்கப்படும் மிகப்பெரிய பணத்தொகை குறித்த விபரங்கள் அல்லது ஆள் அடையாளம் வெளியே தெரியவந்தால் அவருக்குக் கப்பம் பெறுவோராலோ, அல்லது திருடர்களாலோ தொல்லைகள் ஏற்படக் கூடும். ஆனால் இதுவரை அத்தகைய சம்பவமேதும் இடம்பெற்றதாகத் தகவல் இல்லையெனத் தெரிய வருகின்றது.

அரச நிதிக்கென பரிசுத்தொகையில் 14 சதவீதத்தைக் கழித்துக்கொண்டு வெற்றியாளருக்கு வழங்கப்படும் மீதித் தொகையை வெற்றியாளர் வங்கியில் வைப்புச் செய்வாரானால் அதற்காக வரியேதும் அறவிடப்படமாட்டாது. ஆனால் அந்தப் பரிசுத் தொகையைப் பயன்படுத்தி வெறெந்த முதலீடுகளையோ, அபிவிருத்தி நடவடிக்கைகளையோ மேற்கொண்டால்,ஏன் வாகனமொன்றைக் கொள்வனவு செய்தால் கூட அதற்கான வரியை அந்த வெற்றியாளர் அரசுக்குச் செலுத்தியாக வேண்டும்.

என்ன, நாடி மீது கை வைத்து கடும் யோசனையில் ஆழ்ந்து விட்டீர்கள் போலத் தோன்றுகிறது.

இப்போது பரம இரகசியமொன்றை உங்களுக்கு வெளிப்படுத்தினால்தான் எனது மனம் ஆறும். கடந்த ஐந்தாறு வருடங்களாக தொடர்ந்து நாள் தவறாமல் ஒரேயொரு லொத்தர் சீட்டு வாங்கி அதிர்ஷ்டம் பார்க்கும் வழக்கம் என்னிடம் இருந்து வருகிறது. ஆனால் 20 ரூபா செலுத்தி வாங்கும் லொத்தர் சீட்டுக்கு பெரும்பாலும் 20 ரூபா மட்டுமே , பரிசுத்தொகையாகக் கிடைப்பது வழக்கம். ஓரிருநாள் 100 ரூபா பரிசுத் தொகை கிடைத்ததுண்டு. ஒரு நாளாவது 1000 ரூபா பரிசுத் தொகையை நான் எட்டியதில்லை.





# முதலில்.....
# கோழி வந்ததா முட்டை வந்ததா?

○ ராஜ்குமார்

கொரோனாவின் மூன்றாவது அலை இலங்கையை போட்டுத் தாக்க ஆரம்பித்து விட்டது. ஏற்கனவே முதலாம் அலை, இரண்டாம் அலை என்பவற்றை இரும்புக் கரம் கொண்டு அடக்கி விட்டு 'அப்பாடா 'என்று கொஞ்சம் அசமந்தமாக இருக்கப் போக,சந்திலே புகுந்து சிந்து பாடத் தொடங்கிவிட்டது கொரோனா. ஏற்கனவே வந்த முதலாம் அலையிலும் சரி, இரண்டாவது அலையிலும் சரி கொரோனாவின் ஆதிமூலம், ரிஷிமூலம் இலகுவாகக் கண்டறியப் பட்டதால் அவற்றை அடக்குவது சுலபமாக இருந்தது. ஆனால் இந்த மூன்றாம் அலை பெரும் தலையிடியாகவே அமைந்திருக்கிறது.


மினுவாங்கொட பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற் றும் பெண்ணொருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியதாக அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட தொழிற்சா லையில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொரோனாத் தொற்றாளர்களாக இனம்காணப்பட்டுள்ளனர். இதன்படி பார்க்கையில் முதலில் அடை யாளம் காணப்பட்ட பெண்ணுக்கு வேறு ஒருவர் மூலம் கொரோனா வந்ததா அல்லது இந்த பெண் மூலம் தான் ஏனைய சக ஊழியர்களுக்கு கொரோனா வந்ததா என்பதைக் கண்டறிய முடியாமல் முதலில் கோழி வந்ததா அல்லது முட்டை வந்ததா என்ற ரீதியில் முடியைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள் சுகாதாரப் பகுதியினர் சில தினங்களுக்கு முன் னர் இயந்திர திருத்தங்களுக்காக இந்தியர்கள் சிலர் தனிமைப்படுத்தல் விதிகளை மீறி இந்த நிறுவனத்துக்கு அழைத்து வரப்பட்டதாக சொல் லப்படுகிறது. ஆனால் அதனை நிறுவனம் மறுத்துள்ளது.

இதேவேளை கட்டுநாயக்கவிலுள்ள எயார்போர்ட் கார்டன் ஹோட் டலில் நடந்த விருந்துபசாரமொன்றில் குறிப்பிட்ட நிறுவனத்தின் அதி காரிகள் சிலர் கலந்து கொண்டுள்ளனர்.இந்த விருந்தால்தான் கொரோனா, பிரண்டிக்ஸ் நிறுவனத்துக்கு காவிச் செல்லப்பட்டதா என்ற கோணத் திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த மூன்றாவது அலை நாட்டுக்கு இன்னொரு பக்கத்திலும் பாத கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. குறிப்பிட்ட பிராண்டக்ஸ் நிறுவனம் இலங்கைக்கு வருடாந்தம் 600 மில்லியன் டொலர் (இலங்கைப் பெறு மதியில் 11ஆயிரம் கோடி ரூபா)அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொடுக்கும் மிகப்பெரிய நிறுவனம். இப்போது கொரோனா காரண மாக இந்த நிறுவனம் மூடப்பட்டால் அது நாட்டுக்கு பெரும் அந்நியச் செலாவணி இழப்பை ஏற்படுத்தும் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை இந்த மூன்றாவது அலை வடக்கிலும் தனது கைவரிசையை காட்டத் தொடங்கியுள்ளது. மினுவங் கொடை நிறுவனத்தில் கடமை யாற்றும் இரு பெண்கள் புங்குடுதீவுப் பகுதிக்கு விடுமுறைக்கு வந்திருக் கிறார்கள். அவர்களை பரிசோதித்ததில் ஒருவர் கொரோனா நோயாளி யாக அடையாளம் காணப்பட்டுள்ளார். இதனால் இவர் பயணம் செய்த பஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள், சக பயணிகள் என்றும் பலரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தவிர சக பயணிகள் பலர் அடையா ளம் காணப்படாத நிலையில் ஆபத்து ஆங்காங்கே ஒளித்திருப்பதாகவும் அஞ்சப்படுகிறது.

குறிப்பிட்ட பெண் இதற்கு முன்னர் கடந்த மாதம் 26ஆம் திகதி அவரது சொந்த இடமான புங்குடுதீவுப் பகுதிக்கு வந்தாரெனவும், அப்போது அவருக்கு திருமண நிச்சயதார்த்தம் நடந்ததாகவும் இதற்காக இவர் வவுனியா உட்பட பல இடங்களுக்கு சென்றாரெனவும் சொல்லப்படு கிறது. இதனால் அவர் சென்ற இடங்களில் உள்ள பலரும் தனிமைப்ப டுத்தப்பட்டு வருகின்றனர். இது தவிர பிரண்டிக்ஸ் நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்களில் 11 பேர் வட பகுதியை சேர்ந்த பெண்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவர்களும் முன்ன தாக யாழ்.வந்தார்களா? அல்லது இவர்களது உறவினர்கள் அங்கு சென் றார்களா என்ற ரீதியிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. கொரோனாவின் மூன்றாம் அலை தெற்கை மட்டுமல்ல வடக்கி லும் கோர தாண்டவமாடக் கூடிய ஏதுநிலை அதிகரித்துள்ளது. கண் ணுக்கு தெரியாத இந்த எதிரியை கண்ணும் கருத்துமாக எதிர்த்து சுகாதார வழிமுறைகளை மதித்து நம் ஊரையும் உறவுகளையும் காத்துக் கொள்வோம். ■



# யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு....!

அவசரமா ஒரு கடுதாசி!

ஐயா வணக்கம். நான் நல்ல சுகம். உங்கடை சுகத்தை எப்பிடி எண்டு கேக்க மாட்டன். ஏனெண்டால் எலக்சனுக்கு முதல் மத்தளம் மாதிரி அடி வேண்டத் துவங்கினீங்கள். இன்னும் எல்லாப் பக்கத் தாலையும் அடிவேண்டிக் கொண்டுதான் இருக்கிறியள்.அதிலையும் ஒட்டகத்துக்கு இடம் குடுத்த மாதிரி "அமுல் பேபிக்கு" ஒரு அறை யைக் குடுத்திட்டு நீங்கள் படுகிற பாட்டை நான் நேரிலை கண்ட னான். அந்தாள் உங்கடை தலையிலை ஏறி இருந்து கொண்டு பிச்சுப் பிடுங்கிறது வடிவாத் தெரியுது.

அது மட்டுமில்லை, கூட்டம் எண்டால் பயப்பிடுகிறியளாம். நீங்கள் பயப்பி டுகிற விசயம் கூட்டத்தைப் பற்றியில்லை எண்டது எங்களுக்குச் சரியா விளங் குது. கூட்டத்துக்கு வாறவைக்கு எப்பிடி? எங்கை ? ஆருக்குப் பக்கத்திலை கதிரை போடுகிறதெண்டதுதான் இப்ப உங்களுக்குள்ள தலையிடி எண்டும் கேள்விப்பட்டனான்.உ ந்தக் கதிரை போடுற விசியத்திலை கவனமாக இருங்கோ. ஏனெண்டால் உந்தக் கதிரை போடுறதிலை பிழை விட்டால் அதாலை உங்கடை கதிரைக்கும் "ஆப்பு" வைச்சுவிடு வினம். கவனம்.

நீங்கள் ஒரு நல்ல மனுசன் எண்டு கேள்வி. ஆனால், "ஏன் இஞ்சை வேலைக்கு வந்தன்?" எண்டு மனம் சஞ்சலப்படுகிறியள் போலை கிடக்கு . இதுவரைக்கும் பாத்திருப்பியள். இஞ்சை சனத்தாலை உங்களுக்கு ஒரு சங்கடமும் இல்லை. யாழ்ப்பாணச் சனம் நல்லவை பாருங்கோ. ஆனால் உங்களைச் சுத்தி இருக்கிற சில கிருமியளாலைதான் உங்களுக்கு இவ்வளவு சங்கடங்களும், ஐயா.. நான் கிருமியெண்டு கொரோனாவைத் தான் சொன்னனான்.

கொரோனா எண்டு சொல்லேக்கைதான் ஞாபகம் வருகுது. நாட்டிலை இப்ப திரும்ப கொரோனா அமளியாக் கிடக்கு. கடைத்தெருப் பக்கம் போக முடி யேல்லை. சனம் கண்டதை எல்லாம் வேண்டிப் பதுக்குதினம் . கொஞ்ச நாளைக்கு முன்னம் நான் தவறவிட்ட முகக் கவசத்தைத் தேடி எடுத்துக் கழுவிக் காயப்போட்டு எடுத்துக் கொழுவிப்போட்டன். சிரியாதையுங்கோ. முகக் கவ சத்தைப் பாக்க அந்தக் காலத்திலை அப்பு கட்டின "கோவணம்" தான் ஞாப கத்துக்கு வருகுது. கொரோனா கோவணத்தை மட்டுமில்லை, பல பழைய பழக்க வழக்கங்களையும் ஞாகப்படுத்திப் போட்டுது எண்டுதான் சொல்லவேணும். அந்தவகையிலை கொரோனவுக்கு நன்றி .

ஐயா, மன்னிக்க வேணும். நான் உங்களுக்கு எழுதவேண்டியதுகளை விட்டிட்டு தேவை இல்லாததெல்லாத்தையும் எழுதிப்போட்டன் எண்டு நினைக்கிறன். கொரோனவின்ரை அலை இரண்டாந்தரமும் திருப்பி அடிக்கத் துவங்கிவிட்டுது. சனம் பழையபடி வீட்டுக்கை அடையத் துவங்கிவிட்டினம். இந்தமுறை நீங்கள் "கவனம்" எண்டு இடிச்சச் சொல்லத் தேவை இல்லை. சனத்துக்கு என்னெண்டு "அஜஸ்ட்" பண்ணவேணும் எண்டு எல்லாம் தெரியும்.

போன முறையே நெளிவு சுளிவுகளையும் அவை கற்றுக் கொண்டிட் டினம். பாட்டுக்கார பாலசுப்பிரமணியத்துக்கும், அமெரிக்காவின்ரை சண்டி யன் ட்ரம்புக்கும் கொரோனா வந்திட்டுதெண்ட உடனை சனம் முழிச்சிட்டுது. இருந்தாலும் நீங்கள் நினைக்கிறமாதிரி ஒண்டும் நடக்கேல்லை. நாட்டிலை ஒண்டும் நடக்காத மாதிரித்தான் சனம் அலைஞ்சு திரியிதுகள். கொரோனாவாலை கொழுத் தது வியாபாரிமார்தான் எண்டு சொல்ல வேணும். விக்க ஏலாமல் கிடந்த வண்டிச்ச பருப்பு முதல் கொண்டு பச்சைஅரிசிவரை காசாக்கிப் போட்டாங்கள். ஒரு கடையிலை இரண்டு வருசமா விக்கேலாமல் உழுத்துப் போய்க் கிடந்த பழப்பு ளியை தேங்காய் எண்ணை ஊத்திக் குழைச்சுக் காசாக்கிப் போட்டாங்கள் எண் டால் பாருங்கோவன். அதை வேண்டித் தின்னுறவையள்தான் பாவம்.


பேப்பரிலை ஆளுக்கு ஆள் மாறி மாறி "அப்பிடிச் செய்யுங்கோ, இப்பிடிச் செய்யுங்கோ" எண்டு அறிக்கையை எல்லாம் தரப்பிலை இருந்தும் "வாணம்" விட்ட மாதிரி விடுகிறியள். ஆனால் அதெல்லாம் புஸ்வாணம் எண்ட மாதிரி எல்லே கிடக்கு. "பஸ்ஸுகளில சமூக இடைவெளியைப் பேணி ஆக்களை ஏத் துங்கோ. இல்லாட்டிச் சட்டம் பாயும்" எண்டு ஒரு அறிக்கை வந்திருந்ததைப் பாத்தன். ஆனால்,சட்டம் பாஞ்சுதோ இல்லையோ, போன திங்கட்கிழமை, சாக்குக்கை பஞ்சை அடைஞ்ச மாதிரிச் சனத்தை அடைஞ்சுக் கொண்டு பஸ் ஒண்டு பாய்ஞ்சு போறதை என்ரை கண்ணாலை பாத்தனான். ஆனால் செவ் வாய்க்கிழமைக்குப் பிறகு நிலைமை கொஞ்சம் மாறினாப்போலைதான் கிடந் தது. பஸ்காரர் சட்டத்தை மதிச்சு ஏத்தாமல் விட்டதாச் சொல்ல ஏலாது. சனந் தான் பயத்திலை ஏறேல்லை.

கொரோனா வந்திட்டுது எண்டு சொல்லி, கல்வித் திணைக்களமும் நல்ல பிள் ளையள் மாதிரி " உடனை நடவடிக்கை எடுக்கிறம் " எண்டு சொல்லிப் பள்ளிக் கூடங்களையும் இழுத்து மூடிவினம். ஆனால், போன செவ்வாய்வரை தனிப்பட்ட ஆக்கள் நடத்திற பின்னேர வகுப்புகள் இருக்கிற றோட்டுப் பக்கம்.வகுப்பு முடி யிற நேரம் போகேலாமல் போச்சுது. பள்ளிக்கூடத்தைப் பூட்டச் சொல்லி நீங்கள் ஓடர் போட்டால் தனியார் வகுப்பு வைக்கிற வாத்திமாரும் அதை உடனை கடைப்பிடிக்க வேண்டியதுதானே? அப்ப பள்ளிக்கூடத்துக்கு வாற கொரோனா அங்கை தனியார் வகுப்பிலை வராதோ? உதென்ன சட்டம்? கல்வித் திணைக் களமும் உதைக் கவனிக்கிறமாதிரி இல்லைப் போலை... செவ்வாய்க்கிழமை கேள்விப்பட்டன் தனியார் வகுப்புகளையும் நிப்பாட்டினமாம் எண்டு.

அடுத்தது பொலிஸ்காரர், அவையும் சனத்தைக் கூப்பிட்டு வைச்சுக் கொண்டு கொரோனா வகுப்பு எடுக்கினமே ஒழிய, காரியம் சரியா நடந்ததெண்டு சொல் லமாட்டன். உண்ணாவிரதத்தை நிப்பாட்ட இரவிரவா ஆக்களை எழுப்பிக் கையெழுத்து வேண்டி வழக்குப்போடத் தெரியுது. ஆனால் தமிழ் நாட்டிலை இருந்து கடத்திவாற சாமானுகளோடை கொரோனாவும் எப்பிடி நாட்டுக்கை வருகுதெண்டு தெரியேல்லை! கேரளக் கஞ்சாவும் எப்பிடி வருகுதெண்டு தெரி யேல்லை!! கறி மஞ்சளையும் ஆர் கொண்டு வருகினம் எண்டதை அவை ளாலை அறிய முடியாமல் கிடக்கு எண்டதுதான் பகிடியாய்க் கிடக்கு . புலி பிடிக்கத்தெரிஞ்ச அவையளுக்கு எலி பிடிக்கத் தெரியேல்லை எண்ட கதை மாதிரியான கதைதான் இது. இப்பிடிச் சொல்லுறன் எண்டு தயவு செய்து குறை நினைக்க வேண்டாம். அப்பிடியான ஒரு தேசத்திலைதான் நாங்கள் இருக்கிறம். நாட்டிலை நடக்கிறதையெல்லாம் பாக்கேக்கை, உங்களுக்குக் கீழை இருக்கிற அதிகாரியள் அதிகாரியளா இல்லைப் போலை. அவையள் ஆற்றையேன் எடு பிடியா இருக்கினமோ எண்டு எனக்குச் சமசியமாக் கிடக்கு. ஒருக்கா அதைப் பாருங்கோ. பாப்பியளே?

தங்கள் மேல் அதி பட்சமுள்ள
அப்பாவி அன்னமுத்து.

# சர்வதேசத்தர மருத்துவத் வழங்குவதே என் மக்களுக்கு செய்யும் கை



துண்டாடப்பட்ட கையைக் கூட வெற்றிகரமாகப் பொருத்திய பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர்

**இளஞ்செழிய பல்லவன்**

சந்திப்பு: டிலீப் அமுதன்

**கே: மருத்துவத்தில் எத்தனையோ துறைகள் இருக்கும் நிலையில் 'பிளாஸ்ரிக்' சத்திர சிகிச்சையில் நிபுணராக வரவேண்டும் என்று விரும்பியது ஏன்?**

ப: போரால் எமது மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதேபோன்று தீக்காயங்கள், நாள்பட்ட புண்கள் என்பவற்றோடு எமது மக்கள் தினமும் போராடுகின்றார்கள். அதற்கு தீர்வு காணவேண்டும் என்பதற்காக, எங்கள் மக்களுக்கு எது தேவையோ அதனை நான் கற்றேன். இலங்கையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர்கள் 14 பேர் இருக்கின்றார்கள். அவர்களில் வடக்கு - கிழக்கில் பணியாற்றும் முதலாவது தமிழ் பேசும் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் நான். வடக்கு மற்றும் கிழக்கு என இரண்டு மாகாணங்களுக்குமே முதலில் நியமிக்கப்பட்டேன். இப்போது கிழக்கு மாகாணத்துக்கு ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதனால் வடக்கு மாகாண மக்களுக்கு நான் சேவையாற்றுகின்றேன்.

**கே: பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை என்றால் என்ன? இந்தச் சத்திர சிகிச்சையால் பக்க விளைவுகள் ஏதாவது ஏற்படுமா?**

ப: பிளாஸ்ரிக்' சத்திரசிகிச்சை தொடர்பில் மக்கள் மத்தியில் அச்சம் இருக்கின்றது. பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜக்சன் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்துகொண்டதால் புற்றுநோய் ஏற்பட்டு உயிரிழந்தார் என்று மக்கள் நம்புகின்றார்கள்.

பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை என்றால், 'பிளாஸ்ரிக்' வைத்துப் பொருத்துவது. அதனால் பக்க விளைவுகள் வரும் என்று மக்கள் பயப்படுகின்றார்கள். பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை என்பது பிளாஸ்ரிக் துண்டுகளை வைத்து செய்யப்படும் சத்திரசிகிச்சையல்ல. ஒரு மனிதனின் அவயங்களை சீராக்கும்போது அவர்களின் உடலிலுள்ள இழையங்களை வைத்து, அதனை மறு சீரமைத்து சாதாரண இயல்புத் தோற்றமுடையவராக மாற்றும் ஒன்றைத்தான் நாங்கள் செய்வோம். செயற்கையாக எதுவும் செய்வதில்லை. செயற்கையாக எதனையும் புகுத்துவதும் இல்லை.

## மறுசீரமைப்பு சிகிச்சை

**கே: பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை என்றதும் மக்கள் மனதில், பிரபலங்கள் தங்களை அழகுபடுத்த மேற்கொள்ளும் சத்திர சிகிச்சைகளே நினைவுக்குவரும். அதனையும் தாண்டி எவ்வாறான விடயங்கள் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன?**

ப: அழகுபடுத்தும் சத்திர சிகிச்சை மாத்திரம்தான் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை என்று மக்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அரச மருத்துவமனைகளில் 90 சதவீதமான பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகளாகவே மறுசீரமைப்பு சத்திர சிகிச்சைகளே மேற்கொள்ளப்படு கின்றன. அழகுபடுத்தலுக்கான பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகள் மிகக் குறைவான அளவே செய்யப்படுகின்றன.

பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையில் மறுசீரமைப்பு சத்திர சிகிச்சையின் ஊடாக பிறக்கும்போதே உள்ள அவயவக் குறைபாடுகளை சரி செய்யலாம். கால் வளைந்திருத்தல், கையில் ஒரு விரல் கூடுதலாக இருத்தல், அன்னப்பிளவு உள்ளிட்ட சகல வ்கையான குறைபாடுகளையும் சரி செய்ய முடியும். பிறந்து இரண்டு வாரங்களான குழந்தை ஒன்றுக்கு அண்மையில் இவ்வகையான சத்திர சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்திருந்தேன்.

சில குழந்தைகள் பிறக்கும்போது கைகளுக்குள் இருக்கும் நரம்பு அறுந்து விடுவதால் அவர்களது கைகள் தொங்கிக் கொண்டிருக்கும். இதனைக் கூட பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையால் வெற்றிகரமாகச் செய்யமுடியும்.

அடுத்து விபத்து, எரிகாயம், நீரிழிவு (சலரோகம்), கிருமித் தொற்று, நாளப் புடைப்பினால் வரும் புண்கள் (வெரிக்கோஸ்), யானைக் கால் நோய்கள் எவற்றினால் வந்த பிரச்சினைகளையும் மறுசீரமைப்பு சத்திர சிகிச்சை மூலம் சீராக்க முடியும்.

நாள்பட்ட புண்களால் எமது மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். எந்தவொரு புண்ணும் என்ன காரணத்துக்காக வருகின்றது என்று ஆராய்ந்து அதற்கு சிகிச்சையளிக்காமல், வெறுமேனே புண்ணைச் சுரண்டிச் சுரண்டி மருந்து கட்டுவதால் எந்தப் பிரயோசனமும் வரப்போவதில்லை.

விபத்து அல்லது புற்றுநோயால் முகங்களில் ஏற்படும் விகாரங்களையும் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மூலம் சீர் செய்து வருகின்றோம்.

## அழகுபடுத்தல்

அழகுபடுத்தலுக்கான பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையும் முன்னெடுக்கப்படுகின்றது. அது பெரும்பாலும் தனியார் மருத்துவமனைகளில் தான் முன்னெடுக்கப்படுகின்றது.

கொரோனா முடக்கத்தால் பலருக்கு 'தொப்பை' வைத்து விட்டது. இதனைக் குறைப்பதற்கு, இல்லாமல் செய்வதற்கு பலர் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்துகொண்டுள்ளனர். கொரோனா காலத்தில் வெளியில் செல்ல முடியாது. பதற்றத்துடனேயே பொழுதுகள் கழிந்தன. மன அழுத்தம் அதிகரிக்கும். இதனால் அதிகளவு சாப்பிட்டார்கள். தொப்பை வைத்து விட்டது. அதற்கு உணவு பழக்கத்தை ஒழுங்குபடுத்துவதுதான் முதல்வழி. ஒரு நாளைக்கு 3 தடவைகள் அதிகளவு உணவை எடுப்பதைவிட, கொஞ்சகொஞ்ச உணவாக 5 தடவைகள் எடுப்பது சிறந்தது. தொப்பையான உடலமைப்பைக் கொண்டவர்கள், உடல் பருமன் கூடியவர்கள் சிகிச்சைக்காக வரும் போது அவர்க ளுக்குரிய சிகிச்சைகளை முன்னெடுக்கின்றோம். சத்திர சிகிச்சை இன்றி மருந்துகள் மூலமும், கொழுப்புகளை உறுஞ்சி எடுத்தல் மூலமும், உணவு பழக்க வழக்கத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் இதனை வெற்றிகரமாக செய்திருக்கின்றோம்.

## தலைமயிர் கொட்டுதலுக்கும் தீர்வுண்டு

திருமணம் தடைப்படும் பெண்கள் அதிகளவில் வருவார்கள். அவர்கள் சிகிச்சையின் பின்னர் தமது திருமண வாழ்வில் வெற்றிகரமாக இணைந்திருக்கின்றார்கள். உடல் பருமன் காரணமாக குழந்தைப்பேறின்மை யால் துன்பப்படுவர்களுக்கும் சிகிச்சையளித்திருக்கின் றோம்.

ஆண்களுக்கு இருக்கும் மற்றொரு பிரச்சினை, தலைமயிர் கொட்டுதல். அதற்கும் இங்கு தீர்வளிக்கும் சிகிச்சைகளை மேற்கொள்கின்றோம்.

மார்பகங்கள் மிகவும் பெரிதாக இருப்பவர்களுக்கு கழுத்து வலி, தோள்மூட்டு வலி, மூச்சு விடுவதில் சிரமங்கள் போன்றவை இருக்கும். அவர்களுக்கு பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை ஊடாக மார்பகங்களைச் சிறிதாக்குவதால், சாதாரண வாழ்க்கையை வாழக் கூடியதாக இருக்கும். இந்தச் சிகிச்சைகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலேயே முன்னெடுக்கின்றோம். எனவே இவ்வாறான தேவைப்பாடுடையவர்கள் தங்களிடம் பணம் இல்லை என்று, எண்ணி அத்தகைய குறைபாடுகளுடன் தினம் தினம் துன்பப்படாமல் எங்களிடம் வந்தால், போதனா மருத்துவமனையில் இலவசமாக அதனைச் செய்வோம்.

## வயது வரம்பில்லை

**கே: பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு வயது வரம்பு உண்டா?**

ப: இது குறிப்பிட்ட வயதுப் பிரிவினருக்கோ, குறிப்பிட்டதொரு பாலினத்தவருக்கோ மாத்திரம் செய்யப்படும் ஒன்றல்ல. அனைத்து வயதினரும், ஆண், பெண் இருபாலரும் இதனைச் செய்ய முடியும். உச்சி முதல் உள்ளங்கால் வரையில் எந்தப் பகுதியிலும் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்ய முடியும்.

மேற்குல நாடுகளில் அதாவது அபிவிருத்தியடைந்த நாடுகளில் வழங்கப்படும் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைக்கு நிகரான சத்திர சிகிச்சை இங்கு, அதாவது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வழங்கப்படுகின்றது.

இங்கிருப்பவர்கள் என்னுடைய இனம், சனத்தினர். அவர்கள் தங்களைத் தியாகம் செய்து எங்களுக்கு இலவசக் கல்வியை வழங்கியிருக்கின்றார்கள். 20 வருடங்களுக்கு முன்னர் இருந்த அதே தரத்தில் சிகிச்சையளிக்காமல், உலகில் வழங்கப்படும் தரமான மருத்துவ சிகிச்சையை வழங்குவதுதான் அப்படிப்பட்டவர்களுக்கு எங்களால் செய்யக் கூடிய கைமாறு.

## தீக்காயங்களே அதிகம்

**கே: வடக்கில் எவ்வாறான தாக்கத்துக்கு உட்பட்டவர்கள் அதிகளவில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக்கு வருகின்றார்கள்?**

ப: இலங்கையில் வடபகுதியிலேயே அதிகளவானோர் தீக்காயங்களுக்கு உள்ளாகுகின்றனர். தவறான முடிவெடுத்து உயிர் துறக்க முயற்சிப்பவர்கள் தீயை மூட்டி இவ்வாறான காயங்களுக்கு உள்ளாகின்றனர்.

தவறான முடிவெடுத்து உயிர்துறப்பவர்களின் எண்ணிக்கை இங்கு அதிகரித்துச் செல்கின்றது. தென்னிந்திய சினிமா, தென்னிந்திய நாடகங்களை இப்போது இங்கு அதிகளவானவர்கள் பார்க்கின்றனர். தவறான முடிவு எடுத்து உயிரிழத்தல் போன்ற விடயங்கள் அவற்றில் கூடுதலாக காண்பிக்கப்படுகின்றன. வன்முறைக் கலாசாரம் அவற்றின் மூலம் அங்கிருந்து ஊட்டப்படுகின்றன. ஆனால் நாங்கள் வன்முறைக் கலாசாரத்தில் வந்த மனிதர்கள் அல்ல. நாங்கள் தமிழர்கள். நாகரீகமான பண்பாட்டுக்குரிய குழுமத்தினர்.

ஒரு குடும்பத்தில் தாயும், தந்தையும் சிறிய மனஸ்தாபத்தில் சண்டை பிடிக்கின்றார்கள். உடனே தாய், மண்ணெண்ணை எடுத்து தான் தனக்குத் தானே தீயிட்டு சாகப் போவதாகக் கூறுகின்றார். கணவரும் கோபத்தில் அந்தக் கணத்தில் "நீ செத்து போ" என்று சொல்கின்றார். அத்றகுப் பின்னர்தான் கணவர் அதன் விபரீதத்தை உணருகின்றார். இளம் குடும்பத்தினர்தான் இவ்வாறு பொதுவாக நடந்து கொள்கின்றார்கள். அத்தகைய ஒருவரை 80 அல்லது 90 சதவீத உடல் பகுதி எரிந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு வந்தால் அவரைக் காப்பாற்ற முடியாது. அது இங்கு மட்டுமல்ல அமெரிக்காவிலும் முடியாது. பொதுமக்களும் இணைந்துதான் இவ்வாறான தவறான முடிவு எடுத்து உயிர்துறப்பதை தடுக்க முடியும். இத்தகைய விடயங்களைத் தடுப்பதற்

# ...தர ...ந்தை ...தே ...க்கு ...கைமாறு!

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் 'பிளாஸ்ரிக்' சத்திர சிகிச்சைப் பிரிவின் பொறுப்பு மருத்துவ அதிகாரி இளஞ்செழிய பல்லவன். முல்லைத்தீவு மாவட்டத்தில் பிறந்து. போர்க் காலத்தில் கல்வியைக் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு தெரிவானவர். இறுதிப் போரின் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றியவர். போரின் இறுதிக் கட்டம் வரையில், வெள்ளமுள்ளிவாய்க்காலில் சிகிச்சையளித்தவர். 2009ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி வரையில் அந்த மண்ணில் நின்று மக்களுக்கான மருத்துவ சேவையை வழங்கியவர். அதன் பின்னர் மேலதிக கல்வி நடவடிக்கைகளை வெளிநாடுகளில் மேற்கொண்டு மீண்டும் சொந்த மண்ணில் பணியாற்றுபவர். அண்மையில் துண்டாடப்பட்ட கை ஒன்றை வெற்றிகரமாகப் பொருத்தி. மருத்துவ உலகையே தன் பக்கம் திரும்பிப்பார்க்க வைத்தவர். அவர் 'உதயன் - சஞ்சீவி' வாசகர்களுக்காக வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.





லும், அங்கிருந்து தீக்காயங்களுக்கு உள்ளான பகுதியை படம் எடுத்து எங்களுக்கு அனுப்புவார்கள். அதனைப் பார்வையிட்டு உடனடியாகச் செய்யவேண்டியது என்ன என்ற அறிவுறுத்தலை வழங்குவோம். மேலதிக சிகிச்சையளிக்க வேண்டியிருப்பின் மாத்திரமே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வரவழைப்போம். இங்கு சிகிச்சையளித்து அவர்கள் மீண்டும் சமூகத்தில் வாழ்வதற்குரிய மறுவாழ்வையும் செய்து அனுப்புவோம்.

குரிய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். இது தனியே பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணராலேயோ, உளவளப் பிரிவினராலேயே, சமுதாய மருத்துவப் பிரவினராலேயோ செய்யக் கூடிய விடயமல்ல.

பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை இங்கு தொடங்கப்படுவதற்கு முன்னர் தீக்காயங்களுடன் வருபவர்களில் பெரும்பாலானவர்கள் உயிரிழந்திருந்தார்கள். தீக்காயங்களுடன் வருபவர்கள் சிகிச்சை பெறும் காலம் வரையில் பயன்படுத்துவதற்கான, பல லட்சம் ரூபா பெறுமதியான ஒரு வகையான போர்வையை இங்கு வைத்திருக்கிருக்கின்றோம். அதாவது தீக்காயங்களுக்கென அமெரிக்காவிலோ, லண்டனிலோ என்ன செய்கின்றார்களோ அதே வசதியை இன்று நாம் இங்கு ஏற்படுத்தியிருக்கின்றோம்.

ஆனாலும், தீக்காயங்களுக்கு தனியான மருத்துவ விடுதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இல்லை. அதற்குரிய சத்திர சிகிச்சைக் கூடம் தனியாக இல்லை. மருத்துவமனை நிர்வாகமும், சுகாதார அமைச்சும் அதனை இங்கு உருவாக்க முயற்சிகளை எடுத்து வருகின்றன.

## ஒரு காலுக்குப் பின்னால் ஒரு குடும்பமே இருக்கின்றது

வீதி விபத்துக்களில் ஒருவர் சிக்கி அவரது தசைகள் இல்லாமல் போய் எலும்புகளுடன் மாத்திரம் இருந்தால் அவரது உடல் உறுப்புக்கள் அகற்றப்படும் நிலையே இருந்து வந்தது. 'பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை' ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு உடல் உறுப்புக்கள் அகற்றப்படுவதில்லை. ஒரு காலுக்குப் பின்னால் மனிதனின் வாழ்க்கை இருக்கின்றது. அவரது குடும்பத்தின் வாழ்க்கை இருக்கின்றது. பிள்ளைகளின் வாழ்க்கை இருக்கின்றது. அவரது கால் இழக்கப்பட்டால் அந்தக் குடும்பத்தின் பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகும்.

எனவே எனது மருத்துவக் குழுவுக்கு நான் எப்போதும் சொல்வது, நாம் யாரை இன்று தொடுகின்றோமோ அவரது வாழ்க்கையும் அவரது குடும்பத்தின் வாழ்க்கையும் துலங்கவேண்டும் என்பதுதான். வடக்கு மாகாணத்தில் என்றைக்கு எவரும் அங்கவீனர்கள் இல்லாமல் தங்கள் வாழ்க்கையை சிறப்பாக வாழும் நிலை ஏற்படுகின்றதோ அன்றுதான் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணராக நான் சந்தோசமடைவேன். அது நீண்ட பயணம். அதில் நான் நிச்சயம் வெற்றிபெறுவேன்.

## தீக்காயங்களுக்கான முதலுதவி

தீக்காயம் ஏற்பட்ட ஒருவருக்கு செய்யும் முதலுதவி முக்கியமானது. அவருக்கு செய்யப்படும் முதலுதவி ஊடாக ஏற்பட்ட பாதிப்பை 50 சதவீதம் வரையில் குறைக்க முடியும். முதலுதவியை யாரும் செய்ய முடியும்.

தீச்சுவாலை, மின் ஒழுக்கு, 'அயன் பொக்ஸ்' உள்ளிட்ட பொருள்களால் ஏற்பட்ட தீக்காயங்கள், மின்னலாக இருக்கலாம் இவை எவற்றாலும் ஏற்படும் தீக்காயங்களுக்கும் முதலுதவி வழங்க முடியும். கொத்துக் குண்டுகளிலிருந்து வரும் வெள்ளை பொஸ்பரஸ் தவிர்ந்த ஏனையவற்றுக்கு இந்த முதலுதவியைச் செய்யமுடியும்.

முதலுதவி செய்வதில் முக்கியமானது, முதலுதவி செய்பவரது பாதுகாப்பு. அவர் தனக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடனேயே முதலுதவியைச் செய்யவேண்டும். அடுத்த மிக முக்கியமானது. தீக்காயம் பட்ட பகுதிகளின் மீது சுமார் 20 நிமிடங்களுக்கு தொடர்ச்சியாக அறைவெப்பநிலையில் உள்ள ஓடும் தண்ணீரை (குளிர்ந்த நீர் அல்லது ஐஸ் கட்டி என்பவற்றை வைத்தல் பொருத்தமற்றது) ஊற்றவேண்டும். இதுதான் செய்ய வேண்டிய முதலுதவி. இதைச் செய்வதன் ஊடாக 50 சதவீதமான அவரது காயங்கள் அந்த நிமிடத்திலேயே ஆறிவிடும். 20 நிமிடங்கள் தண்ணீரை ஊற்றிய பின்னர் எரிகாயங்களுக்கு உள்ளான இடத்தை சுத்தமான துணியினாலோ அல்லது பொலித்தீன் பையினாலோ சுற்றிக் கட்டிக்கொண்டு மருத்துவமனைக்குச் செல்லலாம். எரிந்தவுடன் அவரைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடுவதால் தீமைதான் கிடைக்கும். இந்த முதலுதவியை வழங்கிய பின்னர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்வது பொருத்தமானது. வடக்கிலுள்ள எந்த மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்றா

## தவறான முதலுதவிகள் ஆபத்தானவை

இங்கு முக்கியமாக ஒரு விடயத்தை நான் குறிப்பிடவேண்டும். ஊரிலுள்ள மூத்தவர்கள் தீக்காயங்கள் ஏற்பட்டால் அது தொடர்பில் தவறான முதலுதவியை வழங்கி தீக்காயத்தை மாற்ற முடியாதவாறு செய்து விடுகின்றார்கள். 'தீக்காயம் பட்டால் தண்ணிய ஊத்திப் போடாதையுங்கோ. கொப்பளிச்சுப்போடும்' என்று சொல்கின்றார்கள். அது முழுக்க முழுக்கத் தவறு.

ஓடும் தண்ணீரை ஊற்றுவதுதான் சரியான முதலுதவி. சில இடங்களில் தீக்காயங்கள் ஏற்பட்டவுடன் அந்த இடத்தில் முட்டையை ஊற்றுகின்றார்கள். பற்பசையைப் பூசுகின்றார்கள். அது எல்லாம் தவறு. எமது உடலில் தீக்காயம் ஏற்பட்டவுடன் அந்த இடம் வெப்பத்தால் சுடுகின்றது. அந்த வெப்பத்தை தணிக்கவேண்டுமானால்

> தொப்பையான உடலமைப்பை கொண்டவர்கள், உடல் பருமன் கூடியவர்கள் சிகிச்சைக்காக வரும் போது அவர்களுக்குரிய சிகிச்சைகளை முன்னெடுக்கின் றோம். சத்திர சிகிச்சை இன்றி மருந்துகள் மூலமும், கொழுப்புகளை உறுஞ்சி எடுத்தல் மூலமும், உணவு பழக்க வழக்கத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் இதனை வெற்றிகரமாக செய்திருக்கின்றோம்.

அதனை வெளியேற்ற வேண்டும். பற்பசையைப் பூசுவதால் தீக்காயம் ஏற்பட்ட இடத்திலிருந்து வெப்பம் வெளியேறாது. அது உடலில் இன்னும் ஆழமான பகுதிக்குச்சென்று பாதிப்பை கூட்டும்.

## வடக்கே தீக்காயங்களில் முதலிடம்

என்னிடம் சிகிச்சை பெறுவதற்கு பெண் ஒருவர் வந்தார். அவருக்கு இப்போது 33 வயது. ஒரு வயதாக இருக்கும்போது அவரது கன்னத்தில் அயன் பொக்ஸின் விளிம்பு பட்டு விட்டது.

(மறுபக்கம் பார்க்க)

> விரல்களில் இழையங்கள், தசைகள் குறைவு. எலும்பும் தோலும்தான் இருக்கின்றது. அவற்றுக்கு குருதி ஓட்டம் பெரிதாகத் தேவைப்படாது. இவை துண்டாடப்பட்டு மூன்று நாள்களின் பின்னரும் வெற்றிகரமாகப் பொருத்தியிருக்கின்றார்கள்.



அந்த இடத்தில் ஏற்பட்ட தீக்காயத்துக்கு அயலிலுள்ளவர்கள் பற்பசையைத் தடவுமாறு சொல்லியுள்ளார். அந்தப் பெண்ணின் தாயாரும் அப்படியே செய்துள்ளார். இதனால் அவருக்கு இப்போதும் காயம் காணப்படுகின்றது. அதற்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ள அவர் வந்துள்ளார். அயன்பொக்ஸ் சூடுபட்ட இடத்தில் ஓடும் தண்ணீரை 20 நிமிடங்கள் ஊற்றியிருந்தால் இன்று இந்த நிலைமை வந்திருக்காது. இலங்கையில் தீக்காயங்களால் பாதிக்கபடுபவர்களின் பட்டியலில் முதலில் வடக்கு மாகாணமே உள்ளது. எனவே தீக்காயங்களுக்கான முதலுதவி தொடர்பில் மக்கள் அறிந்து வைத்திருக்கவேண்டும்.

### சர்வதேசத் தரத்தில் யாழிலேயே சிகிச்சை

**கே: தீக்காயங்கள், போரினால் ஏற்பட்ட காயங்கள், நீண்ட நாள் புண்கள் என்பவற்றால் ஏற்பட்ட அனைத்துப் பாதிப்புகளுக்கும் சத்திரசிகிச்சை செய்யக் கூடிய வசதி இங்கு இருக்கின்றதா?**

**ப:** நான் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பொறுப்பேற்ற பின்னர் இரண்டு வருடங்களில், விபத்து உள்ளிட்ட எந்தக் காரணிகளாலும் சிகிச்சைக்காக வருபவர்களை மேலதிக சிகிச்சைக்கு கொழும்புக்கு அனுப்பவில்லை. இங்கு சிகிச்சையளிப்பதற்குரிய வசதிகள் உள்ளன. நிபுணத்துவம் உள்ளது.

கைகள் துண்டாடப்பட்டு வந்தால் அவர்களை இங்கிருந்து கொழும்புக்கு என்ன வேகமாகக் கொண்டு சென்றாலும் ஆகக் குறைந்தது 5 மணித்தியாலங்களாவது பிடிக்கும். ஆனால் வடக்கின் எந்தப் பகுதியிலிருந்தும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு 2 மணித்தியாலங்களுக்குள் வர முடியும். இங்கு உரிய சிகிச்சையளிக்கப்படும். பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையென்றால் கொழும்பு அல்லது வெளிநாட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற மனநிலையை எமது மக்கள் மாற்றவேண்டும். இங்கேயே பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையை செய்து கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை கிளினிக் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும், வியாழக்கிழமையும் பி.ப. 2 மணிக்கு இடம்பெறுகின்றது.

### தனியான சத்திரசிகிச்சைக் கூடம் தேவை

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இருந்த ஒரேயொரு சத்திரசிகிச்சைக் கூடத்தையே சகல சத்திர சிகிச்சை நிபுணர்களும் பயன்படுத்த வேண்டியிருந்தது. இதனால் ஒவ்வொரு சத்திரசிகிச்சைக்கும் காத்திருப்போர் பட்டியல் நீண்டு கொண்டு சென்றது. இது தொடர்பில் நான் சுகாதார அமைச்சரை சந்தித்துப் பேசினேன். வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் சென்று மாவட்ட மருத்துவமனைகளில் கிளினிக் நடத்தி, அங்குள்ள சத்திரசிகிச்சைக் கூடங்களைப் பயன்படுத்தக் கோரிக்கை விடுத்தேன்.

இதற்கு சுகாதார அமைச்சர் சம்மதம் தெரிவித்தார். ஒவ்வொரு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் ஊடாக இதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டன. இப்போதைக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவட்ட மருத்துவமனையில் ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது வியாழக்கிழமைகளில் அங்கு சென்று கிளினிக்குகள் நடத்தி வருகின்றேன். ஏனைய மாவட்டங்களிலிருந்து இன்னமும் அழைப்பு வரவில்லை.இருப்பினும் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக்கு தனியான சத்திர சிகிச்சைக் கூடம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உருவாக்கப்பட வேண்டும்.

**கே: போர்ப் பாதிப்புக்கு உள்ளானவர்கள் எத்தனை பேர் வரையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையை இதுவரை மேற்கொண்டிருப்பார்கள்?**

**ப:** அதனைத் தனியான புள்ளி விவரமாக நாம் சேகரிக்கவில்லை. கடந்த 2 ஆண்டுகளில் வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று பேர் போர்ப் பாதிப்பிலிருந்து மீள்வதற்குரிய 'பிளாஸ்ரிக்' சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

### சாதனைச் சத்திரசிகிச்சை

**கே: முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் கை துண்டாடப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவருக்கு கை வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளது. இந்தச் சாதனையான சத்திரசிகிச்சை தொடர்பில் உங்களின் அனுபவம் என்ன?**

**ப:** ஒரு சத்திரசிகிச்சையின் வெற்றி என்பது பல்வேறு நிபுணத்துவக் குழுக்களின் ஒருங்கிணைவின் ஊடாகத்தான் சாத்தியம். வீதிப் போக்குவரத்து வசதிகள், தொடர்பாடல், அடித்தள வசதிகள் எல்லாம் இருந்தமையால் இந்தச் சத்திரசிகிச்சையை வெற்றிகரமாகச் செய்ய முடிந்தது. ஆனால் இவ்வாறான்தொரு சத்திரசிகிச்சையை செய்வதற்குரிய செலவு என்பது அதிகம். கை பொருத்திய சத்திரசிகிச்சையை தனியார் மருத்துவமனையில் செய்திருந்தால் சுமார் 50 லட்சம் ரூபாவுக்கு மேல் செலவாகியிருக்கும். 12 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக சத்திர சிகிச்சைக் கூடம் தேவை. அவ்வாறான நிலையில் சத்திரசிகிச்சையைக் கூடத்தைப் பயன்படுத்துவதற்கான செலவு, பல்வேறுபட்ட மருத்துவ நிபுணர்களுக்கான செலவு, மருந்துகள், உபயோகிக்கும் உபகரணங்கள் என்பனவற்றுக்கான செலவு என்று இந்தச் செலவுகள் லட்சங்களைத் தாண்டும். இதன் பின்னர் அவரது தொடர் சிகிச்சைகள், கிளினிக் என்று பார்த்தால் ஒரு கோடி ரூபாவை நெருங்கும்.

இந்தக் கையைப் பொருத்தும் சத்திர சிகிச்சையை முன்னெடுத்தன் காரணமாக, பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்யவேண்டிய 5 பேரின் சத்திர சிகிச்சையை ஒத்திவைக்கவேண்டி வந்தது.

எனவே இவ்வாறான வாள்வெட்டுக்கள் விபத்துக்களைத் தவிர்த்துக் கொண்டால் நல்லது.

சிறிய கோபத்தால் வரும் பிரச்சினை. உங்களுக்கு கோபம் வரும்போது அருகிலுள்ள மரத்திலேயோ அல்லது நிலத்திலேயோ வெட்டுங்கள். உங்கள் கோபம் தீரும் வரை அதைச் செய்யுங்கள். தயவு செய்து மனிதர்களை வெட்டாதீர்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பின்னால் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களின் எதிர்காலம் இருக்கின்றது.

அதேபோன்று மோட்டார் சைக்கிள்களில் வேகமாக ஓடுவது பெருமை என்று நினைக்காதீர்கள். படித்து முன்னுக்கு வந்து சிறப்பான தொழில் செய்வதுதான் பெருமை. தமிழ் படங்களை பார்த்து இவ்வாறு நடந்து கொள்வதால் நாங்கள் ஒருபோதும் முன்னேற முடியாது. எங்களது வீதிகளில் 200 சிசி மோட்டார் சைக்கிள்கள் ஓடுவது பொருத்தமில்லை. பொருத்தமில்லாத மோட்டார் சைக்கிள்களை 4 அல்லது 5 லட்சம் ரூபா செலவு செய்து வாங்கி, அதற்கு குத்தகைப் பணம் கட்ட முடியாமல் களவெடுத்து, வாள் வெட்டில் இறங்கி எல்லாவற்றையும் வீணடிக்காமல் புத்திசாலி இளைஞர்களாக செயற்படவேண்டும்.

**கே: முல்லைத்தீவைச் சேர்ந்தவருக்குக் கையைப் பொருத்தும் சத்திரசிகிச்சை எவ்வளவு நேரம் மேற்கொள்ளப்பட்டது?**

**ப:** காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணி வரை அதாவது 12 மணி நேரம் எடுத்தது.

**கே: கை துண்டாடப்பட்டு எவ்வளவு நேரத்தில் மருத்துவமனையை அவர் நாடினார்?**

**ப:** இரவு 10 மணியளவில் அவரது கை துண்டாடப்பட்டது. முதலில் அவர் தர்மபுரம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். கிளிநொச்சி மருத்துவமனை சத்திரசிகிச்சை நிபுணர் என்னுடன் தொடர்புகொண்டார். பின்னர் அங்கிருந்து இங்கு கொண்டு வந்து, அவருக்கான சத்திர சிகிச்சைக்குரிய ஒழுங்குகளை ஆரம்பிப்பதற்கு மறுநாள் காலை 8 மணியாகியது.

**கே: அவரது கை முற்றாகத் துண்டாடப்பட்டிருந்ததா?**

**ப:** இடது கை முற்றாகத் துண்டாடப்பட்டிருந்தது. வலது கை பாதியளவில் துண்டாடப்பட்டிருந்தது. இரண்டு கைகளையும் நாங்கள்வெற்றிகரமாகப் பொருத்தியுள்ளோம்.

### வெட்டுக்காயங்கள் வந்தால் செய்ய வேண்டியவை

**கே: வெட்டுக் காயங்களால் உடல் அவயவங்கள் துண்டாடப்பட்டால் எவ்வளவு நேரத்துக்குள் மருத்துவமனைக்கு கொண்டு வரவேண்டும்?**

**ப:** உடலின் அவயங்களைப் பொறுத்து இது வேறுபடும். விரல்களில் இழையங்கள், தசைகள் குறைவு. எலும்பும் தோலும்தான் இருக்கின்றது. அவற்றுக்கு குருதி ஓட்டம் பெரிதாகத் தேவைப்படாது. இவை துண்டாடப்பட்டு மூன்று



நாள்களின் பின்னரும் வெற்றிகரமாகப் பொருத்தியிருக்கின்றார்கள். தசைகள் கூடக்கூட அவை ஒவ் வொன்றுக்கும் குருதி ஓட்டம் அதிகம் தேவைப்படும். குருதி ஓட்டம் அதிகம் தேவைப்படுபவற்றை எவ்வளவு விரைவாகப் பொருத்த முடியுமோ அவ்வளவு விரைவாகப் பொருத்தவேண்டும். குருதி ஓட்டம் இல்லாது சதைகள் உயிரிழந்துவிட்டால் இவற்றைப் பொருத்த முடியாது. துண்டாப்பட்ட அவயவங்களை இரண்டு தொடக்கம் மூன்று மணித்தியாலங்களுக்குள் குருதி ஓட்டத்தைப் பொருத்தத் தொடங்கினால்தான் பொருத்தமாக இருக்கும். எல்லாவற்றையும் செய்து முடிக்க 12 மணித்தியாலங்கள் வரையில் எடுக்கும். எவ்வளவு விரைவாகச் செய்கின்றோம் அவ்வளவு நல்லம். எவ்வாறிருப்பினும் துண்டிக்கப்பட்ட அவயங்களை உரிய முறையில் பாதுகாத்துக் கொண்டு வருதல்வேண்டும். அவற்றைத் தண்ணீரில் போடாமல், சேலைனுக்குள் போடாமல், சுத்தமான பொலித்தீன் பையினுள் துண்டாடப்பட்ட அவயவத்தை வைத்து அதற்குள் தண்ணீர் புகாதவாறு கட்டவேண்டும்.

அவ்வாறு சுற்றப்பட்ட பொலித்தீன் பையை, ஐஸ்கட்டி நிறைந்த ரெஜிபோம் பெட்டிக்குள் வைத்து கொண்டுவரவேண்டும். அவயவம் துண்டா டப்பட்டவுடனேயே எங்களைத் தொடர்புகொள்ள வேண்டும். ஏனெனில் சத்திர சிகிச்சைக்குரிய ஆயத்தங்களை நாங்கள் செய்யவேண்டும். ஏனைய மருத்துவ நிபுணர்களையும் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.


ஈழநாடு
வாரமலர்

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை 8

## 1990 - 1995


ஈழநாடு
நமது நோக்கம்
நாட்டிலே கலவரங்கள் மீண்டும் ஏற்படமாட்டா?
முதலமைச்சர் உறுதிமொழி

◯ தில்லைநாதன் கோபிநாத்

"சிக்கல்கள் மிகுந்துள்ள இன்றைய நிலையில் எத்திக்கை நோக்கிச் செல்ல வேண்டுமெனத் தெரியாது தமிழ் மக்கள் திகைத்து நிற்கின்றனர்"

"ஒற்றையாட்சி நிலவும் இந்நாட்டில் மனித உரிமைகளைப் பெறுவது சாத்தியமானதா? அடிப்படை உரிமைகள் அனைத்தும் நன்கு பாதுகாக்கப்படுமா? அன்றேல் சமஷ்டிதான் இலங்கைக்கு உகந்ததா? மாகாண சுயாட்சி முறை எமது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றத் தக்கதா?"

"சாதிமத பாகுபாடுகளால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நீக்கித் தமிழ் மக்களை ஒருமுகப்படுத்தி அவர்களை ஆக்கபூர்வமான முயற்சிகளில் வழிப்படுத்துவதற்கு..."

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கள் புதிதாக இப்போது தொடங்கும் பத்திரிகை அல்லது சஞ்சிகை ஒன்றின் ஆசிரியத் தலையங்கத்தில் இடம்பெறக்கூடியவை. ஆனால் இவை இடம்பெற்றது 1959ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ஆம் திகதிய ஈழநாடு வார மலரில். ஈழநாட்டின் முதலாவது இதழின் முதலாவது பக்கத்தில் நமது நோக்கம் என்ற தலைப்பில் ஈழநாடு நிர்வாகிகள் சார்பில் கூ. சி. தங்கராஜா எழுதிய விரிவான குறிப்பில் இவை இடம்பெற்றுள்ளன.

அதே முதலாவது இதழின் முதற்பக்கத்தில் "நாட்டில் கலவரங்கள் நடைபெற மாட்டா? முதலமைச்சர் உறுதிமொழி" என்ற தலைப்பிலான குறிப்பும் இடம்பெறுகிறது. 1958 ஆம் ஆண்டு கலவரங்கள் போன்ற சம்மபவங்கள் மீண்டும் ஏற்பட அனுமதிக்கப்படாது என்பதான உறுதிமொழியைப் பிரதமர் பண்டாரநாயக்க வழங்கியிருந்தமை தொடர்பான கருத்துக்களை அக்குறிப்புக் கொண்டிருக்கிறது.

ஈழநாடு தொடங்கப்பட்டு 70 ஆண்டுகள் தாண்டியும் இப்போதும் அதே நிலைமையிலேயே தமிழ் மக்களின் நிலை உள்ளது. எத்தனையோ கலவரங்கள் நடந்து இனப்பிரச்சினை போராகியுமிருக்கிறது. நடந்த கலவரங்கள், வன்முறைகளில் ஈழநாடு பத்திரிகையும் பேரிழப்புக்களைச் சந்தித்திருக்கிறது.

1930ஆம் ஆண்டு முதல் வார இதழாக வெளியான ஈழகேசரி 1958ஆம் ஆண்டில் தடைப்பட அந்த இடைவெளியை நிரப்புவதாக உருவான பத்திரிகையே ஈழநாடு. 1958ஆம் ஆண்டில் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலுக்கு மேற்குப் புறமாக கலாநிலை யம் எனும் பதிப்பகம் ஆரம்பிக்கப்பட்டது. அப்பதிப்பகத்தை நடாத்தியோர் சகோதரர்களான கே. சி. தங்கராஜா மற்றும் கே. சி. சண்முகரத்தினம் ஆகியோராவர். கலாநிலைய பதிப்பகத்தின் சார்பாக 1959இல் ஈழநாடு வெளியாகத் தொடங்கியபோது ஈழகேசரியின் ஆசிரியராக இருந்த இராஜ அரியரத்தினமே ஈழநாட்டின் ஆசிரியராகப் பொறுப்பேற்றிருந்தார்.

வார இதழாகத் தொடங்கப்பட்ட ஈழநாடு, 1960ஆம் ஆண்டில் வாரம் இருமுறை இதழாகி 1961ஆம் ஆண்டில் நாளிதழானது. 1916ஆம் ஆண்டிலேயே பாலபாஸ்கரன் என்ற நாளிதழ் யாழ்ப்பாணத்தில் வெளியாகியிருந்த போதிலும், அது சில மாதங்களில் நின்று விட்டது. 1984இல் ஈழமுரசு நாளிதழ் வெளியாகத் தொடங்கும்வரை யாழ்ப்பாணத்தின் ஒரே நாளிதழாக விளங்கியது ஈழநாடே. அத்துடன் 1995 ஆம் ஆண்டு வரை சுமார் 35 ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளியாகிச் சாதனை படைத்தது. ஈழநாடு தொடங்கப்பட்ட காலத்தில் யோகர் சுவாமிகள் "ஏசுவார்கள், எரிப்பார்கள்" என்று சொன்னதாகப் பதிவுகள் உள்ளன. 1981ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஈழநாடு பத்திரிகை அலுவலகமும் எரிக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 29 ஆம் திகதியன்று ஈழநாடு அலுவலகம் குண்டு வெடிப்புக்கு இலக்கானது. மேற்படி நிகழ்வுகளில் முதலாவதை இலங்கை அரச படைகளும், இரண்டாவதை விடுதலைப் புலிகளும் செய்ததாகக் கூறப்படுகிறது. அவ்வகையில் எல்லாத் தரப்பினராலும் தாக்கப்பட்ட பத்திரிகை ஈழநாடு எனலாம்.

1980ஆம் ஆண்டுகளில் ஈழநாடு அக்காலத்தின் ஏனைய பத்திரிகைகளைப் போலவே மிகுந்த நெருக்கடிகளைச் சந்தித்தது. இலங்கை அரச படைகள், விடுதலைப் புலிகள், இந்திய இராணுவம், துணை இராணுவக் குழுக்கள் என ஆயுதந் தாங்கிய எல்லாத் தரப்புக்களின் அழுத்தங்களுக்கும் ஈழநாடு முகம் கொடுக்க நேர்ந்தது.

1990ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்ததைத் தொடர்ந்து ஈழநாடும் அவர்களது செல்வாக்குக்கு உட்பட்ட பத்திரிகையானது. புலிகள் யாழ்ப்பாணப் பத்திரிகை ஆசிரியர்களையும் ஊழியர்களையும் அழைத்துக் கூட்டங்களை நடத்தினர். அவ்வகையில் பத்திரிகைகள் புலி


தேர்தல் நியமனப் பத்திரம்
ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY
சிலதமிழ்க்

களது கருத்துக்களையும் பிரதிபலிப்பவை ஆகின. ஈழநாட்டைப் பொறுத்தவரை அக்காலத்தில் சம்பள உயர்வு தொடர்பில் ஊழியர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்பட்டன. ஊழியர்கள் உண்ணாவிரதம் இருந்தனர். புலிகளின் உதவியை நாடினர். அவ்வகையில் புலிகளின் நேரடியான தலையீடு உருவானது. 1995ஆம் ஆண்டு அளவில் முழுமையாகவே புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் ஈழநாடு சென்றிருந்தது.

1990ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் வலிகாமம் இடப்பெயர்வு வரையான காலத்தில் ஈழநாடு தொடர்ச்சியாக நாளிதழாக வெளியானது. 1990ஆம் ஆண்டில் எட்டுப் பக்கங்களுடன் வெளியான போதும், பின்னர் பெரும்பாலும் நான்கு பக்கங்களே வெளியாகின. இதற்கு அக்காலத்தின் காகிதத் தட்டுப்பாடும் காரணமாக இருந்தது. ஏ3 அளவில் வெளியான ஈழநாடு, காகிதத் தடைக் காலத்தில் கோடிட்ட தாள்களிலும் அச்சானது. பின்னர் தேவைக்கேற்ப பக்க எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை உள்நாட்டுச் செய்திகளே அதிக இடத்தைப் பிடித்துக் கொண்டன. அக்காலத்தின் போர்ச் செய்திகள் முதற்பக்கத்தில் அடிக்கடி இடம்பெற்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பான செய்திகளும் பெருமளவில் ஈழநாட்டில் இடம்பெற்றன. பலவிதமான நிகழ்வுகள், விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவை தொடர்பான செய்திகள் அத்தகையவை. அவ்வப்போது சில கட்டுரைகளும் நாளிதழில் வெளியாகின. அவ்வகையில் அக்காலச் சமூகம், பண்பாடு தொடர்பான முக்கிய ஆவணமாக ஈழநாடு அமைகிறது.

வெளிநாட்டுச் செய்திகள், விளையாட்டுச் செய்திகளும் ஓரளவு இடம்பெற்றன. இரண்டாம் பக்கத்தில் வரிவிளம்பரம் எனும் தலைப்பில் சிறு விளம்பரங்கள் வெளியாகின. பொருள்கள், சேவைகள், வைத்தியம், நூல் விபரங்கள், திருமண விளம்பரங்கள் எனப் பலதரப்பட்டவையும் சிறு விளம்பரப்பகுதியில் இடம்பெற்றன. இதுதவிர சிறிய எண்ணிக்கையில் ஏனைய விளம்பரங்களும் வெளியாகின. அத்துடன் இராசிபலன் பகுதியும், தினமும் இடம்பெற்றது. புலிகளின் குரல், தமிழீழ வானொலி ஆகியவற்றின் நிகழ்ச்சி நிரல் போன்றவையும் வெளியாகின.

ஈழநாடு வார மலர் பலவிதமான கட்டுரைகளையும் சிறுகதைகள், தொடர்கதைகள், கவிதைகள் போன்றவற்றையும் தொடர்ச்சியாக வெளியிட்டு ஈழத்தின் அறிவு, பண்பாட்டு அசைவியக்கத்துக்கும் இலக்கியச் செயற்பாடுகளுக்கும் முக்கிய களம் அமைத்துக் கொடுத்த பத்திரிகை ஆகும். ஆயினும் 1990-1994 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அக்கால நிலைமைகளால் ஈழநாடு வார மலர் வெளியாகவில்லை. வார மலரை மீண்டும் வெளியிடும் முயற்சிகள் 1995இல் மீண்டும் தொடங்கப்பட்டது. 1995ஆம் ஆண்டு மே 21ஞாயிற்றுக்கிழமை வார இதழ் வெளியாகத் தொடங்கியது. வார இதழில் அரசியல் பத்தி எழுத்துக்கள், சிறுகதைகள், உலக வலம், கவிதைகள், அறிவியற் கட்டுரைகள், மருத்துவக் கட்டுரைகள், சிறுவர் மஞ்சரி, பெண்கள் உலகம், நேர்காணல்கள் எனப் பலவிதமான பகுதிகள் இடம்பெற்றன.

வார மலர் வெளியீட்டை நீண்ட காலம் தொடர முடியவில்லை. 1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் இறுதியில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான அரச படைகளின் தாக்குதல்கள் தொடங்கியதைத் தொடர்ந்து வலிகாமப் பகுதி முழுவதும் வமராட்சிக்கும் தென்மராட்சிக்கும், வன்னிக்கும் இடம்பெயர்ந்த போது ஈழநாடும் இடம்பெயர்ந்தது. கெருடாவிலில் ஒரு பாடசாலைக் கட்டடத்தில் அச்சகத்தையும் ஆசிரிய பணிமனையையும் நிறுவித் தற்காலிகமாக இயங்கத் தொடங்கியது. மீண்டும் படைகளின் தாக்குதல் தொடங்க வன்னிக்கு ஈழநாடு இடம்பெயர்ந்தது. கிளாலிக் கடலைக் கடக்கும் போது முக்கிய அச்சியந்திரத்தை இழந்தது. வன்னியில் சிலகாலம் தினசரியாகவும், பின்னர் வார இதழாகவும் சிறிதுகாலம் வெளியானது.

ஈழநாட்டின் தொடர்ச்சி என முன்வைக்கப்பட்டு நமது ஈழநாடு 2002 ஒக்ரோபரில் யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்டது. இது 2006இல் தடைப்பட்டது. புலம்பெயர் தேசங்களிலும் ஈழநாடு என்ற பெயரில் பத்திரிகைகள் வெளியாகியுள்ளன. 2020இல் பழைய ஈழநாட்டின் தொடர்ச்சி என முன்வைக்கப்பட்டு மீண்டும் ஈழநாடு வார இதழாகவும், மின்னிதழாகவும், நாளிதழாகவும் வெளியிடப்படுகிறது. இந்த வெளியீடுகள் அனைத்தும் முன்னைய ஈழநாட்டின் தொடர்ச்சிகளாகக் கருதப்படலாம். ஆயினும் 1959 முதல் வெளியான ஈழநாட்டின் தொடர்ச்சியான வெளியீடு 1995 ஒக்ரோபருடன் முடிவுக்கு வந்தது என்றும் கருதலாம்.

# தாடிக்கார கழுகு...





○ ஏ.ஜே.ஞானேந்திரன்

இறைவனது படைப்புகள் எம்மை என்றுமே மலைப்பூட்ட வைக்கின்றன. நம்மைச் சுற்றிய இடங்களிலெல்லாம் பெருவியப்பைத் தரும் விலங்குகள், பறவைகள், தாவரங்கள் என்று நிறைந்து போய்க் கிடக்கின்றன. இங்கே நான் சொல்லப்போவது' Bearded Vulture 'எனப்படும் தாடிக்கார பிணம் தின்னிக் கழுகு பற்றியேதான்! தாடியுள்ள இந்தக் கழுகின் உணவில் 70 வீதம் தொடக்கம் 90 வீதமான அளவு இருப்பது மிருகங்களின் எலும்புகள் என்பது எவரையும் அதிசயப்பட வைக்கும் உண்மை. ஆபிரிக்க, ஆசிய, ஐரோப்பிய மலை முகடுகளுக்கு மேலாகப் பறந்து திரிவதுதான் இந்த இனக் கழுகின் வேலை. ஏனைய காட்டு வாழ் விலங்குகளால் கொல்லப்பட்ட மிருகத்தின் முழு மாமிசத்தையும் அவை தின்று தீர்க்கும்வரை காத்திருக்கும் இந்தக் கழுகுகள், இறுதியில் மிஞ்சும் எலும்புகளை சுவைத்து உண்கின்றன. இறந்த மிருகத்தின் உடல், காட்டு வெயிலில் கிடந்து நோய்களைப் பரப்பாமல், காட்டைச் சுத்தப்படுத்தும் சுற்றுப்புறச் சூழல் பணியில் இவற்றின் பங்களிப்பும் முக்கியம்.

**எலும்பு விழுங்கி**

சிறிய எலும்புகளை அப்படியே முழுதாக விழுங்கி விடுகின்றன. பெரியவற்றை இவை சாப்பிடும் முறை விநோதமானது.... எலும்பை வாயில் கவ்விக் கொண்டு, மிக உயரப் பறந்து, அலகிலுள்ள எலும்பை தரையை நோக்கிப் போடுகின்றன. உயரத்திலிருந்து விழும் வேகத்தில் எலும்பு நொருங்கிச் சிதற, தூளாகிய எலும்பையும், அதனுள் இருக்கும் மஜ்ஜையையும்(marrow) இவை கொத்தி விழுங்குகின்றன. தனது உணவில் ஏறத்தாழ 95 வீதமான எலும்பைக் கொண்டிருக்கும் ஒரேயொரு பறவை இனம் இந்தத் தாடிக்கார கழுகுதான்.

**ஆரூடம் பலித்தது**

இங்கே ஒரு இதிகாசக் கதையைச் சொன்னால் சுவாரஸியமாக இருக்கும் முன்னொரு காலத்தில் வாழ்ந்த கிரேக்க நாடகாசிரியர் ஒருவருக்கு ஒரு தடவை ஆருடம் கூறியவர்கள், இவருக்கு மரணம் வானத்திலிருந்து விழும் ஒரு வஸ்துவால்தான் சம்பவிக்கும் என்று கூறியிருந்தார்களாம். மரண பயத்தில், அவர் தன் வாழ்வின் பெரும்பகுதியை , திறந்த வெளிகளிலேயே கழித்து வந்தாராம். ஒரு தடவை ஓர் ஆமையை வேட்டையாடிய ஒரு தாடிக்கார கழுகு, அதைக் கவ்விக் கொண்டு, உயரப் பறந்து போயிருக்கின்றது. ஒரு பாறாங்கல்லின் மீது ஆமையைப் போட்டு உடைக்க எண்ணி, அதன் கண்கள் கல்லைத் தேடியிருக்கின்றன. அப்பொழுது வழுக்கைத் தலை மேலே தெரிய, நாடகாசிரியர் உட்கார்ந்திருந்ததைக் கண்டிருக்கின்றது. குறிபார்த்து ஆமையைப் போட, ஆமையோடு சேர்ந்து, உட்கார்ந்தி ருந்தவர் தலையும் நொருங்கியதாம். ஆருடமும் பொய்க்காமல் நாடகாசிரியர், பரலோகம் போய்ச் சேர, ஆமையின் ஓடு நொருங்கி, கழுகுக்கு உணவாயிற்று என்பதுதான் அந்த இதிகாசக் கதை.

**வைச்ச குறி தப்பாது**

ஒரு செம்மறி ஆட்டின் அளவுள்ள மிருகத்தின் உடல் எலும்புகளை, இதனால் சர்வசாதாரணமாக விழுங்க முடியும் என்கிறார்கள்.

கால் நகங்களால் பற்றிப் பிடித்து, அலகால் கொத்தி உடைக்குமளவுக்கு , அலகோ, கால்நகங்களோ பலமானவையாக இல்லை. இதனால்தான் தன் கூரிய கண்களால் தரையிலுள்ள ஒரு பெரிய கல்லைக் குறி வைத்து, எலும்பைப் போடுவதுண்டு. குறிதவறினால் விட்டுவிடுவதில்லை. எலும்பு நொருங்கும் வரை தன் முயற்சியைத் தொடரும் விடாக்கண்டன் கொடாக்கண்டன் இந்தப் பறவை! அட இப்படி எலும்புகளை விழுங்குகிறதே..இதற்கு அஜீரணம், வயிற்றுக் கோளாறு எல்லாம் வராதா என்று நீங்கள் முணுமுணுப்பது என் காதில் கேட்கிறது.

நியாயமான சந்தேகந்தான். இதனுடைய சமிபாட்டு உறுப்பில் மிகவும் சக்தி வாய்ந்த அமிலம் சுரந்து கொண்டு இருக்கின்றதாம். 24 மணி நேரத்தில் எந்த எலும்பையும் மலக் கழிவாக்கி விடும் சக்தி இதற்கிருக்கின்றதாம்.!



**குஞ்சுகளுக்கு கொழுப்பு**

இந்தக் கழுகுகளின் குஞ்சுகளுக்கும் எலும்புகள்தான் சாப்பாடா? இல்லை..... மாமிசத்தை அல்லது எலும்புகளில் ஒட்டியிருக்கும் கொழுப்பைக் கொடுத்தே குஞ்சுகளை இவை வளர்க்கின்றன.

மாமிசம் இருக்க எதற்கு எலும்புகளையே சாப்பிடும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்றன.? அதற்கும் பதில் இருக்கின்றது.

எல்லா மிருகங்களுமே மாமிசத்தையே தேட, மிஞ்சும் எலும்புகள் அனாதைகளாகத் தேங்கி விடு கின்றன. நினைத்த நேரம், நினைத்த இடத்தில் எலும்புகளைத் தேட முடிவதால், எப்பொழுதுமே உணவு இந்தப் பறவைகளுக்கு தயார் நிலையில் இருக்கின்றது........

இதைவிட ஆச்சரியம் என்னவென்றால், சமயா சமயங்களில், செம்மண்ணின் உதவி கொண்டு, தமது சிறகுகளுக்கு சாயமூட்டி, ஏனைய பறவைகளின் முன்னால் தாம் ஒரு ராஜாவாக்கும் என்ற செய்தியை இவை பரப்ப முயல்வதுதான்....!

## மணிக்கதைகள்

○ மௌனா



# தேடல்

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தங்கள் கோரிக்கையை முன்வைத்து அரசுக்கு எதிராக கோஷமிட்டு போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அண்மையில் ஒரு மரத்தின் கீழே சுருண்டு படுத்திருந்த பெண் நாயொன்று இடைக்கிடை ஊளையிட்டுக் கொண்டிருந்தது. அப்போது அப்பக்கம் வந்த இன்னொரு நாய் அவர்களிடம் கேட்டது,**

**"அவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காக கத்திக் குளறிப் போராடுகிறார்கள்... நீயேன் அதற்கு ஊளையிடுகிறாய்....?"**

**சற்று நேர அமைதி. பின் அது சொன்னது.**

**"என்னுடைய ஐந்து அருமையான குட்டிகளும்தான் அவர்கள் வீசிய குண்டால் காணாமல் போய்விட்டன" தொடர்ந்து அதனிடமிருந்து வெளிப்பட்டது ஒரு நெடுமூச்சு மட்டுமே!**



சஞ்சீவி

மாணவர் கழகம்

1. முழுப்பெயர்: ..............................
2. முகவரி: ..............................
..............................
3. பிறந்த திகதி: ..............................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..............................
5. கற்கும் தரம்: ..............................
6. தொலைபேசி இலக்கம்: ..............................

.................... மாணவர் ஒப்பம்

.................... பெற்றோர் ஒப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி:

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

sanjeevi@uthayan.com

0773165555

# வித்துவான் பதில்கள்!




**வித்தய்யா! இன்றைய காலகட்டத்தில் தற்கொலைகள் அதிகரிக்கக் காரணம் என்ன?**

*சாத்வீகா, குப்பிளான்*

அறிவை விட 'உணர்ச்சி மேலோங்கி' இருப்பதுதான் காரணம். உணர்ச்சியின் வேகத்திலேயே முடிவுகளை எடுக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் தற்கொலைதான் தீர்வு என்று நினைக்கிறார்கள். தற்கொலையில் தோற்றால் இங்கே பிரச்சினை. வென்றால் அங்கே எமலோகத்தில் பிரச்சினை. சொர்க்கமா? நரகமா? திருப்பி அனுப்புவதா? என்பதுதான் அந்தப் பிரச்சினை.

**என்ன வித்தூ, கொரோனா இரண்டாம் அலை இலங்கையை மீண்டும் முடக்குவது நல்லதா? கெட்டதா?**

*மோகன், தும்பளை*



அப்படியானால் இன்னும் பத்து மாதங்களில் இலங்கையில் பிரசவ எண்ணிக்கை மீண்டுமொருமுறை இரட்டிப்பாகப் போகின்றதா? அடை காப்பது நல்லது தானே.இன்னொரு வகையில் பார்த்தால், தென்னை மரத்தில் தேள் கொட்ட பனை மரத்துக்கும் வைத்தியம் பார்க்க முடியுமா? ஓரிரு இடத்தில் பரவிய தற்காக முழு நாட்டையுமா முடக்க வேண்டும்?

**அன்பின் வித்தா, நானே பெரியவன்/ள் என ஆணவத்தில் திரிவோருக்கு நீங்கள் கூறும் ஆலோசனை?**

*சர்மிளா, கரைதுறைப்பற்று*

எண்ணுங்கள். யாருக்கும் சொல்லி விடாதீர்கள். கவனம். (நான் ஒன்றும் சொல்லவில்லைத்தானே?)



**வித்தூ.... முகக்கவசம் அணிவதால் கொரோனாவைத் தடுக்க முடியுமா?**

*ஆர்.எட்வின், மன்னார்.*

பொதுவாகக் 'கவசங்கள்' பாதுகாப்பானவைதான். எனவே தரமான கவசங்களைப் பயன்படுத்தினால் பாதுகாப்புக் கிடைக்கலாம்.



**டியர் வித்ஸ்! ஆலயங்களில் சிதறு தேங்காய் உடைப்பது ஏன்?**

*அகர்ஷா, சங்கத்தானை.*

பாதியாக உடைத்தால் கடவுளுக்குக் கிடைக்காதே. ஒரு பாதியை பூசைக்காரரும் மறுபாதியை அந்தணப் பெரியாரும் எடுத்துப் போய்விடுவார்களே, அதனால் தான் புத்திசாலித் தமிழர்கள் இப்படி ஒரு வழியைக் கண்டுபிடித்தார்கள் போலும்.

நீங்களும் கேள்விகள் கேட்கலாம்...

எழுதி அனுப்புங்கள்

**வித்துவான் பதில்கள்**
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555 sanjeevi@uthayan.com

## உதடுகளின் மேற்புறம் வளரும் முடிகளை அகற்ற....



சில பெண்களுக்கு காது ஓரங்களிலும், கன்னத்திலும், தாடையின் கீழும், உதட்டுக்கு மேலும் மீசை போன்று அதிகப்படியான உரோமங்கள் இருப்பதைக் காணலாம். உதட்டுக்கு மேல் வளரும் முடியை நீக்க பல அழகு சாதனப் பொருள்கள் உள்ளன. இருப்பினும் அனைத்துப் பொருள்களுமே உதட்டின் மேற்புறம் உள்ள முடியைப் போக்காது. ஆனால் வீட்டில் உள்ள சில பொருள்களைக் கொண்டு உதட்டின் மேற்புறம் வளரும் முடியைப் போக்கலாம்.

**மஞ்சள் மற்றும் பால்**

மஞ்சளைத் தண்ணீர் அல்லது பால் சேர்த்துக் கலக்கவும். இந்தக் கலவையை உதட்டின் மேல் தடவவும். அரைமணிநேரம், அப்படியே விடவும். காய்ந்த பிறகு தண்ணீரால் கழுவவும். ஒரு வாரத்தில் பல முறை இவ்விதம் செய்வதால் நல்ல பலன் கிடைக்கும்

**முட்டை**

முட்டையின் வெள்ளைக் கருவை, கோதுமை மா மற்றும் சர்க்கரையுடன் சேர்க்கவும். பேஸ்ட் பதம் வரும் வரை நன்றாகக் கலக்கவும். உதட்டின் மேல் பகுதியில் இதனைத் தடவவும். 30 நிமிடம் கழித்து காய்ந்ததும் அந்தக் கலவையை உரித்து எடுக்கவும். ஒரு வாரத்தில் 2 முறை இவ்விதம் செய்யலாம். ஒரு மாதத்துக்குள் நல்ல பலன் கிடைக்கும்.

**எலுமிச்சை**

ஒரு எலுமிச்சைப் பழத்தை பாதியாக நறுக்கி கொள்ளவும். அதன் சதைப் பகுதியில் சிறிது சர்க்கரையைத் தூவி, உதட்டின் மேல் புறத்தில் அந்த எலுமிச்சையைத் தேய்க்கவும். தொடர்ந்து 10 நிமிடங்கள் செய்யவும். பின்பு நீரால் முகத்தைக் கழுவவும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் இவ்விதம் செய்யவும்.

மகளிர் பகுதி
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555

உங்கள் மகளிருக்கான குறிப்புக்கள் வரவேற்கப்படுகின்றன. எழுதி அனுப்புங்கள்.



## முள்ளங்கி கீரைக் கூட்டு

| | |
|---|---|
| முள்ளங்கிக் கீரை - | 200 கிராம் |
| பாசிப்பருப்பு - | 100 கிராம் |
| மஞ்சள் பொடி - | 2 கிராம் |
| சீரகம் - | 10 கிராம் |
| மிளகு - | 15 கிராம் |
| பெருங்காயத்தூள்- | 2 கிராம் |
| பூண்டு - | 5 கிராம் |
| எண்ணெய் - | 10 கிராம் |
| வற்றல் மிளகாய் - | 15 கிராம் |
| கறிவேப்பிலை - | 10 கிராம் |



### தேவையான பொருள்கள்

முக்கால் பதம் வேகவைத்த பாசிப்பருப்புடன், நீரில் நன்றாக அலசி ஆய்ந்து நறுக்கிய முள்ளங்கிக் கீரையை 5 நிமிடம் வேக வைக்கவும். பச்சை வாடை நீங்கியதும், மஞ்சள்பொடி, உப்பு, மிளகுத்தூள், பெருங்காயத்தூள் ஆகியவற்றை சேர்த்து லேசாக மசித்து 2 நிமிடம் தணலில் வைத்து இறக்கி, அதன் மீது எண்ணெயில் தாளித்த கடுகு, பூண்டு, வற்றல் மிளகாயைக் கொட்டிக் கிளறிப் பரிமாறவும். சோற்றுடனோ, இட்லி, பூரி, சப்பாத்தி ஆகியவற்றுடனோ சேர்த்து சாப்பிட மிகுந்த சுவையாய் இருக்கும். இவற்றால் இரத்தம் சுத்தமடையும், சிறுநீர் கல்லடைப்பைத் தவிர்க்க உதவும். கல்லீரல் கோளாறுகளுக்கு எதிர்த்துச் செயல்பட்டு, கல்லீரலுக்கு துணை நிற்கும். நீரிழிவைக் கட்டுப்படுத்தும். இதயத்துக்குப் பலம் கொடுக்கும்.

சஞ்சீவி
10 ஒக்ரோபர் 2020



○ பொக்கிசன்

# கப்பல் திருவிழா

இண்டைக்கு கப்பல் திருவிழா. கப்பல் திருவிழா நரசிங்கம் தான் செய்யிறது. எங்கடை கோயிலிலை நரசிங்கம்தான் நாட்டாமை மாதிரி. இலங்கையிலேயே மூண்டு கோயிலுகளிலை மட்டும்தான் கப்பல் திருவிழா நடக்கிறது எண்டு குருக்கள் மாமா சொன்னவர். நாகர் கோயில், எங்கட கோயில், மற்றது நயினாதீவிலை. நயினாதீவிலேயும் சும்மா படகிலை சப்பரம் கட்டி அதிலை அம்மாளை வைச்சுத் தானாம் திருவிழா செய்யிறது. எங்கடை கோயிலைப்போல கடலுக்கை சுவாமியை கொண்டு போறேல்லையாம். கீரிமலைச் சந்தியிலை இருந்து கேணியடி வரையும் ரண்டு பக்கமும் கலர் ரியூப் லைற் கட்டிக்கிடக்கு. 'கோணும்' சந்தி மட்டும் கட்டிக்கிடக்கு.

நேரம் ஏழு மணியாகுது. வசந்த மண்டபப் பூசை முடிஞ்சு சுவாமி கடக்கரைக்கு வெளிக்கிட்டிட்டுது. அம்மனுக்கு இண்டைக்கு வழக்கத்தை விட ஸ்பெஷல் சாத்துப்படி .அதோடை லைற்றுகளும் பூட்டிக்கிடக்கு. நாலைஞ்சு பேர் கட்டுமரத்தைப் பிடிச்சுக்கொண்டு நிக்க ,குருக்கள் மாமா ஏறி புண்ணியதானம் பண்ணி, தண்ணியை தெளிச்சு விட்டு இறங்கினார். அம்மனைக் கொண்டு வந்து கட்டுமரத்திலைவைச்சுகட்டியாச்சு.

நரசிங்கம் உத்தரவிட்டார், "ஒருத்தரும் ஏறப்படாது .எல்லாரும் இறங்குங்கோ" கட்டுமரத்தை துடையளவு தண்ணி வரையும் தள்ளிக்கொண்டு போனம்.

நரசிங்கம் அணியத்திலை போய் இருந்தார். எனக்கு நரசிங்கத்திலை கோபம் வரும். நான் கோயில் ஐயர். அப்பிடியிருந்தும் நரசிங்கம் எங்களைக் கட்டுமரத்திலை ஏற விடுறேல்லை.

கட்டுமரக்காரன் 'இஞ்சினை' ஸ்டார்ட் பண்ணிப்போட்டு நிமிர்த்தினான். கட்டுமரக்காரர் ரண்டு பேர் ஏறி முன்னுக்கும் பின்னுக்கும் இருந்தார்கள். கட்டுமரம் புறப்பட்டது. குருக்கள் மாமா படியால் ஏறி வந்து தீர்த்த மண்டபத்தில் அமர்ந்தார்.

கப்பற்பாட்டு புத்தகத்தை எடுத்து விபூதியையும் வைச்சு சின்னம்மானிடம் கொடுத்தார் குருக்கள் மாமா. அவருக்குப் பெயர் சின்னத்துரை. எல்லாரும் சின்னம்மான் எண்டுதான் கூப்பிடுறது. நாலு முழ வேட்டி தான் உடுக்கிறவர். ஆளுக்கு பண் எல்லாம் தெரியும். யாகத்திலண்டும், கொடி இறக்கத்துக்கும் ஒவ்வொரு திக்கிலும் ஒவ்வொரு பண் தேவாரம் பாட வேணும். குருக்கள் மாமா "பண் தக்கேசி "அப்பிடி எண்டு சொன்னவுடனை பாடுவார். இப்ப ஆளுக்கு கொஞ்சம் லெவல். தங்கம்மா அப்பாக்குட்டி அவரைத் தான் ஓதுவாராக நியமிச்சிருக்கிறா. அதாலை ஆளுக்கு கொஞ்சம் லெவல். போன வருஷம் தெய்வேந்திரம் தான் கப்பல் பாட்டு பாடினது. வாழை, கெண்டை மீனினங்கள் வரவேற்க சின்னம்மான் பாடுகிறார். தூரத்தில தெரியுது லைற் வெளிச்சம். நடுகடலுக்கு கிட்டப் போட்டுது சுவாமி. எனக்கு கொஞ்சம் பயமாக் கிடக்கு.

'தற்சமயம் படகு கவிண்டா?'

படகு திரும்பி கரைக்கு கிட்ட வந்திட்டுது. பாட்டும் முடிஞ்சது. சுவாமியைக் கொண்டு வந்து மண்டபத்திலை வைச்சாச்சு. இனியென்ன மேளக்கச்சேரி துவங்கப்போகுது. சிதம்பரநாதனும் சிவமும் வந்திட்டினை. சிதம்பரநாதன் மூத்தது,சிவம் தம்பி . தகப்பன் செல்லத்துரை தான் எங்கடை கோயில் மேளம்.சிவமும் செல்லத்துரையும் தான் எல்லாத் திருவிழாவுக்கும் வாறவை.



கச்சேரி எண்டா, சிவம் தமையனோடை சேர்ந்து வாசிக்கிறவர். சிதம்பரநாதன் நல்ல வெள்ளை ஆள். நாதஸ்வரம் வாசிக்கேக்கை கழுத்து அப்பிடியே பலூன் மாதிரி வீங்கும். நான் அதையே பாத்துக்கொண்டிருப்பன். சின்னக்கணேசுவும் வந்திட்டுது. அவர் தனித்தவில், கானமூர்த்தி பஞ்சமூர்த்தி ஆக்களும் வந்திட்டினம். அவை இணுவிலிலை இருக்கிறவை. ரண்டு பேரும் சகோதரங்கள்.

சின்னமணியின்ரை கார் இப்ப தான் வருகுது .வில்லுப்பாட்டு எண்டா அது சின்னமணி தான். கோஷ்டியும் வந்திட்டுது. அவையள் ட்ரம்ஸ், எக்கோடியன் அதுகளெல்லாத்தையும் கொண்டு வந்து ஒரு பக்கமா வைச்சிருக்கினம். இந்த முறை சின்ன மேளம் இல்லை. போன முறை சின்ன மேளம் பிடிச்சதுக்கு கெங்கன், காந்தி எல்லாரும் பேசினவங்கள்.

இண்டைக்கு திருவிழா முடியா எப்பிடிக்கு நாலரை அஞ்சு மணியாகும். அந்த நேரம் சுவாமி தூக்கிறதுக்கு ஆக்கள் நிக்க மாட்டினம். ஆக்களைத் தேடித்தான் பிடிக்க வேணும்.

# யாழ். மாநகர சபையின் வரலாறு

## (1906 - 1949)

○ ந.பரமேஸ்வரன்

1939 ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அமைச்சர் பண்டாரநாயக்க ஞாயிற்றுக் கிழமை அமைச்சர் மாவட்ட நகரசபைத்தலைவர் உறுப்பினர்களை சபாமண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடினார். கலந்துரையாடலின் போது அமைச்சர் யாழ்ப்பாணத்தை மாநகரசபையாக தரமுயர்த்துவதற்கு பல காரணங்கள் உள்ளன ஆனால் எதிர்ப்பதற்கு ஒரேயொரு காரணம் தான் இருக்க முடியும் அது நிதி திரட்டுவது என்றார். அத்துடன் மக்களின் எதிர்ப்பும் பலமாக காணப்படுவதாகவும் அமைச்சர் கூறினார். அமைச்சரின் கூற்றுக்குபதிலளித்த தலைவர் சாம் சபாபதி, மேலதிகமாக வழங்கப்பட வேண்டிய சம்பளங்கள் பற்றி எடுத்துக்கூறினார். யாழ்ப்பர்ணம் மாநகரசபையாக தரமுயர்த்தப்படும் பட்சத்தில் ஒரு வினைத்திறனுள்ள ஆணையாளரை 500.00 ரூபா மாதச்சம்பளத்தில் நியமிக்க வேண்டும்.

பாகம்
17



கண்டி மாநகரசபை ஒரு சட்டத்தரணியை செயலாளராக நியமித்துள்ளது அவருக்கு 750ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது.

அதேயளவு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணி ஒருவரை நாங்கள் செயலராக நியமித்துள்ளோம்; எமது சட்டத்தரணிக்கு நாங்கள் 200.00 தான் சம்பளமாக வழங்குகிறோம். அத்துடன் முழு நேர சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரையும் நியமிக்க வேண்டும்.

கடந்த இருபது வருடங்களாக வரிகள் மீளாய்வு செய்யப்படவில்லை இவ்வாண்டு கட்டாயமாக மீளாய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுக்கு வரி வருமானம் 12,000 ரூபாவாக அதிகரிக்கும்.

இதற்குப்பதிலளித்த அமைச்சர், "உங்களது கருத்துக்கள் சிலவற்றுடன் உடன்படுகிறேன். சில கருத்துக்களுடன் எனக்கு உடன்பர்டு இல்லை. இப்போது யுத்தம் காரணமாக இந்த விடயத்தை ஒத்தி வைப்பதா வேண்டாமா என்று கேட்டார். இதற்குப்பதிலளித்த தலைவர், யுத்தம் யாழ்ப்பாணத்தை பெரிதாக பாதிக்கவில்லை. மாநகரசபையாக தரமுயர்த்தினாலும் சரி, இல்லா விட்டாலும் சரி பிரச்சனையில்லை என்றார். R.R. நல்லையா எமக்கு ஒரு மாநகர சபை தேவை அது எப்போது என்பது பிரச்சினையில்லை. இன்னும் இருபது முப்பது வருடங்களுக்கு யாழ்ப்பாணம் இப்படியேதான் இருக்கும்; யாழ்பாணத்தவர்களிடம் எதற்குமே எதிர்ப்புத் தெரிவிக்கும் பழக்கம் இருக்கிறது "என்றார்.

(தொடரும்)

யாழ்ப்பாண உள்ளூராட்சி சபையில் அங்கத்தவர்களாக இருந்தவர்களின் புகைப்படங்களை வைத்திருப்போர் அவற்றை மின்னஞ்சல் மூலம் parames35@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால் இந்த ஆவணம் பூரணமான ஒன்றாக அமையும்.

# எலியோட்டம்



> எமது நாட்டில் நிலவும் வரதட்சணைச் சந்தைபற்றி விலாவாரியாகச் சொல்லத் தேவையில்லை. புத்திஜீவிதப் பேருரைகளும் பெண்கள் விடுதலை முழக்கங்களும் மேடையில் மட்டுமே செல்லும்.

○ ஆசி.கந்தராஜா

இளமைக்கால இலக்கிய நண்பன் ஒருவனை, பல்கலைக்கழக பணி நிமித்தமாக நான் கிழக்கு ஆபிரிக்க நாடொன்றுக்குச் சென்றிருந்த பொழுது சந்தித்தேன். நான் தங்கியிருந்த ஹோட்டலின் நிதிக் கட்டுப்பாட்டாளராக பணிபுரிவதாக அவன் சொன்னான். கல்லூரி நாட்களில் அவனும் நானும் பல ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வாழ்ந்தோம். பிற மொழி இலக்கியங்களை அவன் நிறையவே வாசிப்பான். மரபுகள் மீறப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பது அவன் கொள்கை. இது சம்பந்தமாக பல தடவைகள் அவன் கல்லூரி நண்பர்களுடன் முரண்பட நேர்ந்ததும் உண்டு.



இலங்கையில் நடந்த இனக் கலவரம், அதைத் தொடர்ந்த போராட்டம், புலம் பெயரும் நிர்ப்பந்தம் போன்ற பல்வேறு காரணிகளால் நாம் இருவரும் வெவ்வேறு திசைகளில் பயணித்து விட்டோம். இப்போது இருண்ட கண்டத்தின் நாடொன்றிலே எதிர்பாராத சந்திப்பு.

பிறந்த மண்ணைத் தொலைத்துப் புதிய வாழ்க்கை தேடும் எலியோட்டத்திலே, இலக்கியச் சிந்தனைகளைத் தான் தொலைத்துவிட்டதாகச் சொல்லி வருத்தப்பட்டான். அங்கு நிற்கும்வரை இரவுச் சாப்பாட்டுக்கு தனது வீட்டுக்கு வருமாறும் அன்புக் கட்டளையிட்டான்.

ஹோட்டல் வளவுக்குள்ளேயே நண்பனுக்கு வீடொன்றை ஒதுக்கியிருந்தார்கள். நண்பனின் வீட்டில் பீட்டர் என்ற சுதேசி இளைஞன் குடும்பத்தில் ஒருவனாக வளைய வந்தான். அவனே நண்பனின் அலுவலக உதவியாள், சாரதி, வீட்டு வேலைக்காரன் எனச் சகலகலா ஊழியன். இட்லி, தோசை, சப்பாத்தி முதல்கொண்டு இந்திய உணவு வகைகளை சுவையாகச் சமைப்பான் என நண்பனின் மனைவி சொன்னார். விசுவாசம் என்பதின் அர்த்தத்தை அவனிடம் இருந்துதான் நாம் கற்றுக்கொள்ளவேண்டும் என்று பீட்டருக்கு நற்சான்றிதழ் வழங்கினான் என் நண்பன்.

இரவுச் சாப்பாடு முடிந்ததும் பலதும் பத்தும் பேசிக் கொண்டிருந்தோம். ஆபிரிக்க இலக்கியம், எழுத்தாளர்கள், அங்கு வாழும் 'ட்ரைபல்' இனங்களின் பழக்கவழக்கங்கள் பற்றிக் கலந்துரையாடும் போது பீட்டர் பற்றி பேச்சுத்திரும்பியது. பீட்டருக்கு குலவழக்கப்படி திருமணம் முடிந்துவிட்டதாம். பீட்டருக்கும் பெண்ணுக்கும் பதினைந்து வயது வித்தியாசம். பெண் படிக்க விரும்பினாள். அவளின் படிப்புக்கான செலவையும் இவனே ஏற்றுக்கொண்டானாம். படிப்பை முடித்தபின்பும் இவனுடன் கூடிவாழ்வதை அவள் பின்போட்டுக் கொண்டேவந்தாள். பின்புதான் தெரிய வந்தது, அவள் வேறொரு பணக்காரனுடன் தொடர்பு வைத்திருப்பது. பீட்டர் பற்றிய இந்த வர்த்தமானத்தை நண்பன் பேச்சோடு பேச்சாகச் சொன்னான்.

'பீட்டர் என்ன செய்தான்?' எனக் கதைப் பிரியனான நான் நண்பனைக் கேட்டேன். இடையில் பிடித்துக் கொண்டவனை மறந்து தன்னுடன் வந்து வாழும்படி மனைவியை அழைத்தானாம்.

'உன்னிடம் என்ன கார் பங்களா இருக்கிறதா? என்ன சுகத்தை உன்னிடம் காணப்போகிறேன்? என முகத்தில் அடித்தால்போல் கூறிவிட்டாளாம். சென்ற வருடம்தான் பீட்டருக்கு அவனது குலவழக்கப்படி விவாகரத்து கிடைத்தது' என்று நண்பனும் மனைவியும் தெட்டம் தெட்டமாக விசயத்தைக் கூறினார்கள்.

'பீட்டரின் நல்ல மனசுக்கு நிச்சயம் நல்லதொரு பெண்கிடைப்பாள்' என அவனுக்காக அனுதாபப்பட்டேன்.

'அங்கேதான் சிக்கல். பீட்டரிடம் மணப்பெண் கூலிகொடுப்பதற்கு பணம் இல்லை. இங்கு ஆண்கள் மணம் முடிக்கும் பெண்ணின் தந்தைக்கு பணம் அல்லது பொருள் கொடுத்து பெண்ணைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வாங்கவேண்டும் என்றும் சொல்லலாம். இதனால் பல 'ட்ரைபல்' இனங்களில் வரதட்சணைக் கொடுமையால் வாழாவெட்டிகளாக ஆண்களே வாழ்கிறார்கள். அத்தகையவர்களுள் பீட்டரும் ஒருவன்' என்று பீட்டரின் குலத்தவர்கள் கடைப்பிடிக்கும் திருமண சம்பிரதாயங்களை நண்பன் சிரத்தையுடன் விளக்கினான்.

இப்போது பீட்டர் ஒரேயொரு நம்பிக்கையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறானாம். அந்தப் பணக்காரன், அவளைக் குலவழக்கப்படி கலியாணம் செய்து கொள்ளவேண்டும். அப்போதுதான் அவளுக்காக அவன் கொடுத்த மணப்பெண் கூலியையும் படிப்புக்கு செலவு செய்த காசையும் திருப்பிக் கேட்டு வாங்கமுடியும் என மேலும் விபரம் சொன்னார் நண்பனின் மனைவி.

பல்கலைக்கழகப்பணி இனிதே நிறைவேறியது. இனி ஊர் திரும்பும் ஆயத்தங்கள்.

நானும் நண்பனும் வரவேற்பறையில் இருந்து பேசிக்கொண்டிருந்தோம். பீட்டரும் ஒரு மூலையில் அமர்ந்து எமது உரையாடலில் கலந்து கொண்டது மகிழ்ச்சியை அளித்தது. ஆபிரிக்க சமூகம்சார்ந்த சிக்கல்கள், இன்றைய இளம் சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி மிக ஆழமாகச் சிந்திக்க வைக்கும் கருத்துக்களை, பீட்டர் அவ்வப்போது கூறிக் கொண்டிருந்தான். அவனது சமூகசிந்தனைக் கருத்துக்கள், அவன் மேல் எனக்கு நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தின.

மெதுவாக குடும்ப விசயங்களுக்கு எமது உரையாடல் திரும்பியது. நண்பனுக்கு இலங்கையில் பல சகோதரிகள். இவன் தான் குடும்பத்தில் ஒரே ஆண்பிள்ளை. அதுவும் மூத்தவன். அடுத்தடுத்து ஆறு பிள்ளைகளைப் பெற்றுவிட்டு தகப்பன் கண்ணை மூடிவிட்டார். இவனே குடும்பப் பொறுப்புகளை ஏற்று சகோதரிகளை ஒவ்வொருவராகக் கரைசேர்த்து வந்தான். கடைசித் தங்கைக்கு இன்னமும் திருமணமாகவில்லை என்று சொன்னான். பணம்தான் பிரச்சனை என்றும், மனைவி இப்போது புறுபுறுக்கத் துவங்குவதாகவும்"எமக்கென்று ஒரு சேமிப்பு வேண்டாமா? எமது பிள்ளைகளை யார் பார்ப்பார்கள்?" என்று கேட்பதாகவும் சொல்லி வருத்தப்பட்டான். யாழ்ப்பாணத்திலுள்ள சீதன நிலவரம்பற்றி, நண்பன் கூறியதை செவிமடுத்த பீட்டர்" என்ன விசித்திரம். இங்கு ஆண்கள் வரதட்சணைக் கொடுமையால் கஷ்டப்படுகிறோம். உங்கள் நாட்டிலோ பெண்கள் வாடுகிறார்கள்" என்று கூறி வாய்விட்டுச் சிரித்தான். அன்று படுத்தும் தூக்கம் வரவில்லை. பீட்டர் இறுதியாகச் சொல்லிச்சிரித்த விமர்சனக்குறிப்பு மீண்டும் மீண்டும் என் மனக்கண்முன் வந்துபோயின. எமது நாட்டில் நிலவும் வரதட்சணைச் சந்தை பற்றி விலாவாரியாகச் சொல்லத் தேவையில்லை. புத்திஜீவிதப் பேருரைகளும் பெண்கள் விடுதலை முழக்கங்களும் மேடையில் மட்டுமே செல்லும். வாழ்க்கைக்கு என்றுமே உதவுவதில்லை என்ற எண்ணம் மேலிட, புரண்டு புரண்டு படுத்தேன்.

உண்மையில் உலகம் சுருங்கிவிட்டது. நாளை மறுதினம் சிட்னியில் என் மனைவி மக்களுடன் இருப்பேன். 'உலகம் ஒரு கிராமமாகியுள்ளது' என்ற சொல்லடை புழக்கத்துக்கு வந்துள்ளது. என் நண்பனின் தங்கையிடம் பணமில்லை. இதனால் அவளுக்கு ஒரு கலியாண வாழ்க்கை வாய்க்கவில்லை. முதிர்கன்னியாக பெருமூச்சு விட்டு வாழ்கிறாள். இங்கு பீட்டர் நல்ல உழைப்பாளி, நேர்மையானவன், புத்திசாலி, வாட்டசாட்டமாக இருக்கிறான். அவனால் ஒரு பெண்ணைக் கௌரவமாக வைத்துக் காப்பாற்றிக் குடும்பம் நடத்தமுடியும். அவன் இப்போது மணப்பெண் கூலிகொடுக்க முடியாமல் கட்டை பிரம்மச்சாரியாக வாழ்ந்து கொண்டிருக்கிறான். என் நண்பன் பீட்டருக்கு தன் தங்கையை மணம் முடித்துக் கொடுப்பானா? அன்றேல் மாஸ்டரின் தங்கையை மணம்முடிக்க பீட்டர் முன்வருவானா?

எல்லைகள் அறுந்துபோன கோளமயமாதல் என்ற வார்த்தைக்கான அர்த்தத்தை நாளை என் வீடு நோக்கிய பறப்பில் தேடுவேனா? ■

○ சுழியன்

## அறிந்தும் அறியாமலும்





# பிக்பாஸ் வீட்டில் விஜயதாச ராஜபக்ச!

‘பிக்பாஸ்’ நிகழ்ச்சியில் ‘பிக்பாஸ்’ யார் என்பது இன்னமும் எவருக்கும் தெரியாது.அது சிதம்பர ரகசியமாக பேணி பாதுகாக்கப்பட்டுவருகின்றது. ஆனால் இலங்கை அரசாங்கத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சதான் ‘பிக்பாஸ்’. 20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேறிய பின்பு சர்வபலமும் அவருக்கு வந்துவிடும். அதன் பின்னர் எவரும் ஓடவும் முடியாது, ஒளியவும் முடியாது என்ற நிலைவந்துவிடும். இலங்கையின் ‘பிக்பாஸ்’ வீட்டுக்குள் நடிகர்கள், வில்லன்கள், காமெடியன்கள், சுயநலவாதிகள், பொதுநலவாதிகள் என பல்வேறு குண அம்சங்களைக்கொண்ட போட்டியாளர்கள் இருக்கின்றனர்.

அதுபோலவே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தில் வலதுசாரிகள், இடதுசாரிகள், இனவாதிகள், மதவாதிகள், முற்போக்கு வாதிகள், தேசப்பற்றாளர்கள் என பல்வேறு தரப்பினரும் அங்கம் வகிக்கின்றனர். இந்த பிக்பாஸ் வீட்டுக்குள் இப்போது குழப்பம். ஆளுங்கட்சி எம்.பி., விஜயதாச ராஜபக்ச 20 க்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளார். அது மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற அழுத்தத்தையும் பிரயோகித்துள்ளார். ஏற்கனவே அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவி கிடைக்காததால் கடுப்பில் இருக்கும் விஜயதாச ராஜபக்ச, 20 விடயத்தில் அரசுக்கு நெருக்கடி கொடுத்துவருகின்றார். “நான் பதவி பட்டங்களை எதிர்பார்க்கும் அரசியல்வாதி அல்ல, கொள்கை அடிப்படையில் அரசியல் நடத்துபவன்.” என விஜயதாச அண்மையில் விடுத்த அறிவிப்பானது பிக்பாஸை கடுப்பாக்கியுள்ளதாக தகவல்.

ஆக விஜயதாசவின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாமல் 20ஆவது திருத்தச்சட்டவரைபு நிறைவேற்றப்படும் பட்சத்தில் பிக்பாஸ்வீட்டிலிருந்து (அரசாங்கத்தில் இருந்து) விலகி, விஜயதாச ராஜபக்ச சுயாதீன எம்.பியாக செயற்படக்கூடும் என அவருக்கு நெருக்கமான வர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர். விஜயதாசவுக்கென ஆதரவாளர்கள் வட்டாரமொன்று இருப்பதால் அவரை வெளியேற்றவிடாமல் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதற்கு பிக்பாஸ் வீட்டில் உள்ளவர்கள் பேச்சு நடத்திவருகின்றனர் எனவும் தகவல். எது எப்படியோ விஜயதாசவின் முடிவு என்னவென்பது விரைவில் தெரியவரும்.



# அடுத்த இலக்கு...!

தமிழ் மக்களால் ஒரு காலகட்டத்தில் சமாதானப் புறாவாக பார்க்கப்பட்ட சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, அரசியலில் தந்திரம், மந்திரம், நெளிவு, சுழிவு, சூழ்ச்சி, சதி என அத்தனை அம்சங்களையும் கரைத்துக் குடித்தவர் என அவரின் ஆதரவாளர்கள் இன்றளவிலும் போற்றி புகழ்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 ஆண்டுகால தொடர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தமை, ஜனாதிபதித் தேர்தலில் வரலாற்று வெற்றி, இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரப் பெண் ஜனாதிபதி என சந்திரிக்கா அம்மையாரின் அரசியல் சாதனை பட்டியல் நீள்கிறது.

பல தடைகள் படையெடுத்து வந்தபோதிலும் - சோக மேகங்கள் தன் வாழ்க்கையை முழுமையாக சூழ்ந்தவேளையிலும் தன்னம்பிக்கையைக் கைவிடாது தளராத துணிவோடு போராடி எதிர்நீச்சல் போட்டு கரைசேர்ந்த பெண்மணி சந்திரிக்கா.

2005 ஆம் ஆண்டுக்கு பிறகு செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுக்கிய அவர், 2014 நவம்பரில் ‘ரீ என்ட்ரி’ கொடுத்தார். மைத்திரியை பொதுவேட்பாளராக களமிறக்கும் காய்நகர்த்தலை திரைமறைவில் மேற்கொண்டு மஹிந்தவை மண்கவ்வ வைத்தார். கடைசியாக சஜித்தை ஆதரித்தார். ஆனால் கோத்தா வெற்றிபெற்றார். எனினும், சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் கோத்தா அரசை விளாசித் தள்ளிவருகின்றார்.

சரி ,இது ஒரு புறம் இருக்கட்டும், சந்திரிக்கா அம்மையார் தனது பிள்ளைகளை ஏன் அரசியலில் இறக்கவில்லை என பலரும் கேள்வி எழுப்புகின்றனர். இதற்கு சந்திரிக்கா நேரடிப் பதில் எதனையும் வழங்கவில்லை. எதிர்காலத்தில் வருவார்களா என்பதும் கேள்விக்குறியே. எனினும், சர்வதேச மட்டத்தில் முக்கிய பதவியொன்றை சந்திரிக்கா அம்மையார் குறிவைத்துள்ளார் எனவும், அந்தப்பதவி கிடைத்து விட்டால் இலங்கையில் இனி அரசியலில் ஈடுபடமாட்டார் என்றும் சொல்லப்படுகின்றது.

# ‘டிக்டொக்’கில் வலம்வரும் மங்கள

தெற்கு அரசியலில் மிகமுக்கிய அரசியல்வாதிகளுள் ஒருவரே மங்கள சமரவீர. ஒரு கால கட்டத் தில் ஆட்சிகளை கவிழ்க்கும் ஆளுமைகூட அவரிடம் இருந்தது.சர்வதேசத்துடனும் நெருங்கிய உறவுகளைப் பேணியவர்.



எனினும், சிறுபான்மையின மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக துணிந்து குரல் கொடுத்ததாலும், இலங்கை , சிங்கள, பௌத்த நாடு அல்லவென்று பகிரங்கமாக அறிவிப்பு விடுத்ததாலும் கடும்போக்குடைய சிங்கள இனவாதிகள், மங்களவைக் குறிவைத்தனர்.

அவரின் அரசியல் வாழ்வுக்கு முடிவுகட்டத் திட்டம் வகுத்தனர். திட்டமிட்ட அடிப்படையில் தேரர்கள் ஏவிவிடப்பட்டனர். சூழ்ச்சித் திட்டத்தை புரிந்துகொண்ட மங்கள கடந்த பொதுத்தேர்தலில் கடைசி நேரத்தில் பின்வாங்கினார். அது மட்டுமல்ல இனி நாடாளுமன்றத் தேர்தலில் ஈடுபடப்போவதில்லை என்ற அறிவிப்பையும் விடுத்தார்.

இதனால் இனி மங்களவின் தலையிடி இருக்காது என ராஜபக்சக்களும், அவர்களின் சகாக்களும் பெருமூச்சுவிட்டனர். ஆனால் ‘உண்மையான தேசப்பற்றாளர்கள்’ என்ற அமைப்பை உருவாக்கி அதிர்ச்சி கொடுத்தார் மங்கள. இந்த அமைப்பின் பின்னணி என்ன, இயக்குவது யார், இலக்கு என்ன என்பதை அறியமுடியாமல் சிலர் விழிபிதுங்கி நிற்கின்றனர். அதேவேளை பேஸ்புக், டுவிட்டர் என சமூகவலைத்தளங்களை கலக்கிய மங்கள, ‘டிக் டொக்’ கணக்கையும் ஆரம்பித்து வீடியோக்களை பதிவிட்டு வருகின்றார்.60 வயது கடந்தாலும் நவீன உலகுடன் மங்கள எப்போதும் சங்கமித்தே இருக்கிறார்.

# முற்போக்கு கூட்டணி தனிவழி?

2021 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. பட்ஜட் நிறைவேறிய பின்னர் நாடாளுமன்றத்துக்கு ஒருமாதம் விடுமுறை வழங்கப்படும்.

அதன்பின்னர் 2021 ஜனவரியில் நாடாளுமன்றம் மீண்டும் கூடும். அப்போது மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு, 9 மாகாணசபைகளுக்கும் ஒரே நாளில் - பழைய முறைப்படி (விகிதாசார) தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

மாகாணசபைத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஏற்கனவே ஆரம்ப கட்டப் பேச்சுகளை நடத்தியுள்ளன. சங்கமம் சாத்தியப்படுமா இல்லையா என்பது தெரியாது, ஆனாலும் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

பரந்து பட்ட கூட்டணி அமைத்து மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதே சஜித் அணியின் இலக்காக இருக்கின்றது. எனினும், ஐக்கிய மக்கள் சக்தியில் பங்காளியாக இருக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணி மாகாண சபைத் தேர்தலில் தனி வழி செல்வது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக தகவல் கசிந்துள்ளது.

கொரோனா வைரஸ் கட்டுக்குள் வந்த பின்னர் இது விடயத்தில் அடுத்த கட்ட நகர்வுகள் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# தாழ மறுக்கும் தராசு





○ ஆர். பிரகாஷ்

ஒட்டுமொத்த இந்திய தேசத்தையும் தற்போது கிளர்ந்தெழ வைத்துள்ளது இந்தியாவின் ஹாத்ரஸில் இடம்பெற்ற பாலியல் கூட்டுவன்புணர்வின் பின்னரான கொலையொன்று. பாதிக்கப்பட்ட யுவதிக்கு வயது 19 மட்டுமே. அவர் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். இந்தியாவில் ஒடுக்கப்பட்ட சமூகத்தினருக்கு நீதி மறுக்கப்படுவதென்பது இன்று நேற்றல்ல, காலாகாலமாக நடந்துவரும் ஒன்றுதான். இதனால் கூட்டு வன்புணர்வின் பின்னரான இந்தக் கொலையையும் திசைதிருப்பி விடுவதற்கு அங்கு கடும் முனைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பெரும் அரசியல் சதிராட்டமாகக்கூட இந்த விவகாரம் மாறியுள்ளது.

செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி அந்தப் பெண் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு டெல்லி மருத்துவமனையில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காமல் செப்ரெம்பர் 29ஆம் திகதி அவர் உயிரிழந்தார். சந்தேகத்தின் பேரில் அதே கிராமத்தைச் சேர்ந்த சந்தீப், ரவி, லவ்குஷ் மற்றும் ராமு என்கிற ராம்குமார் ஆகிய உயர் சமூகத்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் இந்தியத் தேசியக் கட்சியொன்றில் ஆதரவாளர்களாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இந்த வழக்கு சி.பி.ஐக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் சி.பி.ஐயில் தற்போது ஒன்றன் பின்னர் ஒன்றாக பல்வேறு முக்கிய விடயங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஹாத்ரஸில் பல்வேறு போராட்டங்களை நடத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் பலமுறை முயன்றது. இதற்காக ஹாத்ரஸுக்கு ஒவ்வொரு தடவையும் செல்லும்போது காங்கிரஸின் தலைவரான ராகுல் காந்தி தடுத்து நிறுத்தப்பட்டுத் திருப்பியனுப்பப்பட்டார். அரசியல் பிரதிநிதிகள், ஊடகர்கள் என எவரும் உட்செல்ல முடியாதவாறு படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது ஹாத்ரஸ்.



### புதிய திருப்பம்

இந்த நிலையில் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டு சிறையில் இருக்கும் நால்வரும் குறித்த பெண் அவரது குடும்பத்தினராலேயே கொல்லப்பட்டிருக்கலாம் என்று குற்றஞ்சாட்டியுள்ளனர். குறித்த பெண்ணுடன் தமக்கு இருந்த நட்பின் காரணத்தால்தான் அந்தப் பெண் அவர்களின் குடும்பத்தால் கொல்லப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கின்றனர் அவர்கள். இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இறந்த பெண்ணின் சகோதரருக்கும் கைதான சந்தேக நபர்களில் ஒருவருக்கும் இடையில் கடந்த ஒரு வருடமாக தொலைபேசி உரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த ஒரு வருடத்தில் சுமார் 5 மணித்தியாலங்களுக்கு மேலாக இவர்கள் இருவரும் தொலைபேசியில் உரையாடியுள்ளனர். தற்போது இது தொடர்பிலும் பலகோண விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

### சமனற்ற தராசுகள்

டெல்லியில் ஓடும்பேருந்தில் பாலியல் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட நிர்பஜாவுக்கு நீதி வழங்கப்படுவதில் இருந்த எழுச்சியும் வீச்சும், ஹாத்ரஸ் பெண்ணின் விடயத்தில் இல்லை. ஒன்றுமாறி ஒன்றாக முன்பின் முரணான தகவல்கள்தான் இதுவரை வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆக, நீதி தேவதையின் கண்கள் சமனாகத் திறக்கப்பட்டு ஹாத்ரஸ் பெண்ணின் விடயத்தில் நீதி வழங்கப்படுமா என்றால் அதன் பதில் எதிர்மாறாகத்தான் அமையும். ஏனெனில் இந்தியாவின் நீதித் தராசுகள் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் பக்கம் எப்போதும் தாழ மறுத்தே நிற்கின்றன.

---

# புதிர் 16




○ மாயன்

நடப்பவறையெல்லாம் மறைந்திருந்தபடி பார்த்துக் கொண்டிருந்த காக்கை குப்தனுக்கு 'குப்'பென்று வியர்த்தது. வழக்கமாக புதிர்மலையைத் தேடிவருபவர்கள் தான், புதிர்களில் சிக்கி விழிபிதுங்குவார்கள். ஆனால் இங்கோ தலைகீழாகவல்லவா நடக்கிறது.

'இங்கு வருபவர்களின் மூளைகளைக் கலங்க வைக்கும் புதிர்களின் தேசத்து அசுரனுக்கு, சாதாரண அரசிளங்குமாரன் சொல்கின்ற புதிருக்கு விடை தெரியாமல் போய்விடுமா என்ன? அதனால் அவன் இளஞ்சந்திரன் சொல்லப்போகும் புதிரை ஊதித்தள்ளுவது போல, சட்டென்று விடையைச் சொல்லிவிடுவான். அப்படி அவன் சொல்லாவிட்டால் என்ன நடக்குமோ?'இதுதான் காக்கைகுப்தனின் படபடப்புக்கு காரணம். இப்படிக் காக்கைகுபதன் நினைத்த மாதிரியே சவேந்திராசுரனும் நினைத்திருப்பான் போலும். அவன் உடனேயே இளஞ்சந்திரனைப் பார்த்து,

" சரி, நான் பதில் சொல்லிவிட்டால் என் பலவீனத்தைச் சொல்வாயெனில், சொல்லாவிட்டால் என்னை உன்னால் என்ன செய்துவிட முடியும்?" என்று கேட்டான். அதைக் கேட்டு இளஞ்சந்திரனுக்கு உள்ளூர இன்னும் பயம் கூடிய போதும், அதை அவன் வெளிக்காட்டவில்லை. இன்னும் சகஜமாக முகத்தை வைத்துக் கொண்டு,

" எம்மை நீ சாதாரணர்களாக எடை போட்டு விட்டாய். உன்னை விடவும் பல சக்திகள் கொண்டவர்கள்தான் நாங்கள். இதோ பார்,இந்தக் கையில் உள்ள தாயத்தை. இதில் அஷ்டமகா சக்திகளையெல்லாம் அடக்கி வைத்திருக்கிறோம். தேவைப்பட்டால் என்னென்ன சித்துவேலையெல்லாம் செய்ய வேண்டுமோ அத்தனையையும் செய்யத் தயங்கமாட்டோம்" என்று தன் வலக்கையில் கட்டியிருந்த தாயத்தைக் காண்பித்தான் இளஞ்சந்திரன். அசுரனுக்கு அவன் சொல்வதை நம்புவதா, இல்லையா என்று இருதலைக்கொள்ளி எறும்பின் நிலை.

'ஒருவேளை இவன் சொல்வது உண்மையாக இருந்துவிட்டால்...? எதற்கு விஷப் பரீட்சை. பேசாமல் புதிருக்கே ஒத்துக்கொள்வோம்' என்று சிந்தித்தான். இப்போது அசுரன் கேட்ட கேள்வியை கொஞ்சம் மாற்றி இளஞ்சந்திரன் கேட்டான்,

"நான் கேட்கும் புதிருக்கு நீ பதில் சொல்லாவிட்டால் என்ன செய்வாய்?"

" நான் என்ன செய்ய..?"

"உன்னை நான் பார்த்தால் கண்பார்வை பறிபோக முடியாதபடி உன் சக்தியைக் குறைக்க வேண்டும்"

"அதெப்படி முடியும்? இது எனக்குப் பிறப்பில் இருந்தே கிடைத்த கவசத்தின் மூலம் உருவான சக்தி. அந்தக் கவசத்தை என்னாலேயே ஒருபோதும் கழற்ற முடிவதில்லை. வேறேதும் கேள்" என்றான் அசு ரன். சிறிதுநேரம் இளஞ்சந்திரன் யோசித்தான். என்ன கேட்பது என்று அவனால் தீர்மானிக்க முடியவில்லை. என்றாலும் ஏதோ சொல்லவேண்டும் என்பதற்காக ,

" அப்படியானால், புதிருக்கு நீ பதில் சொல்ல முடியாவிட்டால், உன்னுடைய உருவத்தை நான் சிறிதாக்கி விடுவேன்" என்று சொன்னான்.

இப்போது உண்மையாகவே அசுரனுக்கு கலக்கம் வந்துவிட்டது.

"இவனிடம் ஏதோ மந்திர சக்தி உள்ளது போலும். இல்லாவிட்டால் இப்படித் துணிவாகச் சொல்லமாட்டானே.சரி எதற்கும் ஜாக்கிரதையாக இருப்போம்' என நினைத்தவன் " சரி, முதலில் புதிரைச் சொல்" என்று உத்தரவிட்டான்

இளஞ்சந்திரன் சற்றும் தாமதிக்காமல் புதிரைச் சொல்லத் தொடங்கினான்.

"குளமொன்றில் சில தாமரை மலர்கள் பூத்திருந்தன. அவற்றைக் கண்ட தவளைகளுக்கு அவற்றில் ஏறி அமரும் ஆசை வர, அப்படியே பாய்ந்து ஆளுக்கொரு பூவில் ஏறி அமர்ந்தன. ஆனால் அந்தோ பரிதாபம். ஒரு தவளைக்கு அமர்வதற்குப் தாமரைப் பூ கிடைக்கவேயில்லை. அதனால் அவை ஒரு உபாயம் செய்தன. இப்போது ஒரு மலரில் இரண்டு தவளைகள் வீதம் உட்கார்ந்தன. அதனால் பூ இல்லாமல் தவித்த தவளைக்கும் உட்கார இடம் கிடைத்தது. ஆனால் இப்போதோ ஒரு தாமரைப்பூ எவரும் உட்காராமல் , மீதமாக இருந்தது" இளஞ்சந்திரன் இப்படிச் சொல்லவும் அசுரனுக்கு சினம் மிகுந்தது.

" இப்போது இந்தக் கதை எனக்கு எதற்கு? முதலில் புதிரைச் சொல். பசி வயிற்றைக் கிள்ளுகின்றது. " என்று எரிச்சலோடு சொன்னான்.

அதற்கு இளஞ்சந்திரன் " இதுதான் புதிர். அந்தக் குளத்தில் எத்தனை தவளைகள் இருந்தன? எத்தனை தாமரைகள் மலர்ந்திருந்தன?"

இதைக் கேட்டதும் அசுரன் கடகடவெனச் சிரிக்கத் தொடங்கினான்.

( புதிர்கள் தொடரும்)

கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்படையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளிவருகின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.

15



இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கடந்த வாரம் உயர்தரத்துக்குப் பின்னான உயர்கல்வி எனும் பரப்பின் முதன்மைப் பரப்பாக அமையும் பல்கலைக்கழக கல்வி தொடர்பில் ஆராயத் தொடங்கியிருந்தோம். அக் கட்டுரையின் நிறைவில் பல்கலைக்கழக உயர்கல்வி வாய்ப்புக் குறித்து பின்வரும் நான்கு விடயப்பரப்புக்களில் ஆராய்வது பொருத்தமானது எனக் குறிப்பிடப் பட்ட தற்கமைய இவ்வாரம் தொடக்கம் எதிர்வரும் சில வாரங்களுக்கு இவ் விடயங்கள் தொடர்பில் இக் கட்டுரை கவனம் செலுத்தும்.

- பல்கலைக்கழக அனுமதி ஒன்றுக்கான அடிப்படை தகைமை
- பல்கலைக்கழக அனுமதி ஒன்றுக்கான மேலதிக தகைமை
- பல்கலைக்கழக அனுமதி ஒன்றுக்கான மேலதிக தேவைப்பாடுகள்
- தகைமையிருந்தும் பல்கலைக்கழக அனுமதியை இழப்பதற்கான வாய்ப்புக்கள்

### பல்கலைக்கழக அனுமதி ஒன்றுக்கான அடிப்படைத் தகைமை

இலங்கையில் பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமையைப் பெற்றுக்கொள்வது என்பது பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்வதைவிட அத்துணை கடினமானது அல்ல. மூன்று தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் சாதாரண சித்தியையும் (3A) க.பொ.த உயர்தரப் பரீட்சையுடன் இணைந்து நடத்தப்படும் பொதுச் சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30 புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளும் எந்த நபரும், தான் தகைமை பெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சையை அடுத்து வரும் கல்வியாண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராகிறார். உயர்தரத்தைப் பொறுத்தவரையில் சாதாரண சித்தி எனும் பெறுபேறு ஒரு பாடத்தில் 45 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு வழங்கப்படும் புள்ளியாகும்.

இது க.பொ.த சாதாரண தரத்தில் 35 புள்ளிகளாகவிருப்பது குறிப்பிடத்தக்கது. இருந்தும் இப் புள்ளிகளின் வீச்சு குறித்த பரீட்சையின் கடினத்தன்மை மற்றும் இதர காரணிகளினால் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறைக்கப்படும் வாய்ப்புக்களும் அவ்வப்போது இடம்பெறுவதுண்டு.

உயர்தரப் பரீட்சைக்கு ஒருவர் எத்தனை தடவைகள் தோற்றக்கூடியதாகவிருப்பினும், பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக மூன்று தடவைகள் மட்டுமே தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது. இருந்தும் இம் மூன்று தடவைகள் என்பது தொடர்ச்சியானவையாகவிருக்க வேண்டும் என்ற அவசியமும் கிடையாது. பல்வேறு காரணிகளின் நிமித்தம் தொடர்ச்சியாக உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற முடியாத பரீட்சார்த்திகள் அல்லது க.பொ.த சாதாரண பரீட்சையை நிறைவு செய்து தமது அணிக்கான முதல் சந்தர்ப்பத்தில் பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது பரீட்சைக்கு தோற்றாத காரணத்தை குறிப்பிடுதல் அவசியமானது.



### பல்கலைக்கழக அனுமதிக்கான வயதெல்லை

பல்கலைக்கழக அனுமதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான வயது எல்லை இன்றுவரை இலங்கையில் வரையறை செய்யப்படவில்லை.

எனவே வயது ஒரு தடையெனக் கருதி பல்கலைக்கழக கல்வியைத் தொடர்வதில் தயக்கம் எதுவுமின்றி பல்கலைக்கழக அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய முன்னுதாரணமான முயற்சிகளும் எமது வடபுல கல்வியில் மிகக் குறைவாகவேயுள்ளது.

குறிப்பாக போர்க் காலத்தில் பல்வேறு காரணங்களின் நிமித்தம் பல நூற்றுக்கணக்கானவர்கள் தமது பாடசாலைக் கல்வியை இடைநடுவில் கைவிட்ட நிலையிலுள்ளனர். முன்னாள் போராளிகள் பலர் அதீத திறமையுடையவர்களாகவிருந்த போதிலும், போரில் நேரடியாக ஈடுபட்ட காரணத்தால் பாடசாலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி வாய்ப்புக்களைத் தியாகம் செய்துள்ளனர். அத்தகையவர்கள் தற்போது மீளவும் பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்ய முடியும். இவ்வாறு ஒரு சிலர் முயன்று தற்போது பட்டதாரிகளாக வெளியேறியுள்ளதுடன், பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டும் உள்ளார்கள். இது தொடர்பில் உரிய வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு கட்டுரையாளர் உள்ளிட்ட பல கல்வியியலாளர்கள் என்றும் தயாரான மனநிலையிலுள்ளனர் என்பதை இத்தகையவர்கள் கருத்தில் எடுக்க வேண்டும்.

> பல்கலைக்கழக அனுமதியொன்றை பெற்றுக்கொள்வதற்கான வயது எல்லை இன்றுவரை இலங்கையில் வரையறை செய்யப்படவில்லை. எனவே வயது ஒரு தடையெனக் கருதி பல்கலைக்கழக கல்வியைத் தொடர்வதில் தயக்கம் எதுவுமின்றி பல்கலைக்கழக அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

### பொதுச் சாதாரண வினாத்தாள் குறித்த அக்கறையீனம்

பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமையை பரீட்சிக்கும் பொதுச் சாதாரண வினாத்தாள் குறித்த விழிப்பும் எமது சமூகத்தில் சற்று பின்னடைவான நிலையிலேயேயுள்ளது. பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்ள ஒரு மாணவர் அப் பரீட்சையில் பெற்றுக்கொள்ள வேண்டிய 30 புள்ளிகளைப் பெற்றுக்கொள்வது இலகுவான இலக்கு என்பதால், அப் பரீட்சை குறித்து அதிகம் கவனம் கொடுக்கப்படாமைால் அப் பரீட்சையின் உண்மை நோக்கம் எய்தப்படுவதில்லை என்பது கட்டுரையாளரின் வலுவான நம்பிக்கையாகும். மாணவர்கள் தமது பாடப்பரப்பு சார்ந்த விடயங்களுக்கு அப்பாலும் பல்வேறு விடயங்கள் குறித்த அறிவைக் கொண்டிருப்பதே அவர்களின் ஆற்றல் மற்றும் திறன்களை மேம்படுத்தும் எனும் நோக்கிலேயே இப் பரீட்சை உயர்தரப் பரீட்சையில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தேவைப்பாடாகவும் கொள்ளப்பட்டது. அதாவது வெளிப்படையாகச் சொல்வதானால், மாணவர்கள் வெறுமனே புத்தகப் பூச்சிகளாக இல்லாது பரந்துபட்ட அறிவாற்றல் கொண்டவர்களாகவிருக்க வேண்டும். அதுவே நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமானது எனும் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே இப் பரீட்சை அறிமுகம் செய்யப்பட்டது. எமது மாணவர்கள் அது குறித்து கவனம் செலுத்தாமை எதிர்காலத்தில் பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்த பின்னரும் வேலை வாய்ப்புக்காக ஏங்கும் நிலையை அதிகம் பிரதிபலிப்பதை நாம் காணலாம்.

இதனைவிட சில திறமையான மாணவர்கள் இப் பரீட்சையின் மிகக் குறைந்த புள்ளியான 30 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளத் தவறும் சந்தர்ப்பங்களும் வடக்குக் கல்விப் புலத்தில் ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் சம்பவமாகவுள்ளது.

அதிலும் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தியைப் பெற்ற சில மாணவர்கள் கூட இப் பரீட்சையில் 30 புள்ளிகளைப் பெறாத நிலைமை வேதனைக்குரியது. இம் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி என்னவாகும் எனும் கேள்வியும் அடிக்கடி கேட்கப்படும் கேள்வியாகும். இத்தகைய வர்களுக்கு பின்வரும் வழிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்படுகின்றது.

1. குறித்த மாணவர் தனது முன்னைய க.பொ.த உயர்தரப் பரீட்சை அமர்வில் பொதுச் சாதாரண பரீட்சையில் 30 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருப்பின் அப் புள்ளிகள் கவனத்தில் கொள்ளப்படும்.
2. ஏற்கனவே 30 புள்ளிகளைக் கொண்டிராதவர்கள் தாம் பெற்றுக்கொண்ட பெறுபெறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொண்டாலும், பல்கலைக்கழக கல்விக்காக பதிவை மேற்கொள்ள முடியாது.

அடுத்து வரும் பரீட்சையில் பொது சாதாரண பரீட்சைக்கு மட்டும் தோற்றி 30 புள்ளிகளுக்கு மேல் பெற்று பின் அடுத்து வரும் கல்வியாண்டில் பல்கலைக்கழக கல்வியை முன்னைய அனுமதியின் அடிப்படையில் தொடர முடியும். இதற்கான வாய்ப்பும் மூன்று தடவைகள் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகள் குறித்த தெளிவு முதலில் அவசியமாகும். இது குறித்து எமது சமூகத்துக்கு உரிய வழிகாட்டுதல்கள் முறைமைப்படுத்தப்பட்ட வழிகளில் வழங்கப்படுவது அவசியமாகும்.




(தொடரும்)

# தமிழ்க் கட்சிகளின் சாப்பாட்டுக்கடை

○ உதன் பெர்னாண்டோ

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை பல நகரங்களில் "சிங்கள உணவகம்" என்ற பெயர்ப்பலகை எளிதாகக் காணக்கூடிய ஒன்றாக இருந்தது. தற்போது இவற்றைக் காண்பது அரிதாகி விட்டாலும் (அது ஒரு நல்ல விடயம் கூட), சிற்சில இடங்களில் "ஆரிய சிங்கள உணவகம்" என்றும் பெயர் கொண்டிருந்தன. பெயரில் "சிங்கள" என்றிருந்தாலும் சிங்களவர்க ளுக்கு மட்டுமே திறந்து இருந்ததாகவும், மற்ற இனத்தவர்களை அனுமதிக்காமல் இருந்ததாகவும் நான் என்றுமே கேள்விப்பட்டதில்லை. பொதுவாக "சைவக் கடை" என்றால் (சைவப்பாரம்பரியத்தை ஒட்டியதாக இருக்கும்) மாமிசம் அல்லாமலும், இட்லி, தோசை, வடை முதலிய எளிய உணவு வகைகள் மலிவான விலையில் கிடைக்கும் இடங்களாக உள்ளனவே. தமிழினப் பின்னணியைக் கொண்ட இவ்வித உணவகங்களும் எவ்வித இனப் பாகுபாடுகளும் இன்றி எல்லோரையும் வரவேற்பவை தானே!



"ஆனந்த பவன் தோசே கடே தோசே பெதனவா" என்று ஒரு சிங்களப் பாடல் கூட உள்ளது, தெரியுமோ? "கிரீன்லாண்ட்" மற்றும் "சாந்தி விஹார்" கொழும்பில் பிரபலமாக உள்ள இரு சைவ உணவகங்கள். இதே போல் "முஸ்லிம் கடை" என்ற பெயருள்ள உணவகங்களும் எல்லா ஊர்களிலும் அனைத்து சந்திகளிலும் உள்ளன. இவையும் இனப் பாகுபாடின்றி அனைவருக்கும் திறந்தவையாகவே உள்ளன. "துன்முள்ளை" சந்தியிலிருந்து உட்புறமாகச்சென்றோமானால் எதிர்கொள்ளப்படும் "ரஹுமானியா" உணவகமும், "பஞ்சிகாவத்த"யிலுள்ள "புஹாரி" உணவகமும், பற்பல இடங்களில் அமைந்துள்ள "பிலவுஸ்" உணவகங்களும் பொதுமக்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறி உள்ளன. எண்ணிக்கையில் அதிகமாக இல்லாவிட்டாலும் "மலே" உணவகங்களும் சுவை புரிந்தவர்களிடையே பிரபலமாக உள்ளன.

இம்முறை வடக்கில் நடந்த தேர்தல் மிக வித்தியாசமான முடிவுகளை தந்துள்ளது.முன்னைய காலங்களில் தேர்தல் முடிவுகளை முன்கூட்டியே ஆணித்தரமாக அறிவிக்கக்கூடிய அளவுக்கு மிகப்பெரிய அரசியல் சக்திகளாக வடக்கில் தமிழ்க்கட்சிகள் அணிதிரண்டு இருந்தன. ஒரு காலத்தில் (செல்வநாயகம் அவர்களின் தலைமையில்) தமிழரசுக்கட்சி, அதன் பின் (அமிர்தலிங்கம் தலைமையிலான 1977இல் எதிர்கட்சியாக இருந்த) தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, சமீப காலங்களில் (TNA என்ற) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவைகளை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

என்னைப் பொறுத்தவரை இந்தக் கட்சிகள் அனைத்தும் 'மெனு கார்ட்' அற்ற உணவகங்களாகத் தான் தெரிகின்றன. பெரும்பாலும் பல உணவகங்களில் சென்று , "சாப்பிட என்ன இருக்கு?", என்று கேட்டால், கிடைக்கக் கூடிய பொதுவான பதில் "ரைஸ்" அல்லது "கொத்து" தான். "ரைஸ்" என்ற பெயரில் கொடுக்கப்படுவது நொந்து நூலாக்கப்பட்ட சோறு. அதற்கு தனியா்ன ஒரு பெயரும் உள்ளது , "ஃப்ரைட் ரைஸ்". இந்த "ஃப்ரைட் ரைஸ்" என்பதை ஒரு தட்டில் குவித்து அதன் மேல் அரைத்த மிளகாய்அதாவது "சில்லி பேஸ்ட்"டினை ஊற்றி, உடலுக்கும் சரி, பரிமாறும் அழகுக்கும் சரி, முற்றிலும் உதவாத ஒன்றாக இருக்கும். "கொத்து" என்பதும் அதனைப் போன்றதே.

அது என்னவோ, தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் கூட மக்களின் முன் வைக்கப்பட்ட "ரைஸ் அண்ட் கறி" போல தான்! பெரும்பாலும் மக்களிடம் உண்மையான தேர்வு என்பது இருந்ததில்லை. சுவையற்றிருந்தாலும், மக்கள் சாப்பிடக் கூடியதாக இருப்பது கடையில் சமைக்கப்பட்ட இந்த ஒரு "ரைஸ்" மட்டுமே!

இந்த முறை, பொதுத் தேர்தலில் முதன்முறையாக ஒரு மாற்றம் தெரிய வந்துள்ளது. தமிழ் உணவகத்தில் வழக்கத்தை விட அதிகமான உணவு வகைகள் சமைக்கப்பட்டு, பரிமாறப்பட்டு, சாப்பிடப்பட்டதை நம் அனைவராலும் பார்க்க முடிந்தது! இந்தக் கோணத்தில் பார்த்தால், இந்தத் தமிழ் அரசியல் கட்சி உணவகத்தின் "மெனு கார்ட்"இல் புதிதாக பார்க்கக் கிடைத்த உணவு வகைகள் இவ்வாறு இருந்தன.

### தோசை - சாம்பார்:

முக்கிய தமிழ் அரசியல் கட்சியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை கடும் தோல்வியைத் தழுவியுள்ளது. சென்ற நாடாளுமன்றத்தில் பதினாறு உறுப்பினர்களாக இருந்த இந்தக்கட்சியின் எண்ணிக்கை பத்து உறுப்பினர்களாகக் குறைந்துள்ளது. கூட்டமைப்பின் மிகமுக்கியமான அரசியல்வாதிகளில் சிலர் தோல்வி அடைந்து உள்ளார்கள். மாவை சேனாதிராசா இவர்களில் ஒருவர் . பேச்சு வார்த்தையின் வழியாக உடன்பாட்டுக்கு வருதல் என்கிற கூட்டமைப்பின் கொள்கை சாம்பாரை ஒத்தது. ஆனால் இந்தச் சாம்பாருடன் கூடவரும் தோசைக்கு இம்முறை மவுசு குறைந்து விட்டது என்பது தெள்ளத் தெளிவான உண்மையே!

### வனிலா மற்றும் ஸ்ட்ரோபெர்ரி ஐஸ்கிரீம்:

பிரதான உணவு பிடிக்காதவர்களுக்கு கூட ஐஸ்கீரீம் பிடித்தமானது. அதிலும் வனிலா அல்லது ஸ்ட்ரோபெர்ரி சுவை கொண்ட ஐஸ்கிரீம்கள் என்றால் எல்லோருக்கும் அலாதி பிரியம். "ஒரு நாடு , இரு தேசம் " என்ற கொள்கையை முன்னிறுத்தி கஜேந்திரகுமார் பொன்னம்பலம்தலைமையில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு இரு இடங்கள் கிடைத்துள்ளன! வடக்கில் பொன்னம்பலம் குடும்பம் என்பது தெற்கில் பண்டாரநாயக்க குடும்பத்தைப் போன்றது. கஜேந்திரகுமாரின் பாட்டனார் மிகப் பிரபலமானசட்டத்தரணி யான . ஜி.ஜி. பொன்னம்பலம் .கஜேந்திரகுமாரின் தந்தையாரான குமார் பொன்னம்பலம் , சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் கொல்லப்பட்டார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த நாடாளுமன்றத் தொடக்க உரையில் தமது கொள்கையான "ஒரு நாடு , இரு தேசம்" என்ற அரசியல் நிலைப்பாட்டினை ஒளிவு மறைவின்றி சபையில் பதிவு செய்தார். கூட்டமைப்பின் சாம்பாரால் விரக்தியடைந்த வாக்காளர்கள் தான் பொன்னம்பலம் அவர்களின் வனிலா மற்றும் ஸ்ட்ரோ பெர்ரி சுவையால் கவரப்பட்டார்களோ என்னவோ?

### பனங்காய்ப் பணியாரம்:

இந்தப் பலகாரமானது யாழ்ப்பாணத்திற்கே உரிய ஒன்று. பனம்பழத்தின் சாறும் மாவும் சேர்த்துத்தயாரிக்கப்படுவது. அவித்த மாவும் சீனியும் கலந்த உருண்டைகளாக்கி சூடான தங்க நிற எண்ணெயில் சுடப்படும் பனங்காய்ப் பணியாரம் தட்டில் வைத்தால் வாய்க்குள் காணாமல் போவது சகஜம். வயதால் முதியவராக இருந்தாலும் நாடாளுமன்றத்தில் முதன்முறை யாக தேர்ந்தெடுக்கப்பட்டு புதிய உறுப்பினராக நுழைந்துள்ளார் விக்னேஸ்வரன். நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய கன்னி உரையும் அவரது தொல்பொருள் மற்றும் வரலாற்று ஈடுபாட்டினை முன் நிறுத்துகிறது. இப்பேர்ப்பட்டவரை பனங்காய்ப் பணியாரமாக கருதுவதில் தவறேது? இந்தப் பழமை விரும்பும் பணியாரச்சுவை மக்களையும் ஈர்க்கிறது என்பதற்கு அவருக்குக் கிடைத்த விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையே சான்று! ஆனால் பனங்காய் காய்ப்பது வருடத்தில் சில மாதங்கள்("சீஸன்") மட்டுமே. எனவே பனங்காய்ப் பணியாரம் வருடம் முழுவதும் கிடைக்காது. விக்னேஸ்வரனும் அதேபோல் ஒரு காலகட்டத்தில் மட்டும் வந்து போகும் பாத்திரமாகத்தான் இருக்கிறார். தேர்தலின் போது துடிப்பாகச் செயற்படும் அவரை ஒரு சில நாட்கள் சென்ற பின் வலை வீசித் தேடினாலும் பிடிக்க முடியாது. இந்த விடயம் அவருக்கு வாக்களித்த மக்களுக்குத் தெரியுமோ என்பது விடை தெரியாத கேள்விகளில் ஒன்று.

### மாசிக் கருவாடு:

ஈ.பி.டி.பி. கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மாசிக் கருவாடு போன்றவர் . அவரால் வடக்கு அரசியல் கறியானது சுவையற்றதாகமாறி விடும்! அவரது அரசியல் தெற்கில் சமைக்கப்படும் அரசியல் கீரையுடனோ, புளி உப்புடனோ இணைய ஒரு போதும் தயங்காது! எனவே தான் அவர் இந்த அரசாங்கத்தில் ஒரு அமைச்சராகப் பதவி வகிக்கிறார்!

### 'கெக்குலு' (சிவப்பு அரிசி) வடை

இந்தத் தேர்தலின் திருப்புமுனையே இலங்கை சுதந்திரக் கட்சியின் சார்பாக போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தேர்வான அங்கஜன் இராமநாதன்தான். வடக்கையும் கிழக்கையும் முழுமையாக துருவ மயப்படுத்திய முப்பது ஆண்டுப் போருக்குப் பின்னர் ஒரு தசாப்தம் மட்டுமே ஆகியுள்ள வேளையில் தெற்கு சிங்கள-பௌத்த பெரும்பான்மையினக் கட்சியாகக் கருதப்படும் ஓர் அரசியல் சக்தி வடக்கிலே கால் பதிப்பது கனவில் கூட நினைத்துப் பார்க்கமுடியாத ஒரு விடயமாக இருந்தது. ஆயினும் அந்த "சாத்தியமில்லாத" விடயம் நடந்துள்ளது! அங்கஜன் பெரும்பாலான சிங்கள-பௌத்தக் கட்சியின் தாக்கம் காரணமாக உழுந்து வடையாக மாறுவாரா? அல்லது உழுந்து கலந்த கெவுமாக (சிங்கள பலகாரம்) மாறுவாரா? , இவரின் சுவையைப் பொறுத்திருந்துதான் அறிந்து கொள்ள முடியும்.

> பொதுத் தேர்தலில் முதன்முறையாக ஒரு மாற்றம் தெரிய வந்துள்ளது. தமிழ் உணவகத்தில் வழக்கத்தை விட அதிகமான உணவு வகைகள் சமைக்கப்பட்டு, பரிமா றப்பட்டு, சாப்பிடப்பட்டதை நம் அனைவராலும் பார்க்க முடிந்தது! இந்தக் கோணத்தில் பார்த்தால், இந்தத் தமிழ் அரசியல் கட்சி உணவகத்தின் மெனு கார்ட்இல் புதிதாக பார்க்கக் கிடைத்த உணவு வகைகள் இவ்வாறு இருந்தன.



# வில்லன்!

ஒரு கிரிக்கெட் வீரரைப் பார்த்து அந்த அணியின் சொந்த ரசிகர்களே பயப்படுகின்றனர் என்றால் அது கேதர் யாதவாகத்தான் இருக்க முடியும். இம்முறை ஐ.பி.எல் தொடரில் இதுவரை புள்ளிப்பட்டியலில் ஏற்கனவே இறங்கு நிலையில் இருக்கும் சென்னை சுப்பர் கிங்ஸுக்கு மேலும் பெரும் பின்னடைவைக் கொடுத்துள்ளார் கேதர்.

சென்னை - கொல்கத்தா அணிகளுக்கு இடையில் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை அணி 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இறுதிக்கட்டத்தில் களமிறக்கப்பட்ட கேதர் யாதவ் 12 பந்துகளில் வெறும் 7 ஓட்டங்களை மாத்திரம் பெற்றார். இதில் ஒரு பவுண்டரி அடங்குகின்றது. அது நீங்கலாகப் பார்த்தால் ஏனைய 11 பந்துகளில் 3 ஓட்டங்களை மட்டுமே கேதர் பெற்றுக்கொண்டார். இந்த டெஸ்ட் ஆட்டம்தான் சென்னையின் தோல்விக்கு முக்கிய காரணம். இதையடுத்து ஏனைய அணிகளின் ரசிகர்கள் மாத்திரம் அல்லாமல் சொந்த அணியின் ரசிகர்களே கேதரை வறுத்தெடுக்க ஆரம்பித்துள்ளனர். நியாயமான கோபம்தான்.

# புலவர் பஜ்ஜி!




தோல்விகளை அடுத்து துவண்டு போயிருக்கும் சென்னை சுப்பர் கிங்ஸுக்கு வழக்கம்போல் தனது தமிழ் ரூவீற்களால் தெம்பூட்ட முனைகின்றார் ஹர்பஜன் சிங்.

கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற கொல்கத்தா அணியுடனான ஆட்டத்தில் சென்னை அணி தோல்வியடைந்தது. இதையடுத்து அந்த அணிக்கு எதிராகக் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதன் பின்னர் 'இ(எ)துவும் கடந்து போகும். என்னுடைய தோல்வியை ஒரு கூட்டமே கொண்டாடுகின்றது. ஆனால் என்னுடைய வெற்றியை ஒரு இனமே கொண்டாடும் என்பதை மறக்க வேண்டாம். மீண்டும் வெற்றிமுகம் காணும் போது அடிக்கும்அடி, சம்மட்டி அடியாக இருக்கும்' என்று தெரிவித்துள்ளார் ஹர்பஜன். ஐ.பி.எல் தொடரில் சென்னை அணிக்காக ஒப்பந்தமாகியிருந்த ஹர்பஜன்சிங் தொடர் ஆரம்பமாகும் முன்னரே தொடரில் இருந்து விலகினார். இதையடுத்து 'ஆபத்தில் ஓடிட்டு இப்பவந்து கதையா?' என்றும் விமர்சிக்கின்றனர் சென்னையின் ஆதரவாளர்கள். தேவையா பஜ்ஜி இது?

# என்றும் நண்பர்களே!

கால்பந்தாட்ட உலகின் ஜாம்பவானான கிறிஸ்ரியானோ ரொனால்டோ, ரியல் மட்ரிட் கழகத்தில் இருந்து விலகி, இத்தாலியின் யுவன்டஸ் கழகத்துடன் ஒப்பந்தமாகியமைக்கு ரியல் மட்ரிட் கழகத்தின் தலைவர் ராமோஸுடனான மோதல்தான் காரணம் என்று சொல்லப்பட்ட நிலையில், அந்தத் தகவல்கள் பொய்யானவை என்று இருவரும் நிரூபித்துள்ளனர்.

ஐரோப்பிய கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான நட்பு ரீதியிலான ஆட்டமொன்றில் ரொனால்டோ தலைமையிலான போர்த்துக்கலும், ராமோஸ் தலைமையிலான ஸ்பெய்னும் அண்மையில் மோதின. கோல்கள் எதுவும் பதியப்படாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

ஆட்டத்தின் முடிவில் ரொனால்டோவின் ஓய்வறைக்குச் சென்ற ராமோஸ் அங்கு ரொனால்டோவையும் போர்த்துக்கலின் மற்றொரு வீரரான பெபியையும் சந்தித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் 'நீண்ட நாள்களுக்குப் பின்னர் நண்பர்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி' என்று தனது சமூக வலைத்தளத்திலும் பகிர்ந்துள்ளாராம். இருவரும் ஒரு காலத்தின் மிரட்டல் கூட்டணியல்லவா?.




# சாதனை வீரர் மட்டுமே; தமிழனல்ல!

முத்தையா முரளிதரனது வாழ்க்கை விஜய் சேதுபதி நடிப்பில் திரைப்படமாகப் போகின்றது. இதில் தவறேதும் இல்லை. கிரிக்கட் உள்ள மட்டும் பேசப்படும்படியான சாதனைகளுக்கு சொந்தமான வீரன் ஒருவனது வாழ்க்கை திரைப்படமாவது முக்கியம். அநேகருக்கு முன்னுதா ரணமாகவும் இருக்கும்.

அதிலும் குறிப்பாக, பல சோதனைகளை கடந்து வெற்றிநடைபோட்ட முரளிதரன் போன்ற வீரர்களது வாழ்க்கையைப் பற்றிய திரைப்படம் இன்னமும் உந்துசக்தியாக இருக்கும். முரளிதரன் வேடத்தில் விஜய் சேதுபதி நடிப்பதிலும் எந்த முரண்பாடுகளும் இல்லை, இருக்கவும் கூடாது. விஜய் சேதுபதி நடிகர். அது அவரது தொழில். தவிரவும் இப்போதுள்ள எடையைப் பாதியாகக் குறைப்பாராக இருந்தால் கிட்டத்தட்ட முரளிதரன் போன்ற உருவ அமைப்பும் விஜய் சேதுபதிக்கு இருக்கும்.

ஆனால் திரைப்படத்தின் எந்தக் கட்டத்திலும் முரளிதரன் ஒரு தமிழன் என்கிற மாதிரியான உணர்வு பூர்வமான காட்சிகளோ, இலங்கை அணியில் கோலோச்சிய தமிழன் போன்ற செருகல்களோ வந்துவிடாதபடி படக்குழு கவனமாக இருக்க வேண்டும். காரணம், தனது வாழ்க்கையின் எந்தக் காலகட்டத்திலும் தன்னைத் தமிழனாக முரளிதரன் உணர்ந்ததும் இல்லை, இலங்கையில் தமிழனாகப் பிறந்துவிட்ட எந்தத் தமிழனும் அனுபவித்த, அனுபவித்துக்கொண்டிருக்கிற பேரிடரையோ, இன ரீதியான ஒதுக்கலையோ , ஏற்றத்தாழ்வுகளையோ முரளிதரன் சந்தித்ததும் கிடையாது. அவரது கிரிக்கட் வாழ்வில் வந்த பிரச்சினைகூட அவரது பந்து வீசும் பாணியினால் வந்ததே தவிர, அவரது இன பின்னணியினால் வந்தது கிடையாது. ஒரு தமிழ் குடும்பத்தில் பிறந்து, கொஞ்சம் தமிழ் பேசத் தெரிந்த, ஆனால் முழுக்க முழுக்க சிங்களவரா கவே வாழ்ந்தவர் முரளிதரன். ஒரு கட்டத்தில் இலங்கையில் தமிழர்களுக்கு பிரச்சினையே கிடையாது. விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் நியாயமே இல்லை என்று பேசியவர். இன்றுவரை அதே நிலைப்பாட்டில் உள்ளவர். ஆக, முரளிதரனை வெறுமனே ஒரு சாதனை வீரனாக காட்டி திரைப்படமெடுத்தலே படக்குழுவுக்கும் விஜய் சேதுபதிக்கும் சாலச்சிறந்த முடிவாக இருக்கும். உணர்ச்சி அரசியல் செய்து படத்தை ஓடவைக்கலாம் என்ற நோக்கில் " தமிழன்" என்ற லேபிளுக்குள் முரளியைக் கொண்டுவந்து திரைப்படமெடுத்தால் படமும் விஜய் சேதுபதியும் முட்டுச் சந்தி முழுதும் அடிவாங்குவார்கள் என்பது நிச்சயம்.

# கரு

. பயமாக இருக்கிறது ...!
இவ்விடம் இருட்டாக உள்ளது
அடைபட்ட சிறைக்கைதி போல்
உறங்கிக்கொண்டிருக்கிறேன் ஆனால்
கவலையில்லை
என்னுடைய வேலைகளை எனக்காக
என்னொருவர் செய்துகொண்டிருக்கிறார்
அவரை நான் பார்த்ததில்லை
சுவாசிக்க மறந்துவிட்டால் உயிரில்லை என்பார்கள்
எனக்கந்த எண்ணமில்லை ஏனெனில்
எனக்காகவும் அவரே சுவாசிக்கின்றார்
தன் உதிரத்தை என்னுடன்
உணவாகப் பகிர்கிறார்
அவரைக் காணவே இங்கிருந்து
விடுதலை பெற ஆசைப்படுகிறேன்
காணும் கணத்தில் வார்த்தைகளின்றி
கண்ணீரால் நன்றி கூற அக்
கண்ணீரைத் துடைத்து
...னிருக்கின்றேன் என
தைரியம் கூறுவார் இந்த
தெய்வத்துக்கு நான் சிறிது நேரத்தில்
கொடுக்க இருக்கும் பரிசு
வேதனை தரும் பிரசவ வலி என்னால்
உனக்கு தைரியம் கூற முடியவில்லை
என்னை மன்னித்துவிடு இவ் வலியை
எவ்வாறு தாங்கப் போகிறாய் அம்மா?
அதை நினைத்து எனக்கு
பயமாக இருக்கிறது...!

*என்.கே.வி*



# அவனின்றி அணுவும் அசைந்திடாது

அலைகள் ஓய்வதுமில்லை
ஆதவன் மறைவதுமில்லை
நிலவு சுடுவதுமில்லை
நீல வானைத் தொட்டவருமில்லை
காற்றுக்கு வேலி கட்டினாருமில்லை
மூச்சைப் பிடித்து அசைந்தாருமில்லை
இறப்பினை நிறுத்தி வைத்தாருமில்லை
இறந்தவர் மீண்டும் வாழ்ந்ததுமில்லை

கறந்தபால் மடிக்கு ஏறியதில்லை
பிறந்த பின் வயிற்றில் வாழ்ந்தாருமில்லை
கடலுக்கு மூடி போட்டாருமில்லை
வானுக்கு கூரை அமைத்தாருமில்லை
எறும்பு போல் உழைப்போருமில்லை
எழிலுக்கு நிரந்தரமுமில்லை
எரிமலையை அடக்கிடவும் முடியாது
சூறாவளியைத் தடுத்திடவும் முடியாது
தேனை எடுப்பது போல் தேனுமில்லை
தேவன் கொடுக்காதது வரமுமில்லை
நீரைப் பாலாக்கவும் முடியாது
நீரை உருவாக்கவும் முடியாது
நீரை இல்லாமல் செய்யவும் முடியாது
நீரின்றி வாழவும் முடியாது
மனிதரால் யாவுமே முடிந்திடாது
அவனின்றி அணுவும் அசைந்திடாது

***அன்ரனி பீற்றர்***
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்

